புவனேச்வரீ பூஜாகல்பம்

(ஸ்ரீசக்ரதேவீ, விளக்கவுரைகள், நாமாவளிகள், துதிகள்)

வெளியீடு

சிவாசார்யர் அறக்கட்டளை (பதிவு)

207/101 தம்பு செட்டி தெரு, சென்னை-600 001.

13-07-2016 அன்று சென்னை, தர்மபிரகாஷ் மண்டபத்தில் நடைபெற்ற சைவாகம கலாசார தீபிகோத்ஸவத்தில் வெளியிடப்பட்டது.



பாணிக்ரஹே பர்வதராஜ புத்ரியா:
பாதாம்புஜம் பாணி ஸரோருஹாப்யாம்
அச்மான மாரோபயதஸ் ஸ்மராரேர்
மந்தஸ்மிதம் மங்களம் ஆதனோது.

உ

ஸ்ரீ குருவருள் துணை

ஓம் நம ஸ்ரீசிவாயை

புவனேச்வரீ பூஜாகல்பம்

[ஸ்ரீசக்ரதேவீ, விளக்கவுரைகள், நாமாவளிகள், துதிகள்]

தொகுப்பாசிரியர் & பரிசோதகர்

ஆகம ப்ரவீணர். வியாகரண சிரோமணி. சைவாகமவித்வான்.
சைவாகமக்ஞ சூடாமணி. ஆகம அருட்செல்வர். சிவாகம ஸார்வபௌமர்.
வ்யாகரண விசாரதா. ஸம்ஸ்கிருத ஸேவாரத்னம். சிவாகம வாசஸ்பதி.

சிவஸ்ரீ. வி. சோமசேகர சிவாசார்யார், M.A.,

ஆகமஆய்வாளர், முதல்வர், சைவாகம கலாசார வித்யாகேந்திரம்
ஆலோசகர். சிவாசார்யர் அறக்கட்டளை, சென்னை-1.

வெளியீடு

சிவாசார்யர் அறக்கட்டளை (பதிவு)

207/101 தம்புசெட்டி தெரு, சென்னை-1.

சார்பில் 13-07-2016 அன்று

சென்னை, தர்மபிரகாஷ் மண்டபத்தில் நடைபெற்ற

சைவாகம கலாசார தீபிகோத்ஸவத்தில் வெளியிடப்பட்டது.

நூல்விவரக் குறிப்பு

நூலின் பெயர்	:	புவனேச்வரீ பூஜாகல்பம்
நூலில் மொழி	:	தமிழ் & ஸம்ஸ்கிருதம்
நூலில் எழுத்து	:	தமிழ் எழுத்து மட்டில்
நூலின் வகை	:	மரபுசார் தொகுப்புநூல்
நூல் அளவு	:	8.5" x 5.5"
நூல் எண்ணிக்கை	:	1000 பிரதிகள்
நூல் பதிப்பு	:	முதற்பதிப்பு
நூலாசிரியர், பரிசோதகர்	:	சிவஸ்ரீ.வி.சோமசேகர சிவாசார்யர்
நூலின் பதிப்புரிமை	:	சிவஸ்ரீ.வி.சோமசேகர சிவாசார்யர்
நூலின் பக்கம்	:	200 பக்கங்கள்
வெளியிட்ட நாள்	:	13 ஜூலை 2016
அச்சிட்டோர்	:	ஓம் டிஜி ஒர்க்ஸ், சென்னை–94.
கணிணி அச்சுபதிவு	:	அ. கணேஷ்
வெளியீடு	:	மேதாசக்ரிணீ வெளியீடு
வெளியீட்டு நூல்வரிசை	:	24
நிதியளித்த நிறுவனம்	:	சிவாச்சார்யர் அறக்கட்டளை
வெளியிடுவோர்	:	சிவாச்சார்யர் அறக்கட்டளை (பதிவு) 207/101 தம்பு செட்டி தெரு, சென்னை–600 001.
கிடைக்குமிடம்	:	சிவாச்சார்யர் அறக்கட்டளை (பதிவு)
விலை	:	ரூ.300/–

இறைவணக்கம்

கணபதி துதி

ஐந்துகரத்தனை ஆனைமுகத்தனை
இந்தின் இளம்பிறைபோலும் எயிற்றனை
நந்திமகன்தனை ஞானக்கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

தேவீ துதி

சுரும்பு முரல் கடிமலர் பூங்கழல் போற்றி
உத்தரிய தொடித்தோள் போற்றி
கரும்பு ருவச் சிலைபோற்றி - கவுனியர்க்குப்
பால்சுரந்த கலசம் போற்றி,
இரும்பு மனம் குழைத்தென்னை எடுத்தாண்ட
அங்கயற்கண் எம்பிராட்டி
அரும்பு மிளநகை போற்றி ஆரண நூபுரம்
சிலம்பும் அடிகள் போற்றி போற்றி.

****

துணையும் தொழும்தெய்வமும் பெற்ற தாயும் சுருதிகளின்
பனையும் கொழுந்தும் பதிகொண்டவேரும் பணிமலர்ப்பூங்
கணையும் கருப்புச்சிலையுமென் பாசாங்குசமுங் கையிற்
அணையும் திரிபுரசுந்தரி யாவது அறிந்தனமே.

◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇

பூத்தவளே புவனம் பதிநான்கையும் பூத்தவண்ணம்
காத்தவளே பின்கறந்தவளே கரைகண்டனுக்கு
மூத்தவளே என்றும் மூவாமுகுந்தர்கு இளயவளே
மாத்தவளே உன்னையன்றி மற்றோர்தெய்வம்வந்திப்பதே

◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇

தனந்தரும் கல்விதரும் ஒருநாளும் தளர்வறியா
மனம்தரும் தெய்வவடிவம் தரும் நெஞ்சில்வஞ்சமில்லா
இனம்தரும் நல்லனயெல்லாம்தரு மன்பர் என்பவர்க்கே
கணம்தரும் பூங்குழலாள் அபிராமி கடைக்கண்களே

◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇

எந்தாயு மெனக்கருள் தந்தையும் நீ
சிந்தா குலமானவை தீர்த்தெனையாள்
கந்தா கதிர்வே லவனே உமையாள்
மைந்தா குமரா மறைநா யகனே

◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇

உ
குருவருள் துணை

முகவுரை

அமரீ கபரீ பார ப்ரமரீ முகரீ க்ருதம்.
தூரீ கரோது துரிதம் கௌரீ சரணபங்கஜம்.

உலகில் ஆன்மநலம்தருகிற நம்தேசஅறுவகைசமயத்திதுள் சிறந்துவிளங்குவது சாக்தம். சக்தியை பரதேவதையாக விளக்குவதால் இது சாக்தம் எனப்படுகிறது. சக்தி என்பது எங்கும் எதிலும் நீக்கமர நிறைந்திருப்பதாகும். சக்தியே யாதுமாகி விளங்குகிறது. அந்தசக்தி சிவபெருமானின்சக்தியே. ஒரேசக்தி பலபெயர் உருவந் தாங்கிநின்று பலவகையில் பயன்தருகிறது. உலகே சக்திமயமானது. ஜகத் சக்திமயம் வித்யாத் சக்திம் ப்ரேரயிதா சிவ: என்கிறது சிவாகமம். சக்தியானது விருப்பம், ஞானம், செயல் என்ற மூன்றுநிலைகளில் விளங்கும். சக்தியின் அருளின்றி ஞானமும் வெற்றியும் ஸித்திகளும் கைகூடாது. அவளே ஆன்மஞானத்தை வெளிப்படுத்தி முக்திநலம் தருபவள். சாக்ததந்த்ரங்கள் பராசக்தியை பலபெயர்களில் பலஉருவங்களில் வித்யாசக்திகள்க விளக்குகின்றன. அவற்றுள் தசமஹாவித்யா சக்திகளுள் ஐந்தாவதாக புவனேச்வரி போற்றப்படுகிறாள்.

சைவாலயங்களில் சிவசக்தியாகிய புவனேச்வரியே தனித்த சந்நதிகளில் இருந்து அருள்கிறாள். இவள் ஞானமேவடிவமான காளியினுடைய சாந்த ரூபமான சிவந்தநிறத்தவளான சுந்தரி எனப்படுபவள். எனவே புவனேச்வரியை சாக்த்தந்த்ரங்கள் பராசக்தி எனவும், ஆத்யா அதாவது அனைத்திற்கும் மூத்தவள் என்றும் கூறுகின்றன.

புவனேச்வரியே மஹாவித்யா. ஸ்ரீசக்ரமேருவில் இவள் பூசிக்கப்படுபவள். இவளது வழிபாட்டுநெறி மிகத்தொன்மையானது. தேவர்கள் முதல் ரிஷிகள் ஞானியர்கள் எனபலரும் வழிபட்டு பேறுபெற்றுள்ளனர். பல்லாயிரமாண்டுகளுக்கு முன்னரே திருமூலநாயனாரால் தமது சைவாகமஸாரமாய் விளங்குகிற திருமந்திரத்தில் புவனேச்வரியினுடைய மஹிமை, மந்திரம், யந்திரம், வழிபாட்டுமுறை, பயன்கள். இவைகளைப்பற்றிய தமிழ்ப்பாடல்கள் இடம்பெற்றுள்ளன. சாக்தஉபாஸகர்களால் வழிபடப்பட்டுவந்துள்ள இவளுடைய வழிபாட்டுமுறை பலநூல்களில் விரிவாக விளக்கப்படுகின்றன.

பொதுமக்கள் உரியமுறையில் புவனேச்வரியின் வழிபாட்டுமுறையை அறிந்துமேற்கொள்ளவும், அர்ச்சித்தும், துதித்தும்

பயன்பெறத்தக்கவகையில் தமிழ்எழுத்தில் எளியநடையில் இந்நூல் இக்காலத்தின் தேவைக்கேற்ப தொகுத்தளிக்கப்பட்டுள்ளது. வீடுகளில் விரத மற்றும் விழாநாட்களில் புவனேச்வரியை பூசைசெய்யும் வழிமுறையும், அவ்வப்பொழுது இந்நூல் பயன்படுகிறவகையில் அரியபயன்தரும் அர்ச்சனைக்குஏற்ற நாமாவளிகளும், இவளை எப்பொழுதும் துதித்துக்கப்பயன்படும் வகையில் தேவியன்அரியபல தோத்திரங்களும், இதில் இணைக்கப்பட்டுள்ளன. புவேனச்வரியின் தத்துவரூபத்தையும், மஹிமைகளையும், தேவீஉபாஸனையின் விதிமுறைகளையும், பயன்களையும் விளக்கும் சிறுகட்டுரைகள், இந்நூலில் இடம்பெற்றுள்ளது. ஆதலால் இந்நூல் தேவீவழிபாட்டில் ஆர்வம் உள்ள ஆஸ்திகப்பெருமக்களுக்கு உதவுகிற இல்லந்தோரும் இருக்கவேண்டிய பயன்தரும்நூலாக விளங்கும்.

சென்னையில் ஸ்ரீகாளிகாம்பாள் ஆலயத்தில் அன்னை ஆதிபராசக்தியே புவனேச்வரியாக காளிகாம்பாளாக விளங்குகிறாள். தேவீவழிபாட்டை ஊக்குவிக்கும்வகையில் விழாக்காலங்களில் மெய்யன்பர்களுக்கு அளிக்கும்வகையில் புத்தகம் ஒன்று கேட்கப்பட்டதனால், இச்சிறுநூல் எம்மால் தொகுக்கப்பட்டு, புவனேச்வரி தொடர்பான தேவீபூசைக்கு ஏற்றவைகளைத் தொகுத்துக்கூறுவதால் இந்நூல் புவனேச்வரி பூஜாகல்பம் எனப் பெயர்பெருகிறது. வீட்டில் திருவிளக்கிலோ, யந்திரத்திலோ, சிலையிலோ தேவியை வழிபாடுசெய்திட இந்நூல் உதவும் என்பதில் ஐயமில்லை. எவ்வுருவில் எவரை வழிபடினும் அது சிவபுண்ணியச்செயலாகி சிவத்தையே சென்றடையும்.

இதனை சென்னை ஸ்ரீகாளிகாம்பாள் கோயில் ஆசாரியரும், சிவாசார்யர்அறக்கட்டளையின் நிருவனருமான, சாக்தாகமச் செம்மல். தி.சா.காளிதாஸ் சிவாசாரியர் அவர்கள் தமதுபொருட்செலவில் புத்தமாக வெளியிடுவது மிகவும் பாராட்டத்தக்கது. அவருக்கும் அவரது குடும்பத்தாருக்கும் தேவியின் திருவருள் நலம்பயக்கவும், வாசகர்கள் பயன்பெறவும் உளமார வாழ்த்துகிறேன். எமதுகட்டுரைகளையும் தொகுத்தளித்தவைகளையும் கணிணியில் அச்சிட்டுப்புத்தகமாகத்தந்த திருவாளர். அ.கணேஷ் அவர்களுக்கு எனது உளமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன். எனது குருநாதரின் அருளாசியின் துணையால் எமதுசிற்றறிவுக்கெட்டிய சிலசெய்திகளையே இங்கே தொகுத்தளித்துள்ளோம். வாசகஅறிஞர்கள் இதில் காணும் குற்றங்களை விடுத்து குணங்களை மட்டுமே கொள்ளுமாறு பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன். எனது இஷ்டதெய்வமான ஸ்ரீஹரிஹரபுத்ர மஹாசாஸ்தாவின் பொற்பாதம்பணிந்து எல்லோரும் இன்புற்றுஇருக்க ப்ரார்த்தித்து வாசகர்களை வாழ்த்திமகிழ்கிறேன்.

இப்படிக்கு,

சிவஸ்ரீ. வி.சோமசேகரசிவாசார்யர்

சென்னை ஸ்ரீ காளிகாம்பாள் மூலவர்

உ

ஸ்ரீ காளிகாம்பாள் துணை

நிறுவனர்

சிவஸ்ரீ. Dr. தி.ஷ. சாம்பமூர்த்தி சிவாசார்யார் சரிதம்

தருமமிகு. சென்னையின் திருமழிசை திருத்தலத்தில் கௌசிககோத்திரத்தில் ஆதிசைவகுலத்திலே சிவஸ்ரீ. ஷண்முக குருக்களுக்கும், ஸ்ரீமதி. தாக்ஷயணி அம்மையாருக்கும், 3வது திருமகனாக அவதரித்தவர். சென்னை பூக்கடை சிவஸ்ரீ. சபாரத்ன சிவாசார்யாரிடம் சிவதீக்ஷை பெற்றவர். குருவருளாலும், திருவருளாலும் சென்னை கடற்கரைநகரில் ஸ்ரீ காளிகாம்பாள் ஆலயத்தில் தமது சகோதரர்களுடன் சிறந்த அர்ச்சகராய் வெகுகாலம் தொண்டாற்றியவர். மேற்படி ஆலயத்தில் தமது பெருமுயற்சியால் பலசிறப்புமிக்க திருப்பணிகளைச்செய்து, ஆலயவளர்ச்சிப் பணிகளில் தம்மை முழுவதும் இவ்வாலயத்திற்கு அர்ப்பணித்து பலமுறை கும்பாபிஷேகங்களைச் செய்வித்தவர். தனது ஆத்மார்த்த சிவபூசையை இடையறாதுசெய்து, சிவநெறியில் வாழ்ந்தவர். தமது வாழ்க்கைத் துணைவியாராக ஸ்ரீமதி. புவனேச்வரி அம்மையாரை மணந்து மகன்களோடும், மகள்களோடும் மனநிறைவுடன் வாழ்ந்தவர்.

தென்னிந்திய அர்ச்சகர் சங்கத்தலைவராக பலஆண்டுகள் இருந்து அர்ச்சக சமூகத்தின் மேன்மைக்குத் தொண்டாற்றியவர். தமது ஆலயத்திலும், உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் பல இடங்களில் பலவகை யாகங்களையும், சஹஸ்ரசண்டீ யாகங்களையும் நடத்தியவர். ஆலயசேவார்த்திகளுக்கும், அயல்நாட்டின் ஆஸ்தீகர்களுக்கும் இந்துசமய சுபாஷிதங்களையும், சித்தாந்த கருத்துக்களையும் போதித்த சைவசமயபோதகர். ஆலயசேவார்த்திகளின் மனத்துயரம் நீங்கிட அம்பாளிடம் கசிந்துருகி அர்ச்சனைசெய்து, தேவியின் திருநாம உச்சரிப்பால் நாதகலைகளை ஆலயமெங்கும் பரவச்செய்த தேவீஉபாஸகர். சேவார்த்திகளுக்கு 'அம்பாள் ஆசீர்வாதம்" எனக்கூறி குங்குமம்அளித்து, மங்களம்பெறச் செய்த மஹிமை பொருந்தியவர். கோயிலுக்குவரும் பக்தர்களில் ஏழை, பணக்காரர், படித்தவர், பாமரர், நல்லவர், தீயவர் என்ற வேறுபாடுஎதுவும் பாராமல், சமநோக்கில் தாயன்புகாட்டி உதவி, ஆசிநல்கிய ஆசான். பல்லோராலும் சிவாசார்யகுலபூஷணம் என்றும், சக்திகருணாகர சக்ரவர்த்தி என்றும் விருதுவழங்கிப் போற்றப்பட்டவர். பக்தர்களுக்கு தன் தீபாராதனைத்தட்டிலிருந்து குங்குமத்தையும், எளியோருக்கு பரிவுடன் பணத்தையும் எடுத்துத்தந்திடும் தயாளகுணத்தவர். முப்பதுக்கும்மேற்பட்ட வெளிநாடுகளில், பலகோயில்களில், ஆசியுரையாற்றியும், கும்பாபிஷேகம், யாகம் இவற்றைசெய்தும், செய்வித்தும், இந்துசமய வளர்ச்சிக்குத் தொண்டாற்றியவர்.

அமெரிக்காவிலுள்ள ஐக்கியநாடுகள்சபையில், இந்துசமய சிறப்பைப்பற்றி, சொற்பொழி ஆற்றியவர். தனது நான்குகுமாரர்களையும், ஆலய மற்றும் சமயப்பணிகளில் அமர்த்தியும், அறக்கட்டளைகளை ஏற்படுத்தி சைவாகம கலாசாரவளர்ச்சிக்கு அடித்தளம் அமைத்தும் வழிகாட்டியவர். தேசபொதுநலனுக்காக அச்வமேதயாகம், ஸஹஸ்ரசண்டீயாகம் முதலிய அரிய பல பெருவேள்விகளைச் செய்து உலகஅமைதிக்கு துணைநின்று கௌரவமுனைவர் பட்டம் பெற்ற ஆகமஞானகலாநிதி ஆவார். இன்றும் சிவபுரத்துச் சிவனடிநிழலில் சிவபோகம் அனுபவித்தவாறு, குமாரர்கள்மூலமாக அறக்கட்டளைகளை ஆசியளித்து இயக்கிவருகிறார். இவரது சைவசமய சேவையைஎண்ணிப் போற்றிடும் ஆஸ்தீகர்கள் அம்பாள் ஆசீர்வாதம் பெற்றவர்களாய் இன்புற்று வாழ்கின்றனர். வாழ்க சீர்அடியார் எல்லாம்.

சுபம்.

உ

ஸ்ரீ காளிகாம்பாள் துணை

பதிப்புரை

ஸர்வமங்கள மாங்கல்யே சிவே ஸர்வார்த்த ஸாதகே.
சரண்யே த்ர்யம்பகே கௌரி நாராயணி நமோஸ்துதே.

ஸ்ரீமாதா காளிகாம்பாளின் கருணாகடாக்ஷத்தால், எங்கள் தந்தையின் அருளாசியுடன் ஆண்டுதோறும், சாரதா நவராத்திரியில் நம்கோயிலில் ஸ்ரீசக்ரபூஜையுடன்கூடிய சதசண்டீயாகம் பத்துநாட்களில் தொடர்ந்து நடைபெற்று வருவது யாவரும் அறிந்ததே. அச்சமயம் பக்தர்களுக்கு நன்நெறிஅறிவித்து உதவிவருகிறோம். எங்களது அறக்கட்டளையில் மாதந்தோறும் ஒருசிறப்புச் சொற்பொழிவு நிகழ்ச்சியும், வருடத்தில் ஒரு சைவாகமகலாசார தீபிகோத்ஸவமும், அதில் நூல்வெளியீட்டுவிழாபலவும் நடத்தி, உங்கள் ஆதரவைப் பெற்றவர்களாய் மகிழ்ச்சியடைகிறோம்.

எங்களது குருவாகவும், அறக்கட்டளைக்கு ஆலோசகராகவும், இருந்து பலநூல்களைத் தொகுத்துஅளித்து வெளியிட்டுவருகிற வித்வான். சிவஸ்ரீ. வி. சோமசேகர சிவாசார்யார் அவர்களிடம் புவனேச்வரியின் பூஜாவிதிமுறைப்ற்றி விளக்கம்கேட்டுப் பெற்றோம். இதில்கூறியுள்ள சிறப்புச்செய்தியறிந்து, இதனை பொதுமக்கள் யாவரும் அறியவேண்டும் என்கிற அவாவினால் இதனை ஒருநூலாக அச்சிட்டு, புவனேச்வரீ பூஜாகல்பம் என்ற பெயரில் எங்கள் அறக்கட்டளையின் மூலமாக வெளியிடுவதில் பெருமகிழ்ச்சி அடைகிறோம். இந்துமக்கள் யாவரும் இந்நூலை வாங்கிவாசித்து தேவியின் திருவருட்பயன்பெற வேண்டுகிறோம்.

இப்படிக்கு,
சிவஸ்ரீ. T.S. காளிதாஸ் சிவாசார்யார்
நிறுவனர். சிவாசார்யார் அறக்கட்டளை, சென்னை–1.

ஸ்ரீகுருப்யோ நம:

ஆகம ப்ரவீணர், ஸாஹித்ய சிரோமணி

பண்டிதரத்னம் சிவாகம வாசஸ்பதி.

ஆகமப் பேராசிரியர் **சிவஸ்ரீ. V. சந்திரசேகர சிவாசார்யார்**, மயிலாப்பூர்

A.P. திருப்பதி. திருமலை வித்யா கேந்திரத்தின் முன்னாள் சைவாகம ஆசிரியர்.

அருளாசியுரை

"தேவீம் த்ரிலோகஜனநீம் சரணம் ப்ரபத்யே."

யா தேவீ ஸர்வ பூதேஷு சக்தி ரூபேண ஸம்ஸ்திதா.
நமஸ் தஸ்யை நமஸ் தஸ்யை நமஸ் தஸ்யை நமோ நம:

அகிலாண்டகோடி பிரம்மாண்டநாயகியாக ஆதிபராசத்தியாக விளங்குபவளே ஸ்ரீபுவனேச்வரீ. உலகமே சக்திமயமாம். அவளோ சிவனுடைய சக்தியாவாள் என்கிறது சிவாகமம்.

ஜகத் சக்திமயம் வித்யாத் சக்திம் ப்ரேரயிதா சிவ:

சிவசக்தியானவள் 1. சாந்தியதீதை, 2. சாந்தி, 3. வித்யா, 4. பிரதிஷ்டா 5. நிவிருத்தி என்று ஐந்து வகை கலைகளாக விளங்குகிறாள். இவற்றில் 224 புவனங்கள் அடங்கி உள்ளன. அவைகளுக்கு ஒரே பெரியநாயகியாக விளங்குதால், புவனேச்வரீ எனப் பெயர் பெருகிறாள். இவள் எங்கும் நிறைந்தவளாய் பலவகையான பெயர் உருவங்களை உடையவளாய், வெளிப்பட்டநிலையிலும், வெளிப்படாதநிலையிலும் இருவகையாக விளங்குபவள் என்கிறது சாக்த சாஸ்த்திரம்.

வியாபினீ விவிதாகாரா வ்யக்தாவ்யக்த ஸ்வரூபிணீ

என்கிறது லலிதா நாமஸ்தவம். இதனையே அபிராமிபட்டரும் "அருவே உருவே அருவுருவே" என்கிறார் அந்தாதிப் பாடலில். உருவமாய் ஆலயங்களிலும், அருவுருவமாய் ஸ்ரீசக்ரத்திலும் அருவமாய் இயற்கையான அஷ்டமூர்த்திகளிலும், தீபச்சுடரிலும் விளங்குபவள். இவளே உயிர்களுக்கு அறம், பொருள், இன்பம், வீடுபேறு எனப்படுகிற நான்குவகையான விருப்பப் பயன்களையும் தருபவள். நம்மை வினைப்பயன்களை அனுபவிக்கச்செய்பவளும், சக்திநிபாதத்தால் நமது வினைநீக்கி ஞானம்நல்கி அனுக்ரஹம்செய்பவளும் புவனேச்வரியே ஆவாள்.

புருஷார்த்தப்ரதா பூர்ணா போகினீ புவனேச்வரீ என்கிறது லலிதாஸஹஸ்ரநாமஸ்தோத்ரம். இவளை ஆராதித்தால் இம்மைப்பயன் மறுமைப்பயன்களான போகம், மோக்ஷம் ஆகிய இரண்டையும் மனிதகுலத்திற்கு அளிப்பாள் என்கிறது சப்தசதீஸ்தவம்.

ஆராதிதா ஸைவ ந்ருணாம் போகஸ்வர்காபவர்கதா

ஸ்ரீ மாதாவான அன்னையை வழிபடுவதால் மனிதகுலத்திற்கு துயரம் நீங்கும். அத்தகைய உலக அன்னையின் வழிபாட்டுநெறியை எளிய முறையில் விளக்குவதாலும், விரும்பும் பயன்களைத் தரவல்ல தேவியின் திருநாமாவளிகளும், அரியதுதிகளும் இதில் இடம்பெற்றுள்ளதாலும், ஆஸ்தீகமக்களுக்கு இந்நூல் பெரிதும் உதவுவதுடன் என்றும் பயன்தருவதாகும், என்பதில் ஐயமில்லை.

இந்நூலைத் தொகுத்தளித்த வி. சோமசேகரசிவாசார்யரின் இந்தஅரிய சமயத்தொண்டு போற்றுதற்குரியது. இதுபோல் அவர் மேன்மேலும் பலவகை சமுதாய நலப்பணிகளைத் தொடர்ந்து ஆற்றிட ஆசிர்வதிக்கிறோம். இதனை வெளியிடுவோருக்கும், வாசித்துப் பயன்பெறவுள்ள வாசகர்களுக்கும் புவனேச்வரீ தேவியின் திருவருள் கிடைத்திட எல்லாம்வல்ல ஸர்வேச்வரனைப்ப்ரார்த்தித்து வாழ்த்தி மகிழ்கிறோம்.

இப்படிக்கு,
சிவஸ்ரீ. V. சந்திரசேகரசிவாசார்யார், மயிலை.

ஆகம வாரிதி Dr. S. P. சபாரத்தின சிவாசாரியார்
M.A (Tamil); M.A(Sanskrit); M.A(Philosophy); Ph.D
(ஆகம மொழிபெயர்ப்பாளர், கௌவை ஆதீனம், ஹவாய், U.S)
1/1B, கற்பகாம்பாள் நகர், திருமயிலை, சென்னை

உ
திருச்சிற்றம்பலம்

ஆசியுரை

சிவாகம வாசஸ்பதி, சைவாகமக்ஞ சூடாமணி சிவஸ்ரீ வி. சோமசேகர சிவாசாரியார் அவர்கள் சைவாகமங்களிலும் சாக்தாகமங்களிலும் மிகுந்த பாண்டித்தியம் பெற்றவர்; சைவ சம்பந்தமான கிரியைகளையும் சாக்த சம்பந்தமான கிரியைகளையும் விதிமுறை வழுவாமல் சிறப்புற நிகழ்த்த வல்ல தனித்திறம் வாய்ந்தவர். கிரியைகளில் மட்டுமல்லாமல் சிறந்த நூல்களை எழுதுவதிலும் அவர் வல்லவர் என்பதை அவரால் ஏற்கெனவே எழுதப்பட்டுள்ள நூல்கள் பலவும் பறைசாற்றுகின்றன. பன்முகப்பட்ட அவரது திறமையைப் பற்றி சிவாசாரியப் பெருமக்கள் அனைவரும் நன்கு அறிவார்கள்.

ஆறு மாதங்களுக்கு முன் அவர் எழுதிய "ஹோமலக்ஷண சங்கிரஹம்" எனும் நூலை அடுத்து "புவனேசுவரி பூஜாகல்பம்" எனும் நூல் அவரால் எழுதப்பட்டு இப்பொழுது சிவாசாரிய அறக்கட்டளையின் சார்பாக வெளியிடப் படுகிறது.

புவனேசுவரி பூஜாகல்பம் எனும் இந்நூல் மிகவும் விரிவாகவும் தெளிவாகவும் எழுதப்பட்டுள்ளது. இதனில் எழுபத்து மூன்று கட்டுரைகள் அடங்கியுள்ளன. இக்கட்டுரைகள் அனைத்தையும் அறிமுகப் பகுதி, பூஜை விளக்கப் பகுதி, தோத்திரப் பகுதி என மூன்று பகுதிகளில் அடக்கி விடலாம். அறிமுகப் பகுதியில் ஸ்ரீ தேவி உபாசனையின் அவசியத்தைப் பற்றியும், சிவ-சக்தி சாமரஸ்யம் பற்றியும், தசமகா சக்திகளுள் ஐந்தாவதாக விளங்கும் ஸ்ரீ புவனேசுவரியின் மகிமை பற்றியும் நூலாசிரியர் விரிவாக விளக்கியுள்ளார்.

இந்நூலின் மணிப்பகுதியாகத் திகழ்வது, புவனேசுவரி தொடர்பான பூஜை விளக்கமே. ஸ்ரீவித்யா சபர்யா பத்ததியைப் போன்று இப்பகுதி அமைந்துள்ளது. விக்னேசுவர பூஜை முதல் பூஜா சமர்ப்பணம் வரை உள்ள பூஜைக்கிரியைகள் அனைத்தும் இப்பகுதியில் தமிழில் எளிய முறையில் தெளிவுற நூலாசிரியரால் எழுதப் பட்டுள்ளன.

ஹடயோகம் முதலான நான்குவகை யோகங்களுள் மந்திர யோகம் மிகவும் சிறந்தது எனச் சாரதா திலகம் எனும் சாக்த சாத்திரத்தில் கூறப்பட்டுள்ளது. மந்திர ஜபத்துக்குப் பத்து அங்கங்கள் உண்டு - ரிஷி, சந்தஸ், தேவதை, பீஜம், சக்தி, கீலகம், நியாசம், தியானம், ஜபம், புரஸ்சரணம். மந்திர யோகத்தில் ஜபம், புரஸ்சரணம் எனும் இரண்டும் மிகமிக முக்கியமானவை. புவனேசுவரி பூஜைவிளக்கப் பகுதியில் நூலாசிரியர் புரஸ்சரணம் பற்றி விரிவாக எழுதியுள்ளமை, பாராட்டுக்கு உரியது.

மூன்றாவது பகுதியான தோத்திரத் தொகுப்பில் அரியனவும் சிறந்தனவும் ஆன தோத்திரங்கள் பலவற்றை ஆசிரியர் ஒரு நிதிக்குவியலை அளிப்பது போன்று அள்ளிக் கொடுத்துள்ளார். முக்கியமாக, ஸ்ரீ புவனேசுவரி ஏகாக்ஷர த்ரிசதீ என்பதைக் குறிப்பிட வேண்டும். முறைப்படிப் பாராயணம் செய்வோர்க்கு இத்தோத்திரங்கள் மிகவும் சிறந்த பயன்களைத் தரும் என்பதில் ஐயமில்லை.

புவனேசுவரி யந்திர விளக்கமும், புவனேசுவரிக்குரிய ஏழு ஆவரண சக்திகளைப் பற்றிய விளக்கமும் சிறப்பாக அமைந்துள்ளன.

பிரபஞ்சசார தந்திரம், ஞானார்ணவம், திரிபுராமஹாத்மியம், தேவி மகாத்மியம் முதலான நூல்களிலிருந்து பொருத்தமான கருத்துக்களையும் தத்துவ விளக்கங்களையும் நூலாசிரியர் தேர்ந்தெடுத்துக் கொடுத்துள்ளது, இந்நூலுக்கு முக்கியத்துவத்தையும் பெருமையையும் சேர்க்கிறது.

சிவலிங்க வடிவமும் சக்தி வடிவமே என இந்நூலில் கூறப்பட்டுள்ளது. சிவலிங்க வடிவத்தையும் ஸ்ரீசக்ர வடிவத்தையும் இணைத்துக் கூறும் ஸ்ரீலலிதாகமம்(மூலாகமம்) சிவாசாரிய மரபினரைக் குறிப்பிடும் போது

'உபயமார்க ப்ர்வர்த்தகா:' எனவும் 'யந்த்ராராதன தத்பரா:' எனவும் கூறுகிறது. உபய மார்கம் என்பது சைவாகம நெறியையும் சாக்தாகம நெறியையும் குறிக்கும். சிவாசாரிய மரபினர், தேவி வழிபாட்டிலும் சிறந்தவர்களாகத் திகழவேண்டும் என அந்த ஆகமம் வற்புறுத்துகிறது. ஸ்ரீமத் அகோர சிவாசாரியாருக்குத் தீக்ஷா குருவாக விளங்கிய தூர்வாச சிவாசாரியார் இந்த இரண்டு மார்க்கங்களிலும் தலைசிறந்து விளங்கினார். இவர் இயற்றி உள்ள "சௌபாக்கிய சிந்தாமணி" எனும் நூல் இப்பொழுது கிடைத்துள்ளது. இதன் பூர்வ பாகத்தில் ஐம்பத்து நான்கு படலங்களும் உத்தர பாகத்தில் இரண்டு படலங்களும் உள்ளன. இந்நூல் ஸ்ரீசக்ர பூஜாக் கிரமத்தை விரிவாகக் கூறுவதுடன் ஸ்ரீசக்ர வடிவத்தில் ஆலயத்தை அமைக்கும் முறையையும் பிம்ப லக்ஷணங்களையும் விஸ்தாரமாக விளக்குகிறது. ஸ்ரீமத் தூர்வாச சிவாசாரியார் நாமெல்லாம் உய்யும் பொருட்டு மிகச்சிறந்த தோத்திர நூல்களையும் அளித்துள்ளார். அவர் அருளிய ஸ்ரீசம்பு மஹிம்ன ஸ்தோத்திரம், ஸ்ரீசக்தி மஹிம்ன ஸ்தோத்ரம், ஸ்ரீ லலிதா ஸ்தவராஜம் எனப்படும் ஆர்யா த்விசதி எனும் மூன்றையும் அன்பர்கள் அனைவரும் நாள்தோறும் பாராயணம் செய்ய வேண்டும். பதின்மூன்று பகுதிகளாக, நூற்று நாற்பத்தொன்று விருத்தப் பாக்களால் அமைந்துள்ள ஸ்ரீசம்பு மஹிம்ன ஸ்தோத்திரம் என்பதைத் தமிழ் அர்த்தத்துடன் வெளியிடச் சிவாசாரியார் அறக்கட்டளை முன்வரவேண்டும்.

ஆகம பாடசாலைகளில் பயிலும் ஆதிசைவ இளைஞர்கள் இதுபோன்ற நூல்களை அவசியம் பயில வேண்டும். தகுந்த குருமகான் வாயிலாக ஸ்ரீவித்யா மந்த்ரோபதேசம் பெற்றுக்கொண்டு முறைப்படி ஜபம் செய்து தெய்வ ஆற்றல் மிகுந்தவர்களாக அவர்கள் திகழ வேண்டும்.

சிவஸ்ரீ சோமசேகர சிவாசாரியார் இதுபோன்ற பத்ததிகள் பலவற்றை மேலும் எழுதிச் சிறந்த உபயமார்கப் ப்ரவர்த்தகராகத் திகழத் தில்லை நடராஜப் பெருமானின் திருவடிகளைப் போற்றி அமைகிறேன்.

அன்பன்
சபாரத்தினம்

சைவஸித்தாந்த ஆகம ஸாகரம்,
சிவாகம ஞானபாநு, சிவாகம கல்பத்ருமம்,
சிவாகம ரத்னாகரம், சிவாகம திருத்தொண்டர்,
மந்த்ரஸேவாமணி, சிவாகமவாசஸ்பதி
சாளுவ. **K. ராஜப்பா சிவாச்சார்யார்**
ஸ்தானீகர் ஸ்ரீ ஏகாம்பரநாதர் தேவஸ்தானம், ஸ்ரீ கைலாஸநாதர் தேவஸ்தானம்
121-45, ஏகாம்பரநாதர் சன்னதி தெரு, காஞ்சீபுரம். 631502. போன்:944525747

உ

ஆசியுரை

ஸர்வஸித்திப்ரதே தேவி புக்திமுக்தி ப்ரதே சுபே.
புவனேச்வரீ மஹாகாளி மநோபீஷ்ட ப்ரதாயிநீ.

எல்லாம்வல்ல ஸ்ரீகாளிகாம்பிகையினுடைய தனிப்பெரும் கருணையை தனதாக்கிக்கொண்ட சிவஸ்ரீ. V. ஸோமசேகரசிவாசார்யார் அவர்கள் சிவ உலகிற்கு செய்துகொண்டிருக்கும் மஹத்தான ஸேவைகளின் ஒர்அங்கமாக இந்த புவனேச்வரீ பூஜாகல்பம் எனும் நூல் வெளிவருவது குறித்து மகிழ்ச்சியுற்றோம். இந்நூல் மற்ற ஸாமான்யகல்பபுத்தகங்களைப்போல் பூஜா விஷயங்களைச்சொல்லுவதோடு மட்டுமல்லாது, பராசக்தியின் ஸம்பூர்ணஸ்வரூபத்தை எளியோரும் புத்திபூர்வமாய் அறிந்துகொள்ளும் விதமாக நூலின் அறிமுகத்தில் ஸ்ரீதேவீஉபாஸனா விளக்கத்தை தெளிவாக அர்த்தத்துடன் கூறியிருப்பது, "தவதத்வம் ந ஜாநாமி கீத்ருசோஸி மஹேச்வரீ" போன்ற ஔபசாரிகச்லோகங்களும் பொய்க்கும் வண்ணமாக விளக்கியிருக்கிறது. அவ்வாறே இந்நூலில் கலியுகமஹாபுருஷர் சிவஸ்ரீ. தி.ஷ.ஸாம்பமூர்த்தி சிவாசார்யாரின் சரிதத்தை குறிப்பட்டது இப்புத்தக கிரீடத்திற்கு வைரமணியை அணிவித்தது போலுள்ளது. மேலும் இப்புத்தகத்தின் அநுபந்தமான அம்பிகையின் ஸ்தோத்ரமஞ்ஜரியானது பக்திமார்கத்தில் தேவியை எளிதாக அறிய வழிவகுக்கிறது. எவரொருவர் இப்புத்தகத்தை முறையாக பயின்று தீக்ஷைபெற்று இப்பூஜாமார்கத்தை அநுஷ்டிக்கிறார்களோ அவர் ஸ்ரீஸ்ரீ அன்னையின் கருணாகடாக்ஷத்திற்கு பாத்ரமாகி ஆசியைப்பெறுவார்கள் என்பதில் ஐயமேதுமில்லை.

பக்தமஹாஜனத்திற்காக மிகுந்த சிரமம்புரிந்து இப்புத்தகத்தினை தொகுத்து, பரிசோதித்த நூலாசிரியர் அவர்களுக்கும், இப்புத்தகம் வெளிவர பொருளுதவி அளித்த சிவஸ்ரீ.தி.சா.காளிதாஸ் சிவாசார்யார் அவர்களுக்கும், அனைத்துமாகி நிற்கின்ற ஸ்ரீகாமாக்ஷ்யம்பா ஸமேத ஸ்ரீமத் ஏகாம்ரேசரின் திருத்தாளினை போற்றி மேன்மேலும் இஹபரஸௌபாக்யங்களை அடைய ஆசிகூறுகிறேன்.

V. ராஜப்பாகுருக்கள் காஞ்சீ.

சிவாகம வாசஸ்பதி

C.E. ஷண்முகசுந்தர குருக்கள்

ஸ்ரீ ஏகாம்ரேஸ்வர தேவஸ்தான ஸ்தல மிராசுதாரர், காஞ்சிபுரம்–2,
77பி, ஏகாம்பரநாதர் சந்நிதி சாலை, காஞ்சிபுரம் 631 502.

உ

வாழ்த்துரை

"உமாலிங்கன சங்ராந்த குச கங்கண முத்ரிதம்.
லிங்கமேகாம்ர நாதஸ்ய ஸைகதம் ஸமுபாஸ்மஹே.

அகண்ட பரிபூரண ஸச்சிதானந்த ஸ்வரூபரான ஸ்ரீகாமாக்ஷீ ஏகாம்ரேஸ்வரரின் திருவருளினால் 13.7.2016 அன்று தீபிகோத்ஸவத்தில் சிவாசார்யர் அறக்கட்டளையின் சார்பாக வெளியிடப்படும் "புவனேஸ்வரி பூஜாகல்பம்" என்னும் நூல் ஆதி சைவகுலம் மற்றும் ஆஸ்திகஅன்பர்களுக்கு ஓர் ஞானாம்ருதமாகும்.

தாக்ஷாயணீதி குடிலேதி குஹாரிணீதி
காத்யாயனீதி கமலேதி ஸரஸ்வதீதி
ஏகா ஸதீ பகவதீ பரமார்த்ததோபி
ஸந்த்ருச்யதே பஹுவிதா நநு நர்த்தகீவ.

என்பதற்கு இணங்க பராசக்தி ஸ்வரூபமான புவனேஸ்வரியின் ப்ரபாவங்களைக் குறிக்கும் வண்ணமாக "புவனேஸ்வரி பூஜாகல்பம் என்னும் நூல், சிவாகம திலகம், வ்யாகரண சிரோமணி, சில்பசாஸ்த்ர விசாரதா, ஜோதிஷ திலகம் முதலான பலவிருதுகளை அலங்கரிக்கும் சோமசேகர சிவாசார்யரால் தொகுத்து வெளியிடப்படுகின்றது. இதில் ஸ்வரூபவர்ணனம், தத்வஸ்வரூபம், ஸ்தவம், நாமாவளி, ஸ்துதி, உபசாரம், பூஜாகல்பம், ஆவரணதேவதார்ச்சனம், ஷட்கர்ம ஹோமவிதி, மந்த்ரரூபம், புவனாபதி சக்கரம் முதலான பல தலைப்பின்கீழ் நூலாசிரியர் விவரணம் செய்துள்ளார். ஆங்காங்கே விளக்கமும் அளித்துள்ளார். அண்ணாரது முயற்சி சைவஉலகிற்கு ஓர் வரப்பிரசாதமாகும். அன்னாரது சிவத்தொண்டு மேன்மேலும் சிறந்துவிளங்க எல்லாம் வல்ல ஸ்ரீ காமாக்ஷீ ஏகாம்ரேஸ்வரரை ப்ரார்த்திக்கின்றேன்.

இங்ஙனம்,
'சிவாகமவாசஸ்பதி C.E. ஷண்முக சுந்தரகுருக்கள். காஞ்சீ

உ

ஜெய் குருதேவ் சிவமயம் ஸ்ரீ ராஜராஜேஸ்வரி ப்ரசன்னா

சிவாகம விசாரதா – சிவாகம பிரவீணா – சிவாகம ஞானத்திலகம்

சிவஸ்ரீ.அவிநாசி.எஸ்.சுந்தரமூர்த்தி சிவாச்சார்யார்

குருத்துவம் — முதல் ஸ்தானிகம்

அருள்மிகு அவிநாசிலிங்கேசுவரர் திருக்கோயில், அவிநாசி

முதல்வர், வேத ஆகம சம்ஸ்க்ருத மஹா பாடசாலை, ஸ்ரீ ஸ்ரீ குருகுலம்

வேத விஞ்ஞான மஹா வித்யா பீடம் - THE ART OF LIVING INTERNATIONAL CENTRE,

SRI SRI GURUKULAM, 21st KM, KANAKAPURA ROAD, UDAYAPURA, BENGALURU – 560 082

Contact: 080 32927478, 9008499833, E-Mail: srisrigurukulinfo@gmail.com/ assmsivam@yahoo.co.in

Ref. No. VASMP/SSG/PO/311/06-16 உ Date: 22.06.2016

ஓம்

ஸ்ரீ புவனேஷ்வரி பூஜா கல்பம்

அணிந்துரை

वालरविद्युति मिन्दु किरीटां तुङ्गकुचां नयनत्रययुक्ताम्।

स्मेरमुखीं वरदाङ्कुशपाशाभीतिकरां प्रभजे भुवनेशीम्॥

அகிலாண்ட கோடி பிரம்ஹாண்ட நாயகியாக விளங்கும் மாதா ஸ்ரீ புவனேஷ்வரி, என்ற ரூபத்தில் புவனங்களை காக்கும் தேவியாக பக்தர்களை ரக்ஷித்து வருவதை நாம் அறிவோம்.

தசமஹாவித்யைகளில், புவனேஷ்வரி அம்பிகையை உபாசித்து வருபவர்களுக்கு சகல நலன்களும், புவனங்களை காக்கும் சக்தியும், ராஜபதவியும், தேவி கடாக்ஷமும், கிடைக்கும் என "ருத்ரயாமள தந்திரம்" கூறுகிறது.

சிறப்புமிக்க ஸ்ரீ புவனேஷ்வரி அம்பிகையின் சிறப்பு வழிபாடு குறித்தும், பூஜா பலன்கள் மற்றும் பூஜை முறைகள்,ஸ்தோத்திரங்கள் முதலியவற்றை, சாக்த தந்திர நூல்கள், வேத சாஸ்திரங்கள், ஸ்ரீசக்ரயஜனம் பல்வேறு முனிகள், ரிஷிகள் ஆராதனை செய்த சிறப்புகள் குறித்தும் விளக்கி தமிழில் அறிந்து கொள்ளும் வகையில் எளிமையாகவும்"*புவனேஷ்வரி பூஜா கல்பம்*"என்ற புனிதமான நூலை, மதிப்பிற்க்குரிய சைவாகம வித்வான், வ்யாகரண விசாரதா, சிவாகம வாசஸ்பதி போன்ற பலவிருதுகளை பெற்றுள்ள, சென்னை, சைவாகம கலாசார கேந்திரம் முதல்வர்,டாக்டர். *சிவஸ்ரீ. வீ.சோமசேகர சிவாச்சார்யார்* அவர்கள், சைவாகம பிரசார அபிவிருத்தியின் பொருட்டு சிவாச்சார்யார் அறக்கட்டளை மூலமாக, சென்னை சைவாகம காலாசார தீபிகோத்சவத்தில் "புவனேஷ்வரி பூஜா கல்பம்" வெளியிடுவது குறித்து மிகுந்த மகிழ்ச்சியடைகிறோம்.

கர்நாடக மாநிலத்தில் பல சக்தி பீடங்கள் உள்ளன. தேவீ உபாசனை செய்பவர்கள் முக்கியமாக ஸ்ரீ புவனேஷ்வரி அம்பாள் விரதம் அனுஷ்டித்து வருகின்றனர். ஸ்ரீ புவனேஷ்வரி அம்பாள் கர்நாடக மாநிலத்தையும், ஸ்ரீ ஸ்ரீ குருகுலத்தையும் காத்து அருள்பாலிக்கும் ரக்ஷாசக்தி அன்னையாக விளங்குகிறாள் என்பதும் சிறப்பாகும்.

சிறப்புமிக்க புவனேஷ்வரி பூஜா கல்பத்தில், புவனேஷ்வரி பூஜா விதானம், திருக்கோவில்களில் மற்றும் அவரவர் இல்லத்தில், பூஜைகளை செய்வது குறித்தும் விரிவாக குறிப்பிட்டுள்ளது, போற்றுதற்க்குரியதாகும். ஸ்ரீவித்யா உபாசகர்கள் மற்றும் நமது சிவாச்சார்யர்களுக்கும், பாடசாலை மாணவர்களுக்கும் மிகவும் உபயோகமாகும் புனித நூலாக அமைந்துள்ளது.

இந்நூலை படிப்பதன் மூலமாக பல சாக்த தந்திர நூல்களின் தத்துவம், யோகம் சித்தஞானத்தை உணர்ந்து அனுபவம் பெற முடியும். நூலாசிரியரின் சாக்த தந்திர ஞானம், மேத விலாஸம், ஸ்ரீவித்யா பூஜையின் அனுபவம் மகுடமாக பிரகாசிப்பதை எடுத்து காட்டுகிறது.

குருவருளோடும், அன்னை புவனேஷ்வரியின் திருவருளோடும் புத்தக வெளியீட்டு திருப்பணி, சிறக்கவும், ஸ்ரீவித்யா ஞானஜ்யோதியாக உள்ள, நூலாசிரியரின் சங்கல்பம் மென்மேலும் நிறைவேறவும் ஸ்ரீகருணாம்பிகை சமேத அவிநாசி லிங்கேஸ்வர பெருமானை பிரார்த்திக்கிறேன்.

ஸ்ரீவித்யா மஹாவித்யாவின் சிறப்பம்சத்தை, பிரதிபலிக்கும் ரத்தினமான,''*புவனேஷ்வரி பூஜா கல்பம்*'' எனும் புனித நூலுக்கு அணிந்துரை வழங்கும் வாய்ப்பை, எளியேனுக்கு அளித்த நூலாசிரியர் டாக்டர். *சிவஸ்ரீ.வி.சோமசேகர சிவாச்சார்யார்* அவர்களுக்கும், ஹிந்து சனாதன தர்மத்தையும், சைவாகம ஞான தர்மத்தையும், பாதுகாக்கவும் சிறப்புமிக்க சிவாகம அறிஞர்களால் மாதந்தோறும் சிவாகம பிரச்சார சொற்பொழிவு நடத்தியும், சிவாகம வித்வான்களை கௌரவித்து வரும், இந்துசமய,வேத சிவாகம கட்டுரை தொகுப்புகள், புத்தகங்களை வெளியிட்டு,சிவாச்சார்யார்களும்,ஆன்மீக அன்பர்களும் மிகவும் பயன்பெற, ஞான தானம் வழங்கி வரும் *சிவாச்சார்ய அறக்கட்டளையின் ஸ்தாபகர்களான*, நமது சமுதாயம் காக்கவும், சிவாகம சாஸ்திரங்களை மேம்பட செய்வதே, வாழ்நாளின் குறிக்கோளாக வாழ்ந்து, உலகெங்கும் வாழும் மக்களின் மானசீக தெய்வம், *அம்பாள் ஆசீர்வாதம்* வழங்கும் சென்னை ஸ்ரீகாளிகாம்பாள் திருக்கோவிலை, உலகறியச் செய்த பெருமைமிக்க "சக்தி கருணாகரவர்த்தி" *டாக்டர் சிவஸ்ரீ திருமறிசை ஷண்முக சாம்பமூர்த்தி சிவாச்சார்யாரின்* புதல்வர்களான மதிப்பிற்குரிய *சிவஸ்ரீ.ஸ்வாமி சதாசிவோம், ஸ்ரீ காளிதாச சிவாச்சார்யார், சிவஸ்ரீ.ஷண்முக சிவாச்சார்யார்* அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியையும், நமஸ்காரத்தையும் சமர்ப்பிக்கிறேன்.

சுபம்

துன்முகி வருடம், ஆனி மாதம்
08ஆம் தேதி, புதன்கிழமை

இப்படிக்கு
A. S. சுந்தரமூர்த்தி சிவாச்சார்யர்
(ஏ.எஸ்.சுந்தரமூர்த்தி சிவாச்சார்யர்)
பிரின்சிபால்,
வேத ஆகம சம்ஸ்க்ருத மஹா பாடசாலை,
பெங்களூரு – 560 082.



பிந்து த்ரிகோண வஸுகோண தசாரயுக்மம்
மன்வஸ்ரநாக தல ஸம்யுத ஷோடசாரம்
விருத்தத்ரயஞ்ச தரணீஸதனத்ரயஞ்ச
ஸ்ரீ சக்ரமேத துதிதம் பரதேவதாயா:

முனைவர். வீ. அபிராம சுந்தரம், M.A., Ph.D.,
இணைப் பேராசிரியர் மற்றும் துறைத் தலைவர் முதுகலை
மற்றும் ஆராய்ச்சி ஸம்ஸ்கிருதத்துறை
ராமக்ருஷ்ணா மிஷன் விவேகானந்தா கல்லூரி.

உ

அணிந்துரை

सर्वे द्विजाः शाक्ताः इतिप्रोक्ताः न शैवः न च वैष्णवाः।
सर्वे वेदमातरं गायत्रीं उपासन्ते ऽनुदिनं सदा।।

என்ற சான்றிற்கிணங்க சக்திவழிபாடு அனைவராலும் பின்பற்றப் படுவதாக தொன்றுதொட்டு நடைமுறையில் இருந்து வருகிறது. இத்தகைய வழிபாடுகளை, அவைகளின் வழிமுறையை அறிந்து, அம்முறைதவறாமல் பூஜித்தால் மட்டுமே அப்பூஜைகளுக்கான முழுப்பலனையும் நாம் பெறமுடியும். அப்பூஜைமுறைகளில் தவறுகள் ஏற்படின் அதற்கு உரிய பலனை சாதகனுக்கு அளிக்காமல் போய்விடும் இதையே காளிதாஸர் தனது ரகுவம்ஸ மஹாகாவ்யத்தில் श्रेयः प्रतिब घ्नाति पूज्यपूजाव्यतिक्रमः। என்று உரைக்கிறார். இத்தகைய அன்னை வழிபாட்டின் வழிமுறைகளும் நெறிமுறைகளும் பற்பல ஆகம, தந்த்ர, சாஸ்த்ர நூல்களில் விரிந்து பரந்து காணப்படுகின்றன. அவைகளையெல்லாம் ஒரேஇடத்தில் தெரிவிக்கக் கூடிய நூல்கள் மிக அரிதாக உள்ளன. அதற்குக் காரணம் அப்படிப்பட்ட நூல்களைத் தொகுக்க ஸம்ஸ்க்ருதமொழியில் சிறந்ததேர்ச்சியும் ஆகமதந்ரசாஸ்த்ரங்களில் ஆழ்ந்த, நிறைந்த, தெளிந்த அறிவும் இன்றியமையாததாகிறது.

இந்நிலையில் புவனேச்வரி பூஜா கல்பம் என்கிற இந்த நூலானது சிவஸ்ரீ. வி. சோமசேகர சிவாசார்யார் அவர்களினால் தொகுக்கப்பட்டு வெளியிடப்படுவது பெருமகிழ்ச்சியை அளிக்கிறது. புவனேச்வரீவழிபாட்டின் அனைத்து விதமான வழிமுறைகள் நெறிமுறைகள். செயல்விளக்கங்கள் ஆகியவற்றை பலநூல்களில் இருந்து திரட்டி சீரிய செயன்முறை விளக்கங்களுடன் எளிய தமிழ் மொழியில் ஏற்றமுற எடுத்து உரைத்திருக்கும் பாங்கு ஆகமதந்ர சாஸ்த்திரங்களில் தொகுப்பாசிரியரின் ஆழ்ந்தஅறிவையும், ஸம்ஸ்க்ருதமொழியில் அவரது புலமையையும், எளியதமிழில் அவரது செயன்முறைவிளக்கங்கள் தமிழ்ச் சொல்லாட்சியில் அவரது திறமையையும் பறைசாற்றுவதாக அமைந்துள்ளன.

ஆசிரியர் புவனேச்வரியின் பூஜைமுறைகளை விளக்குவதோடு மட்டுமல்லாமல் அப்பூஜையுடன் தொடர்புள்ள தேவதைகளின் ரூபத்யானங்கள்,

அத்தேவதைகள்குறித்த ஸம்ஸ்க்ருதம் மற்றும் தமிழ்மொழியில் உள்ள தோத்திரங்கள் திரிசதி மற்றும் அஷ்டோத்தர சதநாமாக்கள் ஆகியவைகளையும் இந்நூலில் தொகுத்துள்ளார். மேலும் புவனேசியின் ஷட்கர்ம ஹோமவிதி என்கிற தலைப்பின்கீழ் ஹோமமுறைகளும் தெளிவாக விளக்கப்பட்டுள்ளன. ஒருசில அரிய ஸ்தோத்திரங்களுக்கும், ப்ரயோகங்களுக்கும் ஆசிரியர் எழுதிய தமிழ் உரைகளும், லலிதா நவரத்னமாலை, மீனாக்ஷிஅம்மை பிள்ளைத்தமிழ், புவனாபதிசக்ர திருமந்திரம், ஆகிய தலைப்புகள் ஆசிரியரின் தமிழ்மொழிப் புலமைக்கும் தமிழ்மொழிபால் அவருக்குள்ள ஈடுபாட்டையும் தெரிவிப்பதாய் அமைந்துள்ளது.

இந்நூல் அன்னைவழிபாட்டில் ஆர்வமுள்ள அனைத்து ஆன்மீக அன்பர்களுக்கும் விளக்கக் கையேடாக அமைந்துள்ளது என்பதில் மாற்றுக் கருத்து ஏதும் இருக்கமுடியாது. இந்நூலானது காளிகாம்பாள் ஆலய அர்ச்சகரும் சிவசார்யகுலபூஷணமுமாக விளங்கிய தெய்வத்திரு தி.ஷா. சாம்பமூர்த்தி சிவாசார்யார் அவர்களின் பௌத்ரியும் சிவத்திரு காளிதாஸ சிவஸ்ரீசார்யார் அவர்களின் புத்தரியுமான செல்வி ஹரிணியின் திருமண விழாவை முன்னிட்டு 13.07.16 புதனன்று சென்னை புரசைவாக்கம் தர்ம ப்ரகாஷ் திருமன மண்டபத்தில் நடைபெறும் சைவாகம கலாசார தீபிகோத்ஸவத்தில் வெளியிடுவது குறித்து பெருமகிழ்ச்சியடைகிறேன். இதுபோன்ற அன்னை வழிபாட்டில் ஆர்வமுள்ள அனைத்து ஆன்மீக அன்பர்களுக்குப் பயன்தரவல்ல, பல நூல்களை அளிக்குமாறு ஆசிரியரிடம் வேண்டி விரும்பிக் கேட்டுக்கொண்டு, அவர்தம் தொண்டுசிறக்க நோயற்ற வாழ்வையும் நீண்ட ஆயுளையும் அளிக்க வேண்டுமென்று எல்லாம்வல்ல இறைவனை இருகரம்கூப்பி சிரம்தாழ்த்தி வேண்டி வணங்கி அமைகிறேன்.

இப்படிக்கு,

முனைவர். வீ. அபிராம சுந்தரம், மயிலை.

வ்யாகரணசிரோமணி. சிவாகமவாசஸ்பதி.
அகோரசிவாசார்யர்.
சிவஸ்ரீ. Dr. ஸே. அருணஸுந்தர குருக்கள், M.A., Ph.D.,
பேராசிரியர், வ்யாகரண சிரோமணித்துறைத் தலைவர்,
சென்னை ஸம்ஸ்க்ருத கல்லூரி, மயிலாப்பூர், சென்னை–4,

உ
ஸ்ரீகுருப்யோ நம:

மகிழ்வுரை

(சிவரையும் சக்தியையும் வணங்கி மகிழ்வுரை செய்வோம்.)

பரஸ்பர தபஸ் ஸம்பத் பலாயித பரஸ்பரளெ
ப்ரபஞ்ச மாதாபிதரெள ப்ராஞ்செள ஜாயாபதீ ஸ்தும:.

வந்தே வாஞ்சி த லாபாய கர்ம கிம் தந் ந கத்யதே.
கிம் தம்பதி மிதி ப்ரூயாம் உதாஹோ தம்பதீ இதி.

உலகில் பல இரட்டைப் பொருட்களை நாம் தனித்தனியானதாக = வெவ்வேறானதாக அறிந்துகொள்ளமுடியுமே தவிர, அந்த இரட்டைப் பொருட்களை பிரிக்கவே முடியாது. அவை இரண்டும் பிரியாமல் இருக்கக்கூடியவை. நாம் நினைத்தாலும் இவைகளை பிரிக்கமுடியாது.

நெருப்பினை விட்டு அதன் சூட்டினை பிரிக்கமுடியாது. நெருப்பும் சூடும் இணைந்தே இருக்கக்கூடியவை. ஆனால் நமது புத்தியினால் நெருப்பு வேறு, சூடு வேறு என்று அறிந்துகொள்ளமுடியும்.

ஒவ்வொரு பொருளுக்கும் ஒவ்வொரு தன்மை இருக்கிறது. பொருள் வேறு, தன்மை வெறு என்று நம்மால் அறிந்துகொள்ளமுடியுமே தவிர, பொருளைவிட்டு தன்மை அகலாது, தன்மையை விட்டுப் பொருளும் அகலாது. அவை இரண்டும் தனித்தனியானவை என்று புத்தியினால் மட்டுமே அறிந்துகொள்ளமுடியுமே தவிர அவை இணைபிரியாதவை.

தண்ணீருக்கு குளுமை உண்டு. தண்ணீர் வேறு குளுமை வேறு. ஆனால் தண்ணீரை விட்டு குளுமை அகலாது. குளுமையை விட்டு தண்ணீரும் அகலாது. புத்தியினால் பிரித்து புரிந்துகொள்ளலாம், அவை பிரியாது. மனிதனை விட்டு ஆற்றல் பிரியாது. அந்தந்த ஆற்றல்களை விட்டு மனிதனும் பிரியமாட்டான்.

இதுபோலவே சிவபெருமானை விட்டு சக்தி அகலாது. சக்தியை விட்டு சிவனும் அகலாதவர். ஆனால் சக்தி வேறு சிவன் வேறு என்று நாம் புரிந்துகொள்ளமுடியும். எனவே சிவபெருமானென்று ஒருவரே சக்தி என்று ஒருவளே! இந்த இரண்டும் இணைபிரியாமல் இருக்கக்கூடியவை. இதைதான் பரஸ்பர தபஸ் ஸம்பத் பலாயிதபரஸ்பரெள என்று குறிப்பிடுகிறார். ஒருவர் செய்த தவத்தின் பயனாக மற்றொருவரை அடைந்திருக்கிறார். பார்வதீ செய்த தவப்பயனால் சிவபெருமானும், சிவபெருமான் செய்த தவப்பயனாக பார்வதியும் ஒருவரை ஒருவர் ஆச்ரயித்து இருக்கிறார்கள். அவர்களை பிரிக்கமுடியாது. ப்ரபஞ்ச மாதாபிதரெள ப்ராஞ்செள ஜாயாபதீ ஸ்தும: என்று இத்தம்பதியினரை பிரிக்கமுடியாது என்று குறிப்பிடுகிறது மேற்சொன்ன ஸ்லோகம்.

அந்த இருவருள் சிவபெருமான் என்ற பொருளுள் சக்தி என்கிற தன்மையானது அண்டியிருக்கின்றது. எனவே அண்டியிருப்பது சக்தி, அண்டப்படுபவர் சிவபெருமான், என்று இந்தகோணத்தில் சிந்தித்தால், அண்டியிருப்பவரைக் காட்டிலும் அண்டப்படுபவர் சிறந்தவர். உலகத்தில்

அண்டிப்பிழைப்பவர்களைக் காட்டிலும் அவர்களுக்கு வாழ்க்கை அளித்தவர்கள் சிறந்தவர்களாக எவ்வாறு கருதப்படுகிறார்களோ, அதுபோல் ஆச்ரயத்தை அளித்தவர்கள் மேன்மையானவர்கள் என்ற ஒரு எண்ணத்தில், சக்தியை காட்டிலேயும் சிவபெருமானே சிறந்தவர் என்று வழிபடக்கூடிய ஒரு ஸம்ப்ரதாயத்தை / ஒரு மதத்தை ஒரு பாரம்பர்யத்தைக்கொண்டே நமக்கு சைவர்கள் என்று பொருள்.

அவ்வாறு கிடையாது, ஆச்ரயமாகிய அந்தப்பொருளுக்குக்கூட மதிப்பு வருகின்றது என்றால், அதற்கு அந்த பொருளினுடைய தன்மைதான் காரணம். எனவே, பொருளைவிட பொருளின்தன்மைக்கு மதிப்பு அதிகம் என்று, தன்மையே பெரிது ! சக்தியே பெரிது ! ஆற்றலே பெரிது ! ஆற்றலை உடையவனைக்காட்டிலும் அந்த உடையவனிடத்தினில் இருக்கக்கூடிய ஆற்றல்தான் பெரிது ! என்று ஆற்றலைப் பெரிதாக எண்ணி சக்தியே பெரியவள் சிவபெருமானைக்காட்டிலும் என்று வணங்கக்கூடிய மதம் சாக்தமதம்.

சிவச் சக்த்யா யுக்தோ யதி பவதி சக்த: ப்ரபவிதும்
நசேதேவம் தேவ: நகலு குசலஸ்பந்திதுமபி.
அதஸ் த்வாம் ஆராத்யாம் ஹரிஹரவிரிஞ்சாதிபிரபி
ப்ரணந்தும் ஸ்தோதும் வா கதமக்ருதபுண்ய: ப்ரபவதி.

என்று பகவத்பாதாள் சாக்தமதத்தைப்பற்றி ஸௌந்தர்யலஹரியினுடைய முதல் ஸ்லோகத்தில் குறிப்பிடுகிறார். சிவபெருமானுக்கே கூட சக்தியினுடைய அருள் இல்லையென்றால், அதாவது சிவபெருமான் சக்திக்கு ஆச்ரயம் கொடுக்காவிட்டால், அதாவது ஒருநபர் ஆற்றலற்றவராக இருந்தால், அந்த நபரால் அசையக்கூட எவ்வாறு முடியாதோ,அதேபோல் சக்தியினுடை ஆச்ரயமில்லையென்றால் சக்தி சிவபெருமானை அண்டவில்லையென்றால், சிவபெருமானால் கூட அசையமுடியாது.

எனவே சிவபெருமான் அசைவதற்கும்கூட சக்திதான் காரணம் ! அப்படியென்றால் சக்திதானே முக்யமானவள், எனவே சிவபெருமான் மட்டுமல்லாது ப்ரஹ்மா, விஷ்ணு, ருத்ரன் போன்ற தெய்வங்களால் கூட வணங்கத்தக்கவள் சக்திய ! என்று சக்தியினுடைய அம்சத்தைப் பெருமையாகப் பேசுகிறார் ஆதிசங்கரபகவத்பாதாள் ஸௌந்தர் லஹரியில்.

சிவன் பெரியவர்! சக்தி பெரியவள்! என்று எப்படி எண்ணினாலும் நாம் ஒரு உண்மையை மறக்ககூடாது. சிவபெருமானைவிட்டு சக்தி அகலாமல், அகலாத சுகபாணி என்று குறிப்பிடுவதைப்போல பெருமானை விட்டு அகலவே மாட்டாள். அதுபோல் பிராட்டியைவிட்டு பெருமானும் அகலவே மாட்டார்.

எனவே ஏதேனும் ஒன்றையாவது வழிபடவேண்டும் என்ற காரணத்திற்காக மஹான்களால் செய்யப்பட்ட ஒரு வழிமுறையே சைவம் சாக்தம் முதலிய ஸம்ப்ரதாயங்களேயொழிய, மற்றபடி இந்த இரண்டு ஸம்ப்ரதாயங்களுக்கும் வேற்றுமை கிடையாது.

அதனால்தான் சாக்த ஸம்ப்ரதாயங்களில் கூட காமேச்வரியுடன் சேர்ந்தநிலையில் ஸதாசிவபெருமானை காமேஸ்வரர் என்ற நிலையில் பூஜிப்பது என்ற வழக்கமும் இருக்கிறது.

சைவஸம்ப்ரதாயமாக இருக்கக்கூடிய பக்ஷத்தில், சிவபெருமான் வீற்றிருக்கக்கூடிய தாமரைகர்ணிகையினுடைய மத்யதேசத்தின் ஈசானமூலையில் மநோன்மணியை ஸாங்கமாகபூஜிப்பதென்று வழக்கத்திலுள்ளது. எனவே சிவபெருமான் சக்தி ஆகிய இருவரும் இணைபிரியாதவர்கள் என்பதை சாக்தர்களும் சரி, சைவர்களும் சரி நன்கு மனத்தில் நிறுத்தவேண்டும்.

இவ்வாறாக ஒரு பொருள், பொருளை சார்ந்திருக்கக்கூடிய ஆற்றல், அதுபோல் சிவபெருமான், சிவபெருமானை சார்ந்திருக்கக்கூடிய சக்தி என்று இந்த இரட்டைகளைப் பற்றி நாம் புரிந்துகொள்ளவேண்டும்.

இன்னும் சொல்லப்போனால் ஒரு பொருளுக்கு ஒரு ஆற்றல் இருக்கிறது என்பதே கூட அந்த பொருள் செயல்படும்போது மட்டும் தான் நம்மால் அநுமானம் செய்யமுடியும். ஒருவர் நன்கு பேசத்தெரிந்தவர் என்று நாம் வைத்துக்கொள்வோம்! அவர் மௌனமாக பலகாலங்கள் இருக்கிறார் அவரோடு நாம் மிகவும் நெருக்கமாகப்பழகுகிறோம். எவ்வளவு பழகினாலும் கூட அவர் ஒருவார்த்தைக்கூட பேசமாட்டார். ஒரு வார்த்தைக்கூட எழுதமாட்டார் என்கிற பக்ஷத்தில், அவர் பேசத்தெரிந்தவர் எழுதத்தெரிந்தவர் என்று எவ்வாறு நாம் அநுமானம் செய்ய இயலும்? எனவே ஒருவருக்கு ஒரு ஆற்றல் இருக்கிறது என்பதை செயல்பாட்டை வைத்துத்தான் அநுமானிக்க முடியுமே தவிர, நேரடியாக தெரிந்துகொள்ள முடியாது.

ஒரு ஊசிக்கு கூட குத்தக்கூடிய ஆற்றல் இருக்கிறது என்று எப்போது நம்மால் உணரமுடியும்? எப்போது ஊகிக்கமுடியும்? என்றால், அந்த ஊசியை வைத்து ஒருமுறை குத்திப்பார்த்தால் தான் தெரியும்.

இதுபோல் ஆற்றலையுடைய ஒரு மனிதர் அதாவது ஒரு தர்மத்தினையுடைய தர்மி அந்த தர்மிக்கு ஆற்றல் இருக்கிறது என்று எப்பொழுது தெரியுமென்றால் செயல்படும்போது மட்டும் தான் தெரியும். நெருப்பு எரிகிறது. எரிகிற நெருப்பை நாம் பார்த்துக்கொண்டிருக்கிறோம். ஆனால் அந்நெருப்பிற்கும் நம் தோலிற்கும் தொடர்பு ஏற்பட்டு, அந்நெருப்பு தோலினை சுடும்போதுமட்டுந்தான், சுடக்கூடிய தன்மை நெருப்பிற்கு இருக்கிறது என்பதை அநுமானிக்க முடியும்.

இதுபோலவே சிவபெருமான் சிவனே என்றிருக்கும்போது, சிவபெருமானிடத்தில் சக்தியிருக்கின்றது என்பதை யாராலும் தெரிந்துகொள்ள இயலாது.

நம்மால் தெரிந்துகொள்ள இயலாதென்ற காரணத்தினால் அந்த பொருளுக்கு அந்த ஆற்றல் கிடையது, என்பது கிடையாது. நெருப்பிற்கு சுடக்கூடிய தன்மை இருக்கிறது என்று நாம் தெரிந்துகொள்ளவில்லை என்ற காரணத்தினால், நெருப்பிற்கு சுடக்கூடிய தன்மை இல்லையென்று சொல்லமுடியமா என்ன? நிச்சயமாக இருக்கிறது அது மறைந்திருக்கிறது. ஆனால் இருக்கிறது என்றெவ்வாறு தெரியும்?

லௌகிதபதார்த்த விஷயங்களை அநுபவம் மிக்க வேறு யாரேனும் கூறினால் மட்டுமே இதை நம்மால் அறிந்துகொள்ள இயலும். ஆனால் இறைவன் விஷயத்தில் வேதங்கள் ஆகமங்கள் போன்ற ஆப்தவாக்கியங்கள் ஆப்தநூல்கள், சிவபெருமான் சக்தியோடு கூடியவர் என்று சொல்வதை வைத்து, அவரிடத்தில் சக்தியிருக்கிறது என்பதை உணரமுடியும் அல்லது தெரிந்துகொள்ளமுடியும்.

இப்படியொரு நிலையுண்டு. அந்த நிலையை லயாவஸ்தா என்று சிவாகமங்கள் கூறுகின்றன. அந்த லய அவஸ்தை என்பது லயநிலை. எந்தவிதமான செயல்பாடுமின்றி ஒருவரிருந்தால் எப்படியிருக்குமோ, அதுபோல் உலகம் தொடர்பான எந்தவித நடவடிக்கையுமின்றி, அசைவின்றி இறைவன் இருக்கக்கூடிய அந்தநிலைக்கு, அமைப்பிற்கு லயநிலையென்று பெயர். அந்த லயநிலையில் இருக்கக்கூடிய சிவபெருமானுக்கு பரசிவன் என்று பெயர். அந்த நிலையில் அவரது சக்தியை நாம் அநுமானிக்கக் கூட முடியாது. ஏனெனில் எந்தவிதமான நடவடிக்கையுமில்லை! இருந்தாலும், பரசிவன் அந்த நிலையிலும் சக்தியை பிரிந்துஇல்லை. அந்த சக்திக்கான பெயர்தான் பராசக்தி. பரசிவனுக்கு சக்தி இருக்கின்றாள். அந்த சக்திக்கு பராசக்தி என்று பெயர், என்று எவ்வாறு தெரியுமென்றால்? வேதாகமங்கள் போன்ற சப்தப்ரமாணத்தை வைத்துத்தான் நாம் தீர்மானிக்க முடியுமே தவிர, வேறு

ப்ரமாணத்தை வைத்து தீர்மானம் செய்ய இயலாது.

அடுத்த நிலை ஸ்ருஷ்டி போன்ற கார்யங்களை செயல்படுத்துகின்ற நிலை. அதனை உத்யுக்த அவஸ்தா என்று குறிப்பிடுவர். அந்த உத்யுக்த நிலையை போக அவஸ்தா என்றும் குறிப்பிடுவர். இந்த போகநிலையில் இருக்கும் சிவனுக்கு ஸதாசிவர் என்று பெயர். ஸ்ருஷ்டி போன்ற கார்யங்களை அவர் செய்ய ஆரம்பிக்கிறார். ஸோ காமயத என்று இந்த நிலையை வேதங்கள் குறிப்பிடுகின்றன. அப்போது அந்த ஸதாசிவப் பெருமானுடைய சக்திக்கு மநோன்மனீ என்று பெயர்.

அடுத்து, உலகங்களை ஸ்ருஷ்டி செய்ய ஆரம்பித்துவிட்டார். அந்த நிலைக்கு ப்ரவ்ருத்த அவஸ்தா என்று பெயர். ப்ரவ்ருத்திநிலை அல்லது அதிகார அவஸ்தா என்று பெயர். ப்ரவ்ருத்திநிலை பெருமானுக்கு மஹேஸ்வரன் என்று பெயர். அந்த மஹேஸ்வரனுடைய சக்திக்கு உந்மனீ, வாக்வாதிநீ என்றெல்லாம் பெயர்.

இவ்வாறாக சிவபெருமானுக்கு எவ்வாறு பலநிலைகள் இருக்கின்றனவோ அதேபோல் சக்திக்கும் பல நிலைகள் இருக்கின்றன. அந்தந்த நிலைகளிலிருக்கின்ற சிவபெருமானை வழிபடுவது போலவே, அதற்கு நிகராக இருக்கின்ற சக்தியை வழிபடுவதென்பது சைவஸமயத்தோடு சேர்ந்து வருகின்ற ஒருநிலை.

ஒரே ஒரு வித்யாஸம் என்னவென்றால் சைவர்கள் சிவனை ப்ரதானமாகவும், அந்த சிவனை அண்டியிருப்பவளாக மட்டுமே சக்தியை பார்ப்பார்கள் வணங்குவார்கள். ஆனால் சாக்தர்களோ சக்தியை ப்ரதானமாகவும், அந்த சக்தி இருப்பதனாலேயே சிவபெருமானுக்கு சிறப்பு என்ற ரீதியில் பார்பார்கள் வணங்குவார்கள்.

எனவே பார்க்கக்கூடிய பார்வை வேறுபட்டிருந்தாலும்கூட சைவர்களுக்கும் சாக்தர்களுக்கும், எதிரே தென்படுகின்ற பொருள் ஒரேவிதமாக இருக்கின்றது. அந்தவிதமானது சிவன் சக்தி ஆகிய இருவரும் இணைபிரியாதவர்கள், அவர்களை பிரிக்கவே முடியாதென்ற நிலை, சைவத்திலேயும் இருக்கிறது! சாக்தத்திலேயும் இருக்கிறது!

அந்த வகையில் சக்தியை வழிப்படுபவர்களுக்காகவே எனது குரு பெருமதிப்பிற்குரிய சிவஸ்ரீ. ஸோமசேகர சிவாசார்யார் அவர்களால் இந்நூலிலே விஷயங்கள் திரட்டப்பட்டு புவனேஸ்வரீ என்ற பெயரில் விளங்கக்கூடிய பூஜைமுறையானது, சாக்ததந்த்ரங்களின் அடிப்படையில் சிறப்பாக விளக்கப்பட்டிருப்பதை பாமரனும் எளிதில் அறிந்துக் கொள்ளலாம். தாம் ஒரு சிறந்த சைவராக இருப்பினும் ஆசிரியர் சாக்தநூல்களை சாக்தவழியிலேயே நின்று ஸூக்ஷ்மமாக விளக்கக்கூடிய, தமக்கே உரிய பேராற்றலையும், இடைவிடாத தொய்வடையாத தனது உழைப்பினையும், மேதாவிலாஸத்தையும் வெளிப்படுத்தி இருக்கிறார்.

எடுத்துக்கொண்டது எந்தவிஷயமாக இருந்தாலும், அவ்விஷயத்திற்கு குறைபாடு ஏற்படாதவண்ணம் ஒரு வழக்கறிஞர் தனது வாதங்களை வைப்பதுபோலவே, எனது குருநாதரும் தாம் எடுத்துக்கொண்ட இந்நூலில் ஸ்ரீபுவனேஸ்வரீஅம்பிகையின் பெருமையையும், பூஜாஜபபாராயணவிதிமுறைகளையும் மிகஸூக்ஷ்மமாகவும், விரிவாகவும் விவரித்திருப்பது சாக்தர்களுக்கும், அறிஞர்களுக்கும் ஒரு பெரும் விருந்துபோல் அமைந்திருப்பது தெள்ளத்தெளிவானது.

எனது குருநாதர் இதுபோன்ற பலஸாதனைகளைச் செய்திட அவருக்கு பல வகைகளிலும் தனது முழு ஒத்துழைப்பினை அளித்துவரும் காளிகாம்பாள் ஸ்ரீ ஸாம்பமூர்த்தி சிவாசார்யார் அவர்களின் வம்சாவளியினரின் பெரும்பணியை நாம் பாராட்டி இன்புறுவோமாக.

Dr. ஸே. அருணஸுந்தர குருக்கள்

உ
ஸ்ரீ காளிகாம்பாள் துணை

Vedantha Siromani, Sivagama Vachaspati
Dr. T.S. Shanmukha Sivacharyar, M.A., Ph.D.,

DIRECTOR
SWAMI SADASIVOM SIVAGAMA JNANA KENDRAM
(A unit of Sri Sambamurthy Sivacharyar Foundation)
E-mail : adisaiva@sivacharya.org, adisaiva@gmail.com

66/101, Ramaswamy Street,
Chennai - 600 001. Tamilnadu, India.
✆: 0091-44 - 2526 1320
Web: www.sivacharya.org

அணிந்துரை

எல்லாம் வல்ல பரம்பொருளான இறைவன் இவ்வுலகினை சிருஷ்டித்து, பரிபாலனம் செய்து, ஆன்மாக்கள் முக்தி அடைய வேண்டும் என்பதற்காக பலவித பூஜை முறைகளை அருளிச் செய்துள்ளார்.

எங்களது குருநாதர் இந்த பூஜா வைபவங்களை மிக எளிமையான வழியில் அனைவரும் பயன்பெற்று சிவானுபூதியை அடைய வேண்டும் என்பதற்காக மிகச்சிறந்த முறையில் "புவனேச்வரீ பூஜா கல்பம்" எனும் இந்த புத்தகத்தினை தொகுத்து அருளியுள்ளார்கள்.

"விச்வஸ்ய பீஜம் பரமாஸி மாயா"

என்ற வசனப்படி உலகங்கள் அனைத்திற்கும் காரணமாக இருப்பவள் பராசக்தி. அவளே இவ்வுலகங்களின் பரா பட்டாரிகா எனும் "ராணியாக" இருந்து, இவ்வுலகில் உள்ள ஒவ்வொரு ஜீவ ராசிகளையும் எப்படி ஒரு தாயானவள் தனது குழந்தைகளை பாதுகாக்கிறாளோ அதைப்போல ரக்ஷிக்கிறாள். எப்படி ஒருவரிடம் பேசுவதற்கு வார்த்தைகள் அதற்குரிய இலக்கணப்படி இருக்க வேண்டுமோ அதைப்போல பூஜைமுறைகள் இப்படித்தான் இருக்க வேண்டும் என சாஸ்திரங்கள் மிகத்தெளிவாக கூறியுள்ளன. இந்த அரியபுத்தகத்தில் ஸ்ரீமாதாவாக விளங்கக்கூடிய புவனேச்வரீ தேவியின் வழிபாட்டு முறைகளை மிகத் தெளிவாகவும் எளிமையாகவும், மிகவும் பயனளிக்கக்கூடிய வகையில் தொகுத்து அளித்துள்ளார்கள். இது மிகவும் பயனளிக்கவல்லது.

இந்நூலில் ரிஷிகள் இயற்றிய அரியபல ஸ்தோத்திரங்கள், காரியசித்திகளை அளிக்கும் பல ஸ்தோத்திரங்கள் என வகைப்படுத்தி, ஒவ்வொரு ஸ்தோத்திரங்களுக்கும் உரிய பலன்களையும் ஸ்தோத்திரங்களின் அர்த்தத்தையும் மிக எளிய முறையில் விளக்கியுள்ளது அனைவருக்கும் அவ்வப்பொழுது என்றும் பயனுள்ளதாக இருக்கும் என்பதில் எந்த சந்தேகமுமில்லை. வீட்டில் விரத பூஜாகாலங்களிலும், திருவிளக்கு பூஜைகளிலும் இதனை கையேடாக பயன்படுத்தலாம்.

இந்த புத்தகத்தை படித்து அனைவரும் எல்லாம் அளிக்கவல்ல ஜகன்மாதா புவனேச்வரீயின் அருளைப்பெற்று இன்புற்று இருக்கவேண்டி எல்லாம்வல்ல எனதன்னை ஸ்ரீ காளிகாம்பாள் பாதம் பணிகின்றேன். அண்ணா, இது போன்ற பல புத்தகங்களை அளிதிடவும், நமது ஹிந்து தர்மத்தின் உன்னத உண்மைகளை உலகத்தோர் உணர்ந்து ஞானம் பெற்று மகிழ்ச்சியடையவும் பிரார்த்திக்கிறேன்.

T.S. ஷண்முகசிவாச்சார்யார்

உ

ஓம் நமச்சிவாயை

பொருளடக்கம்

புவனேச்வரீ பூஜாகல்பம்

வரிசை எண்	நூலின்பொருள் அடக்கம் (விஷயங்கள்)	பக்கம் எண்
1.	ஸ்ரீமாதா தேவீஉபாஸனா விளக்கம்	7
2.	மஹாவித்யா புவனேஸ்வரீ	18
3.	புவனேச்வரீ அஷ்டோத்தரசத நாமஸ்தவம்	24
4.	புவனேச்வரீ ஸ்தவராஜாஷ்டகம்	26
5.	புவனேசீ ஸ்துதி (ப்ரார்த்தனா)	27
6.	தேவீவழிபாட்டின் தேவையும் பயனும்	29
7.	புவனேச்வரீ பூஜாகல்பம் (லக்ஷ்மீ வாணீ ஸஹிதம்)	34
8.	விக்னேச்வர பூஜை	34
9.	மஹாஸங்கல்பம்: (புவனேஸ்வரீபூஜைக்கானது)	38
10.	ஆசமனம் (உடல்புனிதத்திற்கு மும்முறை நீர்பருகுதல்)	39
11.	குருவந்தனம் (குருவை த்யானம்செய்து வணங்குதல்)	39
12.	குலதேவதா வந்தனம் (குலதெய்வத்தை எண்ணி வணங்குதல்)	39
13.	ஆத்மரக்ஷை (தேஹரக்ஷை, பூசிப்பவரின் பாதுகாப்பு)	39
14.	ஸாக்ஷிதீப பூஜை.	39
15.	கண்டாபூஜை	40
16.	கலசபூஜை	40
17.	சங்கபூஜா (விசேஷ அர்கியதீர்த்த பரிகல்பனம்)	41
18.	ஆத்மபூஜை (சங்குதீர்த்தத்தால் தெளிக்கவும்)	41
19.	பீடபூஜை (ஆஸன பூஜை / இருக்கையின் வழிபாடு)	42
20.	புவனேச்வரீ கவசம் (தேவிமந்திர பாதுகாப்பு)	43
21.	தேவீஆவாஹனம். (புவனேச்வரியை அழைத்தல்)	44
22.	புவனேச்வரர் ஸ்வரூபவர்ணனம்	44
23.	புவனேச்வரீ ஸ்வரூபவர்ணனம். (ரூப பாவனா விதி)	45
24.	புவனேச்வரீ ஷோடச உபசார பூஜை	46

வரிசை எண்	நூலின்பொருள் அடக்கம் (விஷயங்கள்)	பக்கம் எண்
25.	புவனேச்வரீ ஸ்தவம். (தேவீதுதிகளைக்கூறுதல்)	52
26.	தேவீ விஸர்ஜனம் (விடுவித்து பூசையைமுடித்தல்)	55
27.	பூஜையின்பயனை ப்ரம்மார்ப்பணம் செய்தல்	55
28.	அம்பாஸ்துதி	56
29.	ஸ்ரீசக்ரதேவ்யார்ச்சனம் (16உபசார லகு பூஜை)	56
30.	புவனேச்வரீ மூலமந்திர விநியோகமுறை	62
31.	புவனேச்வரி உருவதியானம்	64
32.	புவனேச்வரீ பூஜாயந்த்ர கல்பனம்.	65
33.	புவனேச்வரீ ஆவரணதேவதார்ச்சனம்.	66
34.	புவனேசீமந்த்ர புரச்சரண காம்யப்ரயோக விதிகள்.	70
35.	புவனேசீ ஷட்கர்ம ஹோமவிதி	71
36.	புவனேஸ்வரீ ரூபத்யானங்கள்	72
37.	புவனேச்வரீ நாமாவளி (108பெயர்கள்)	73
38.	புவனேச்வரீ ஸ்தோத்ரம்.	77
39.	புவனேச்வரீ த்ரிசதீ நாமாவளீ. (300பெயர்கள்)	80
40.	ஸ்ரீமஹாராக்ஞீ ராஜராஜேஸ்வரீ ரூபதியானங்கள்	90
41.	மந்திரமாத்ருகா ஸ்தவம் (தமிழ் உரையுடன்) (ஆதிசங்கரபகவத்பாதர் அருளியது)	92
42.	ராஜராஜேச்வரீ அம்பாஸ்தவஅஷ்டகம்	100
43.	லலிதா அஷ்டோத்தரசத நாமாவளி: (108பெயர்கள்)	102
44.	லலிதாம்பிகை நவரத்னமாலை (தமிழ்பாடல்)	107
45.	லலிதா பஞ்சரத்ன ஸ்தவம்	110
46.	லலிதா ஸ்தவராஜம்	111
47.	காமாக்ஷி ஸ்தோத்ரம்	115
48.	மீனாக்ஷி பஞ்சரத்னம் துதி (தமிழ்உரையுடன்)	116
49.	மீனாக்ஷி ஸ்தோத்ரம் (வித்யாவதீ செய்தது)	119
50.	ஸ்ரீசக்ரராஜ ஸ்தவம்	121
51.	ஸ்ரீசக்ரமேரு த்ரிபுரநாயிகா நாமாவளி (108)	125

வரிசை எண்	நூலின்பொருள் அடக்கம் (விஷயங்கள்)	பக்கம் எண்
52.	திரிபுரசுந்தரீ வேதஸாரஸ்தோத்ரம்	129
53.	திரிபுரசுந்தரீ ஸ்வரூப த்யானங்கள்	134
54.	பாலா த்ரிபுரசுந்தரீ ஸ்தோத்ரம்	135
55.	ஸ்ரீசக்ரநாயகீ பவானீ ஸ்தவம் (சங்கரக்ருதி)	137
56.	ஸௌபாக்யா அஷ்டோத்ரசத நாமாவளி	138
57.	ராமநாத ஸ்தோத்ரம் (ராமேச்வரசிவசக்திதுதி)	142
58.	பர்வதவர்த்தினி ஸ்தோத்ரம்	142
59.	ஜம்புநாத ஸ்தோத்ரம்	143
60.	அகிலாண்டேச்வரீ ஸ்தோத்ரம்	143
61.	ஸ்ரீஅருணாசலஸ்துதி அஷ்டகம் (தமிழுரை)	146
62.	சோணாத்ரி ஈசஸ்துதி அஷ்டகம் (தமிழுரை)	149
63.	அபீதகுஜாம்பாள் ஸ்தவம் (தமிழுரை)	152
64.	தீபநமஸ்கார துதி (திருவிளக்கு வணக்கம்)	155
65.	கோமாதாஸ்துதி (பசுவை வணங்குதல்)	155
66.	ருணஹர கணேச ஸ்தோத்ரம் (கடன் தீர்க்கும் துதி)	156
67.	அன்னபூரணி துதி (உணவளிக்கும் துதி)	157
68.	புவனாபதி சக்கரம். திருமந்திரம். (4-ம் தந்திரம்)	157
69.	புவனேச்வரி கவசம் (தமிழ்)	159
70.	புவனேச்வரி அஷ்டோத்தர சதநாமாவளி	169
71.	மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்	173
72.	ஜய ஜய ஸ்ரீ புவனேச்வரி (அருளுரை)	174

வாழ்த்து

சுபம்.

உ

ஓம் ஸ்ரீ குருப்யோ நம:

ஸ்ரீ மாத்ரே நம:

புவனேச்வரீ பூஜாகல்பம்

நூல்காப்பு. துதிகள்

வாகீசாத்யாஸ் ஸுமனஸ: ஸர்வார்த்தானாம் உபக்ரமே.
யம் நத்வா க்ருதக்ருத்யா: ஸ்யு: தம் நமாமி கஜாநநம்.

***

யச் சிவோ நாமரூபாப்யாம் யா தேவீ ஸர்வமங்களா.
தயோஸ் ஸம்ஸ்மரணாத் பும்ஸாம் ஸர்வதோ ஜயமங்களம்.

***

இக்ஷுகோதண்ட புஷ்பேஷு பாசாங்குச லஸத்கராம்.
உத்யத் சூர்யநிபாம் வந்தே மஹா த்ரிபுரசுந்தரீம்.

***

ஸரஸ்வதீ திவ்யத்ருஷ்டா வீணா புஸ்தகதாரிணீ.
ஹம்ஸவாஹ ஸமாயுக்தா வித்யாதானகரீ மம.

***

உத்யத்பாஸ்கர ஸங்காசாம் ஸர்வாபரண பூஷிதாம்.
பாசாங்குசதராம் வந்தே பக்தாபீஷ்ட ப்ரதாயிநீம்.

***

ஸிந்தூராருணவிக்ரஹாம் த்ரிணயனாம்
மாணிக்யமௌளிஸ்புரத்
தாராநாயக சேகராம் ஸ்மிதமுகீ மாபீன வக்ஷோருஹாம்
பாணிப்4யா மளிபூர்ண5ரத்2ன சஷகம் ரக்தோத்பலம் பி3ப்பரதீம்.
ஸௌம்யாம் ரத்னகடஸ்த ரக்தசரணாம் வந்தே பரா மம்பிகாம்.

***

அருணாம் கருணாதரங்கிதாக்ஷீம் த்ருதபாசாங்குச புஷ்பபாண சாபாம்.
அணிமாதி பிராவ்ருதாம்ம பூகைரஹமித்யேவ விபாவயே பவானீம்.

***

வந்தே பு4த்மாஸனஸ்தாம் விகஸிதவதனாம் பத்மபத்ராயதாக்ஷீம்
ஹேமாபாம் பீதவஸ்த்ராம் கரகலிதலஸத் ஹேமபத்மாம் வராங்கீம்.
ஸர்வாலங்கார யுக்தாம் ஸதத மபயதாம் பக்தநம்ராம் பவானீம்
ஸ்ரீவித்யாம் சாந்தமூர்த்திம் ஸகலஸுரநுதாம் ஸர்வஸம்பத் ப்ரதாத்ரீம்.

உ

ஓம் ஸ்ரீ குருப்யோ நம:

ஸ்ரீ மாத்ரே நம:



ஸ்ரீ மாதாபுவனேச்வரீ

உ

ஸ்ரீ மாத்ரே நம:

தேவீம் த்ரிலோகஜனனீம் சரணம் ப்ரபத்யே.



ஸ்ரீமாதா காமாக்ஷீ

உ

ஸ்ரீ மாத்ரே நம:

ஸ்ரீமாதா காளிகாம்பாள்



ஸ்ரீமாதா தேவீஉபாஸனா விளக்கம்

நமோ தேவ்யை மஹாதேவ்யை சிவாயை ஸததம் நம:
நமப் பிரகிருத்யை பத்ராயை நியதாப் ப்ரணதாஸ்ம தாம்.

அகிலாண்டகோடி பிரம்மாண்டநாயகியாயும் அனைத்து உயிர்களையும் காத்தருளும் காருண்யரூபிணியாயும், மஹாதேவரைப் பிரியாத மஹாதேவியாயும் விளங்குபவள் மூவுலகஅன்னையாகிய பரமேச்வரீ பராசக்தியே.

யாதேவீ ஸர்வபூதேஷு சக்திரூபேண ஸம்ஸ்திதா.
நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமோநம:

என்கிறது தேவீமாஹாத்மியம் எனும் சப்தசதீ ஸ்தோத்ரமந்திரம்.

நமது பார்வைக்குப் புலப்படாத அனேக சூக்ஷ்மசக்திகளின் இயக்கத்தால் உலகம் வியாபித்து விளங்கிவருகிறது. அனைத்து உயிரினங்களும் உயிர்வாழ்வதற்கும் அறம்செய்து மேன்மை பெறுவதற்கும் பிராணசக்தியும், பலகாரியங்களைச் செய்வதற்கு ஜீவசக்தியும், உலகவாழ்க்கைக்கு மற்றும்பலசக்திகளும் மிகவும் அவசியமாயிருக்கின்றன.

ஸகல சக்திகளுக்கும் ஆதாரமாயும், அதீதமாயும் உள்ளது ஆதிபராசக்தியாகும். நம்மைக் கர்ப்பத்தில் தாங்கி தன் சரீரத்திலுள்ள சத்துக்களால் கர்ப்பத்தில் நம்மை உருவாக்கி போஷித்து இப்புவியில் நாம் ஜனித்தபின்பு நமக்குப் பாலூட்டிவளர்ப்பது அப்பராசக்தியின் அம்சமான அன்னையே ஆகும். நம்மை எவ்விதம் நம் தாய் உருவாக்கி வளர்க்கிறாளோ அவ்விதம் பராசக்தி ஸகல அண்டங்களிலுள்ள ஜீவராசிகளையும் ஆக்கி ரக்ஷிக்கிறாள். இக்கருத்தை

ஸ்திரியஸ் ஸம்தா ஸகலா ஜகத்ஸு
த்வயைகயா பூரிதம் அம்ப! ஏதத்.

என்ற தேவர்களின் துதிவாக்யத்தால் தேவீமாஹாத்மியத்தால் உணரலாம்.

எவ்விதம் நாம் சிசுவாக இருக்கும்பொழுது தாயாரை நாம் முதலில் அறிகிறோமோ அவ்விதம் இகபரசுகவாழ்க்கை பெற சக்தியளிக்கும் பராசக்தியே நாம் முதலில் அறிய வேண்டியதெய்வமாகும்.

அந்த பராசக்தியை நாம் வழிபடவேண்டியது அவசியமாகும். இவள் தீயினில் சூடுபோலவும், மலரில் மணம் நிறம் போலவும் பரமசிவனாரைப் பிரியாதிருப்பவள். சிவனாரும் இச்சிவசக்தியினாலேயே ஐந்தொழிலாற்றி அருள்வார். எல்லா தெய்வங்களுக்கும் எல்லாவகை ஆற்றல்களாயும் யாவுமாயும் எங்கும் நீக்கமற நிறைந்துள்ளவள் பராசக்தியே.

நாம் எந்ததெய்வத்தை ஆராதிக்கும்போதும் நம்முடன் பிறந்த காமமும், அதன் துணைவர்களாகிய குரோதம், மோஹம், லோபம், மதம், மாத்ஸர்யம் முதலியவைகளும் நம்முடன் இந்து, நமது மனோநிலையைக் களங்கம் செய்கின்றன. ஆனால் நாம் உலகமாதாவை அணுகினால் நாணம் மேலிட்டு காமம் நம்மைவிட்டு அகலும். அவ்விதமே அதன் ஸகாக்களான குரோத மோகாதிகளும் மறையும். அதனால் மனம் தூய்மை

அடையும். ஆதலால் நிர்மலமான (குறையற்ற தூய்மையான) மனதுடன் நாம் ஜகன்மாதாவை பூஜிப்பது மிகவும் எளிதாகிறது. மனத்துக்கண் மாசிலனாய் ஆதலே பூசையின் நோக்கமாம். மேலும் குழந்தைகளிடம் எல்லோரைக்காட்டிலும் தாயாருக்குக் கருணை அதிகம். அக்கருணை நிறைந்த மாத்ருரூபமான தெய்வத்தை நாம் ஆராதிப்பது நன்றல்லவா? நமது வேதங்களும் இதனையே வலியுறுத்திக்கூறியுள்ளன. மாதாபூர்வருபம் அவளே மூத்தவள் என்று கூறுவதாலும், மாத்ருதேவவோ பவ தாயைக்கடவுளாகக் கொள்" என்று கூறுவதாலும், நால்வேதங்களும், வேதக்கூற்றுகளும் தாய்வழிபாட்டைக் கூறுவனவாம்.

அன்னையின் உருவங்கொண்ட அம்பிகையின் வைபத்தை லலிதா ஸஹஸ்ரநாமம் நன்கு விவரிக்கிறது. அவற்றுள் முதலாவது திருநாமமே ஸ்ரீமாத்ரே நம: என்று தாயை வணங்குவதாக தேவியை ஸ்ரீமாதா என்று தேவியைத் தாயென்றே கூறுகிறது. ஆனால் அவள் தெய்வீக உலகத்தாய் ஸாதாரணத்தாயென நினைத்து அலக்ஷியம்செய்யவோ தவறுதலாய்எண்ணி நடக்கவோ கூடாது என்பதை விளக்கிடவே அடுத்த நாமாவில் ஸ்ரீமஹாராக்ஞீ என்ற பெயருடையவளாக நீதிநெறியை நிலைநிறுத்துபவள், எல்லோரும் தன்சிசுக்களானாலும் துஷ்டர்களைக் கண்டித்தும் தண்டித்து உத்தமர்களைக் காத்து ரக்ஷிக்கும் நீதிசாஸ்திரப்ரவர்தினியாக, உலகில் நியாயமார்க்கத்தை கடைபிடிப்பவளாக உலகை அருளாட்சி செய்பவள் என்று கூறி எச்சரிக்கை செய்து உணர்த்துகிறது.

சாதாரண ஒருதாயாருக்கு நீதிபதியின் அதிகாரம் ஏது? என்று எண்ணலாகாது. அவள் ஸ்ரீமத் ஸிம்ஹாஸநேச்வரீ. என்பவளாக, ராஜராஜேச்வரீ எனப்படுபவளாக அனைத்து புவனங்களையும் ஆளும் புவனேச்வரீ என்பதை மூன்றாவதுநாமா நினைவூட்டுகிறது. இவளே மேலானதேவதை என்பதை சாக்தஅனுபூதிமானாகிய அருளாளர் அபிராமிபட்டர் தமது அந்தாதியில் புவனேச்வரியின் மேன்மையைக் கூறுகிறார்.

பூத்தவளே புவனம் பதினான்கையும் பூத்தவண்ணம்
காத்தவளே பின்கறந்தவளே கரைகண்டனுக்கு
மூத்தவளே என்றும் மூவா முகுந்தர்க் கிளயவளே
மாத்தவளே உன்னையன்றி மற்றோர் தெய்வம் வந்திப்பதே.

என்கிறார். மும்மூர்த்திகளும் மஹாபலம் வாய்ந்த எண்ணற்ற தேவர்களும் இருக்கப் பெண்உருக்கொண்ட தேவீ ஏன்

ராஜ்யபரிபாலனம் செய்யவேண்டும்? என்ற ஐயம் எழாவண்ணம் சிதக்னிகுண்டஸம்பூதா என்ற நாமம் லோகத்தின் க்ஷேமத்திற்காகவும் மும்மூர்த்திகளும் வெல்லுவதற்கரிய வரம்பெற்றவர்களான பண்டாசுராதிகளை அழித்து, உலகில் தருமத்தை நிலைநிறுத்திடவே பிறரால் படைக்கப்படாமல் ஜோதிமயமான ஞானாக்னியிலிருந்து தானாகவே உற்பத்தியான ஞானமேவடிவமான, கருணையே வடிவமான மஹாசக்திவாய்ந்தவளாக தேவீபராசக்தியே விளங்குபவள் என்பதை தெளிவுபடுத்துகிறது இந்த பிரம்மாண்ட புராணத்தின் லலிதா துதிநாமம். உலகில் பிறப்பு இறப்பு எனும் நோயுற்ற உயிர்களுடைய உலகவாழ்க்கை எனும் துயரக்கடலில்இருந்து அவர்களை கரையேற்றஉதவும் கலங்கரைவிளக்குஎன விளங்குபவள். ஞானசக்தியாகஉள்ள இவளே என்பதால் ஸம்ஸாரபங்கநிர்மக்ன ஸமுத்தரண பண்டிதா எனப்போற்றப்படுகிறாள். இப்பிறவிப் பெருங்கடலைக்கடக்க இறைவனடி சேருதல் நம் கடமை.

பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவனடி சேராதார். (குறள்)

என்பது திருவள்ளுவர் திருவாக்காகும்.

ஞானமே உருவாய் விளங்குவதால் இவளை வேதாகமங்கள் யாவும் வித்யா என்றழைக்கின்றன. இவளே ஸ்ரீவித்யா எனப்படுபவள். வித்தை என்ற சொல்லுக்கு இறையை உணர்த்தும் ஞானம் என்பது பொருள். அறிவு என்பது கடவுளைக் காட்டுவதே கல்வி எனப்படுவதாம் கடவுளை உணர்த்தாத கல்விபாழ்பட்டது. பொருட்களையும் அவற்றின் பண்புகளையும் உணர்த்தும் ஞானம் மெய்ஞானமாகாது. திக் வித்யாம் அசிவாச்ரயாம் என்கிறது அறநூல். இதனையே வள்ளுவரும்,

கற்றதனாலாய பயன் என்கொல் வாலறிவன்
நற்றாள் தொழார் எனின். (குறள்) என்று கூறுகிறார்.

மனிதர்களால் பெரிதும் விரும்பப்படுகிற்மையால் புருஷார்த்தம் என்று கூறப்படுகிற அறம், பொருள், இன்பம், வீடுபேறு ஆகிய நான்கினுள் முதல் மூன்றும் இவ்வுலகின் இம்மைப் பயன்கள் நான்காவதானவீடுபேறு முக்தி என்பதான மோக்ஷத்தை அடைவதாம். அறம் எனப்படும் இல்வாழ்க்கையை நாம் வேதாகம அறநெறியில் வாழ்வதாலேயே நமக்கு மறுபிறவிநீங்கி முக்திகிட்டும் என்பது திருவள்ளுவர் கருத்து. எனவே தான் இவ்வையத்துள்ளே வேதாகம நெறிவழுவாது வாழ்வாங்கு வாழ்வோர்கள் யாராயினும்

தெய்வத்துள் வைக்கப்படுவர் என்கிறார் பொய்யா மொழிப்புலவர் வள்ளுவநாயனார்.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும் (குறள்)

என்பார். இவ்வாறு மனிதன் புனிதனாகி இறைவனாகும் நிலையை தந்தருள்பவள் பராசக்தி ஒருத்தியே. இதனை ஸ்ரீ அகத்தியமாமுனிக்குத் தெளிபெற அம்பிகையின் அருட்துணைகொண்டு ஹயக்ரீவபகவான் உபதேசித்தருளிய லலிதாதிரிசதி நாமாவளியில் ஒன்று, **மோக்ஷைக ஹேது வித்யா து ஸ்ரீவித்யைவ ந ஸம்சய:** என்ற வசனத்தின்படி மோக்ஷத்திற்கு ஹேதுவாயுள்ளது (மூலகாரணமாய்வித்தாய் உள்ளது) **ஸ்ரீவித்தை** என்பதே ஆகும்.

யோகசாஸ்திரத்தில் மூலாதாரத்தில் அதிசூக்ஷ்மமாய் உள்ள குண்டலிநீசக்தியைக் கொண்டு ஸ்வாதிஷ்டானம், மணிபூரகம், அனாஹதம், விசுத்தி, ஆக்ஞை, பிரம்மரந்திரம் ஆகிய ஆறு ஆதாரநிலைகளைக் கடந்து, அவற்றை பேதித்து ஸஹஸ்ராரதின்மேலே துவாதசாந்தப் பெருவெளியில் உள்ள சிவத்திடம் சாந்தியதீதாவாக உன்மனையாக சக்தியை அபேதப்படுத்துவதே **மோக்ஷம்** எனப்படுவதாகும்.

இதனை **ஷட்சக்ரோபரிஸம்ஸ்திதா** என்றும், **சிவஞான ப்ரதாயினீ** என்றும், **கைவல்யபத தாயினீ** என்றும், லலிதாஸஹஸ்ர நாமாவளியில் கூறப்படுவனவற்றால் நன்கு அறியலாம்.

உபாஸனா என்ற சொல்லுக்கு தெய்வத்தருகில் நம்மை இருத்துவது என்பது பொருள். தேவியை வழிபடுவோர் தேவியின்வசிப்பிட உலகமான சிந்தாமணித்வீபத்தில் அதாவது ஸ்ரீபுரத்தில் நித்யானந்தபேரானந்தத்தில் திளைத்து இருப்பர். முக்தாத்மாக்கள் சிவசக்தியின் அருகில் சூழ்ந்திருந்து சிவபோகத்தில் திளைத்திருப்பர் என்பதே முடிந்தமுடிவாகும்.

ஸ்ரீவித்யா உபாஸனையின் தத்துவமும் அதேபோன்றதாகும். இந்த தேவீஉபாஸனையில் சிவசக்தியை ஐக்யபாவனையோடு கருதவேண்டும். வெவ்வேறாய்க் கருதக்கூடாது. **காமேசோத்ஸங்க வாஸினியாக**, சிவசக்திகளை காமேச்வரன் காமேச்வரியாக சிவனாரின் மடியில் சேர்ந்து அமர்ந்துள்ள சிவசக்தியாகவே, மனதில் கருதி பூஜிக்கவேண்டும். சிவசக்திஒன்றே ஆயினும் குணம், செயல், சேர்க்கைக் காரணங்களால் பல உருவம் பெயர் பெற்று சிவனின் வல்லமையாய் விளங்குகிறாள்.

சிவலிங்கரூபமும் சக்தியின்வடிவமே. ஸ்ரீசக்ரவடிவமும் சக்தியின் வடிவமே. ஆத்மதத்வம், வித்யாதத்வம் சிவதத்வம் என்ற முப்பகுதியே ஸ்ரீசக்ரத்தில் திரிபுரமாக திரிகோணமாக விளங்குகிறது. ஸ்ரீசக்ரத்தில் மையஉச்சியிலுள்ள வட்டமான பிந்துஎன்பதே சிவன் என்றும், அதனைச்சுற்றி அடுத்துள்ள முக்கோணமாகிய யோனியே சக்தி என்றும் சிவசக்திகளின் தத்வரூபத்தைக்கருதி அபேதபாவனையோடு சக்ரத்தில் நாம் பூசித்தால்மட்டுமே இஷ்டசித்திகிட்டும். இதனை திரிசதிகூற்றில்

த்ரிகோண ரூபிணீ சக்திர் பிந்து ரூபஸ் சிவஸ் ஸ்மிருத:

என்றபடி யந்திரராஜம் எனப்படுகிற ஸ்ரீசக்ரத்தில் ஸர்வேச்வரன் பிந்துரூபமாகவும், தேவீ த்ரிகோணரூபமாகவும் விளங்குகிறார்கள் என்று விவரித்திருக்கிறது. அதுபோலவே மந்த்ரராஜம் எனப்படுகிற தேவியின் பஞ்சதசாக்ஷரீ மந்திரத்தில் 15 எழுத்துக்களில் மூன்று க எழுத்துகளும் இரண்டு ஸ எழுத்துக்களுமாக ஐந்தெழுத்துக்கள் சிவபாகம் என்ற ரகசியம் அறிவிக்கப்படுகிறது. மீதமுள்ள மந்திர எழுத்துக்கள்10ம் சக்திஅம்ச எழுத்துகள் என அறியலாம்.

கத்ரயம் ஹத்வயம் சைவ சைவோ பாகப் ப்ரகீர்த்தித:
சக்தி யக்ஷராணி சேஷாணி ஹ்ரீங்கார உபயாத்மக:.

என்ற வாக்யப்படி சிவசக்திஅக்ஷரங்கள் சேர்ந்தே பஞ்சதசீவித்யா பதினைந்து எழுத்து மந்திரம் என்றுஅறிக.

மேலும் ஷடாம்னாயங்களில் ஷண்மதங்களின் தேவதைகளையும் ஸ்ரீவித்யோபாஸகர்கள் பூஜிக்கிறார்கள். இது தவிர "பரா சாம்பவீ" மற்றும் "பராப் ராஸாத" (ஷோடசீ) மந்திரங்கள் பிரும்மவித்தையையும் ஆத்மவித்தையையும் போதிக்கின்றன.

இவ்விதம் தேவீபூஜையில் அனேக பேதங்களுண்டு, ஆசாரமுறைகள், பரம்பராபத்ததிகளின் மாறுதல்களும் உண்டு. அவைகள் பரம்பராக்ரமப்படி குருமுகமாக தீக்ஷைபெற்ற பின் பெறவேண்டியவைகள். ஸ்ரீவித்யாஉபாஸனை மற்றவைபோலல்ல.

அன்யாஸ் து ஸகலா வித்யா ப்ரகடா கணிகா இவ.
இயந் து சாம்பவீ வித்யா குப்தா குலவதூ ரிவ.

என்றவாக்யப்படி ஸ்ரீவித்யாஉபாஸனை என்பது மஹாகுஹ்யமானது, பரமரஹஸ்யமாக எப்போதும் வைத்துக்கொள்ள வேண்டியது. உபாஸகன் தனக்குத் தீக்ஷைசெய்து உபதேசம்

செய்வித்த ஒரேஆசார்யனையே என்றுமே உடையவனாக எண்ணி இருந்து, என்றும் அவரையே ஆசார்ய தேவோ பவ. ஆசார்யாய ப்ரியம் தனமாஹ்ருத்ய ப்ரஜாதந்தும் மா வ்யவத்சேத்ஸீ: என்ற யசுர்வேதோபநிஷத வாக்கியத்திற்கு இணங்க நடமாடும் கண்கண்ட இறைவன்இறைவியாகவே, ஸாக்ஷாத் ஈச்வரியாகவும் பாவித்தும், மதித்தும், நினைந்தும் போற்றி, அவருடைய கூற்றுகளைத் தவறாமல் பின்பற்றிவரவேண்டும். நம்மீதுள்ள சிவனாரின் கோபத்தைக்கூட குருவானவர் போக்கவல்லவர். ஆனால் குருவின்சாபத்தை ஒருவராலும் போக்கமுடியாது. இதனைக்கூறும் நீதிச்சான்று சிவே ருஷ்டே குரு த்ராதா குரௌ ருஷ்டே ந கஸ்சன என்பது ஆன்றோர்வாக்கு. எனவே சாக்த மந்திரதீக்ஷையைபெற்று, பயபக்தியுடனேயே தேவியை உபாஸிக்கவேண்டும். ஷோடசீமந்திரம் முதலானவற்றை அதீக்ஷிதர்களிடமும், ஆசாரமற்றவரிடமும் எக்காரணம்கொண்டும்,. ஒருபோதும் தெரிவித்தலாகாது, இதனைக்கூறும் சான்று

நாவித்யா வேதினே ப்ரூயாத் நாபக்தாய கதாசன.
ந சடாய ந துஷ்டாய நாவிச்வாஸாய கர்ஹிசித்.

என்பது தேவீவாக்கு. எவன் தகாதவரிடத்தில் வித்தையைக் கூறுவானோ அவனுக்குத்தீங்கு (அனர்தம்) விளையும். பஞ்சதசீ, ஷோடசீ ஆகிய மந்திரங்களை எவரும் குருமூலமாகப் பெற்றே கையாளவேண்டும். அதை அறிந்தால் மட்டும் போதாது, அதன் ரகசியஅமைப்புமுறை மஹிமைகளை அறிந்தபின்னரே உபயோகிக்க வேண்டும் என தேவியே கூறிஇருக்கிறாள்.

ராஜ்யம் தேயம் சிரோ தேயம் ந தேயா ஷோடசாக்ஷரீ.
ஸ்வமாத்ரு ஜாரவத் கோப்யா வித்யைஷா இத்யாகமோ ஜகு:

பெண்களை தேவியாகவேகருதி மாதரைவழிபடும் வழிமுறைக்கு கௌலமார்க்கம் என்று பெயர். கௌலமார்க்க தத்பர ஸேவிதா என்றதொரு லலிதாவின்திருநாமத்திற்கு ஏற்ப, சாக்தநெறியில் நிற்போரால் வணங்கத்தக்கவள் ஜகன்மாதா புவனேச்வரீ. இந்த வழிமுறையாகிய குலவித்தையால் அடையும் பயன்யாவை? என்பதை கோடிவாய் கோடிநாக்கு கொண்டும்கூட யாராலும் கூறிவிட இயலாது என்பதாக நூல்களில் பெருமை கூறப்படுகிறது.

வக்த்ரகோடி ஸஹஸ்ரைஸ் து ஜிஹ்வாகோடி சதை ரபி.
வர்ணிதும் நைவ சக்யம் தத் ஸ்ரீவித்யா ஷோடசாக்ஷரீ.

என்று வர்ணிக்கப்பட்டிருக்கிறது. தேவீமாஹாத்மியத்தில் 13வது அத்யாயத்தில் மேதஸ்மஹரிஷி பரமேச்வரியை உபாசிக்குமாறு அடியவர்களுக்கு ஆலோசனை கூறுவதால் இவளே வழிபடத்தக்கவள் என்பதையும், நமக்கு போகம்மோக்ஷம் இரண்டையும் அருளக்கூடிய அன்னை என்பதையும் அறியமுடிகிறது. இதனைக்கூறும் சான்று

தாமுபைஹி மஹாராஜ சரணம் பரமேச்வரீம்.
ஆராதிதா ஸைவ ந்ருணாம் போக ஸ்வர்கா பவர்கதா. (சப்தசதீ)

இதனை அபிராமிபட்டர் ‘‘வந்தே சரணம் புகுமடியாருக்கு வானுலகம் தந்தே பரிவொடு’’ என்று அபிராமிஅந்தாதியில் குறிப்பிடுகிறார். இவளே சிவசக்தியாயிருந்து ஐந்தொழிலாற்றும் அகிலாண்டேச்வரீ. இவளே ஐந்தொழிலாற்றும் ஐந்துதெய்வங்களின் உருவில்இருப்பவள் அதாவது, படைத்தலில் பிரம்மாணியாயும், காத்தலில் வைஷ்ணவியாயும், அழித்தலில் ரௌத்ரியாயும் மறைத்தலில் ஈச்வரியாயும் அருள்வதில் ஸதாசிவா எனப்படுகிற மனோன்மணியாயும் இவளே இருப்பதனை லலிதாஸஹஸ்ரநாம ஸ்துதியும் கூறி உறுதிப்படுத்துகிறது.

ஸ்ருஷ்டிகர்த்ரீ ப்ரம்மரூபா கோப்த்ரீ கோவிந்தரூபிணீ
ஸம்ஹாரிணீ ருத்ரரூபா திரோதானகரீச்வரீ
ஸதாசிவா அனுக்ரஹதா பஞ்சக்ருத்ய பராயணா.

–(லலிதாஸஹஸ்ரநாமஸ்தோத்ரம்)

சைவாகமங்களில் சக்தியைப்பிரியாது இருப்பதாலேயே சிவனார் சக்தர் என்றும் சக்திமான் என்றும் சித்கனர் என்றும் போற்றப்படுகிறார். சைவாகமம் ஒரேசிவசக்தியே பலஉருவமானவள் என்கிறது. சிவபூஜாஸ்தவத்தில் ஏகைவார்த்த ஈசசக்தி ரமிதா யா அனேகரூபா சிவா” எனப்படுகிறது.

சக்திச் சித்தநு ரீச்வரஸ்ய கரணம் ஞேயேஷு கார்யேஷு தத்
பேதைஸ் ஸோபஹிதா ப்ரயாதி குணதோ பேதம் க்ரியா ஞானத:
நித்யம் தத் ஸகலான்யகர்த்ரு நிஹிதா வர்த்மன் யசுத்தே ஸிதே
கிருத்யம் ஸைவ கரோதி பத்யனுகதா வாமாதி சக்தியாத்மிகா.

–(ஸித்தாந்தஸாரவாளீ)

இவ்விதமாக சைவஸித்தாந்தமானது சிவசக்தியே பதியை அனுசரித்து ஐந்தொழிலாற்றுவதையும், பலபெயரில் பலஉருவில் பஞ் சபூதங்கள் மற்றும் சூரியர் சந்திரர் யஜமானர் ஆகிய 8ரூபிணியாக அஷ்டமூர்த்திகளாயுமிருந்து அனைத்தையும் தருபவளாகிறாள் என்கிறது.

மேலும் இக்கருத்தினையே ஆதிசங்கரபகவத்பாதாள் ஸௌந்தர்யலஹரியில் சக்தியாலேயே சிவன் சக்தியுடையவராய் உள்ளதைக் குறிப்பிடுகிறார். அந்ததுதி இதுவேயாம்.

சிவஸ் சக்தியா யுக்தோ யதி பவதி சக்தப் ப்ரபவிதும்
நசேத் ஏவம் தேவோ ந கலு குசல: ஸ்பந்திது மபி.
அதஸ் த்வாம் ஆராத்யாம் ஹரிஹர விரிஞ்சாதிபி ரபி
ப்ரணந்தும் ஸ்தோதும் வா க்ருதமகிருத புண்யப் ப்ரபவதி.

(ஸௌந்தர்யலஹரி)

இதனால் தேவியே சிவனாரின் ஸகலஸாமர்த்தியகாரணி என்பதை அறியலாம். மேலும் ஸௌந்தர்யலஹரியில் ஆதிசங்கரரர் தேவி லலிதாம்பிகையின் கருணாகடாக்ஷ மஹிமையைத் தெளிவாகக் கூறியுள்ளார். இது இதுவே.

தனுப் பௌஷ்பம் மௌர்வீ மதுகரமயீ பஞ்ச விசிகா:
வஸந்தஸ் ஸாமந்தோ மலய மருதா யோதன ரத: .
ததாப் யேகஸ் ஸர்வம் ஹிமகிரிஸுதே காமபி க்ருபாம்
அபாங்காத் தே லப்த்வா ஜகதித மநங்கோ விஜயதே.

(ஸௌந்தர்யலஹரி)

இதன்பொருள், மன்மதன் அங்கமற்றவனாக அற்பபலமுள்ள காற்றையே வாஹனமாகவும், கரும்பை வில்லாகவும் வண்டுக்கூட்டங்களை நாணாகவும், ஐந்துவகையான மலர்களை கணைகளாகவும், வஸந்த(ருதுவை) பருவத்தைத் தோழனாகவும் உடையவனாயிருந்தும், பெருந்தவசியான ஸர்வேச்வரனாகிய பரமசிவனையே மலர்கனையால்தாக்கி பார்வதியை மணக்கச்செய்து, தேவர்களைக்காப்பாற்றிது ஈச்வரியின் கருணையின் பலத்தால் (கடைக்கண்பார்வையால்) அல்லவா? என்கிறார். மேலும் அதிலேயே பகவத்பாதாள் தேவீயின் பாததூளியின் மஹிமையைக் கூறுகையில்

தனீயாம்ஸம் பாம்ஸூம் தவ சரண பங்கேருஹ பவம்
விரிஞ்சிஸ் ஸஞ்சின்வன் விரசயதி லோகான் அவிகலம்.

வஹத்யேன் சௌரி: கதம்பி ஸஹஸ்ரேண சிரஸாம்
ஹரஸ் ஸம்க்ஷுத்தைநம் ந பஜதி பஸிதோத் தூளநவிதிம்.

இந்தசுலோகத்தில் ஜகன்மாதாவின் சக்தியால் பிரம்மாவிஷ்ணு ருத்ராதிகள் தங்களது செயல்களைப் புரிகிறார்கள் என்றுகூறி தேவியினுடைய பாததூளியின் மேன்மையை விளக்குகிறார்.

ஈச்வரியே எல்லோராலும் எளிதில் அடையக்கூடியவள். இதனை பக்திசுலபா, லப்யா, என்பதாகும். க்ஷிப்ரப்ரஸாதினீ கலியுகத்தில் விரைவில் அருளக்கூடியவள், காருண்யவிக்ரஹா கருணையே வடிவானவள் என்கிறது லலிதாஸஹஸ்ரநாமஸ்தவம். ஆதலால், யாவரும் ஜகன்மாதாவைப் பூஜிக்கத்தக்கவர்களே ஆப்பிரம்மாதி பிபீலிகாந்தஜனனீ என்றும், த்ரிலோக ஜனனீ என்றும், ஸ்ரீமாதா என்றும், வேதாகமங்கள்போற்றும் ஸ்ரீமாதாபுவனேச்வரியை தினமும் பூஜித்தலால் நாம் இஷ்டஸித்தியை பெறலாம் என்பது திண்ணம்.

ஸர்வதேவமயீம் ஈசாம் மஹாலக்ஷ்மீம் இமாம் ந்ருப.
பூஜயேத் ஸர்வதேவானாம் ஸ லோகானாம் ப்ரபுர் பவேத்.

என்கிறதேவீமாஹாத்மியத்தின் ரஹஸ்யவாக்கியப்படி ஸர்வேச்வரியை வணங்குவோர் உலகநாயகனாய் போற்றப்படுவார்கள்.

ஏவம் யப் பூஜயேத் பக்தியா ப்ரத்யஹம் பரமேச்வரீம்.
புக்த்வா காமான் யதாகாமம் தேவீஸாயுஜ்ய மாப்னுயாத்.

இந்தவசனப்படி பரமேச்வரியை ஒருமனதுடன் உபாசித்திடும் அடியவர்கள் இவ்வுலகில் அனைத்துவகையான சுகபோகங்களையம், அனுபவித்தபின்பு மறுமையில் தேவியோடுகூடியவர்களாய் தேவீலோகத்தில் பேரானந்த நித்யானந்த பெருவாழ்வைப்பெற்று மஹிழ்வார்கள். விரும்பிய பயன்களனைத்தையும் விரும்பியவாறேபெற்று இன்புற்று வாழ்வார்கள் என்று சாக்தாகம நூல்கள் கூறுகின்றன.

தேவி! ப்ரபன்னார்த்திஹரே! ப்ரஸீத.
ப்ரஸீத மாதர்! ஜகதோ கிலஸ்ய.
ப்ரஸீத விச்வேச்வரி! பாஹி விச்வம்
த்வம் ஈச்வரீ தேவி சராசரஸ்ய.

"ஓம் நமச்சிவாயை" இவ்வாறுகூறி மூவுலகஅன்னையை நாம் துதித்து வாழ்வோம்.

உ

ஸ்ரீ மாத்ரே நம:



திருமயிலை ஸ்ரீ கற்பகாம்பாள்
ஸ்ரீமாதா புவனேச்வரீ

மஹாவித்யா புவனேஸ்வரீ

தேவீபாகவதத்தில் வர்ணிக்கப்பட்டுள்ள மணித்வீபத்தின் அதிஷ்டாத்ரியாக அங்கு நித்தம் வசிப்பவள் புவனேசீமாதா. இவள் ஹ்ரீம் என்கிற ஹ்ருல்லேகாமந்திரத்தின் உருவத்தில் விளங்குபவள். மேலும் சிருஷ்டிக்ரமத்தில் மஹாலக்ஷ்மீ ஸ்வரூபத்திலிருப்பவள்.

யா ஆத்யா ப்ரக்ருதிர் நித்யா ஸர்வசாஸ்த்ரேஷு கோபிதா.
யஸ்யாஸ் மரண மாத்ரேண ஸர்வ பாபைப்ர முச்யதே.
ஆராதனாத் பவேத் யஸ்யா ஜீவன்முக்தோ நசம்சய:

இவள் ஆதிசக்திபகவதி ஆகிறாள் என்கிறது ருத்ரயாமளம். புவனேச்வரீ சிவபெருமானுடைய அனைத்து லீலாவிலாஸத்திற்கும் துணைசெய்பவள். இவள் ஸௌம்ய ஸ்வரூபிணியாக சாந்தஉருவில் சிவந்ததிருமேனியளாய் விளங்குபவள். அடியவர்களுக்கு அபயத்தையும் அனைத்து ஸித்திகளையும் அளிப்பது இவளின் இயற்கைகுண இயல்பாகும். தச மஹாவித்யா சக்திகளில் பத்தில் ஐந்தாவதுவித்யாவாக கூறப்படுபவள் புவனேச்வரீ. தேவீபுராணத்தை அனுசரித்து மூலப்ரகிருதி என்ற மற்றொருபெயரும் புவனேச்வரிக்கு கூறப்படுகிறது. ஈச்வரராத்ரியில் எப்பொழுது உலகமனைத்தும் செயலிழந்து ஒடுங்கி இருக்குமோ, அப்பொழுது அந்த தனித்த பரப்ரம்மத்துடன் ஈச்வரராத்ரிக்கு அதிஷ்டாத்ரியாக கூடி இருப்பவள் இந்த புவனேச்வரியே. இவளுக்கு அங்குசமும் பாசமுமே முக்யஆயுதங்களாகும். அங்குசம் கட்டுப்படுத்துகிற நியத்ரணசக்தியை உணர்த்துகிறது. பாசாயுதம் ராகதத்வமாகிற காமனாரூப விருப்பங்களையும், அனுராகம்என்கிற ஆஸக்திகளை உணர்த்துகிறது. இவ்விதமாக அனைத்துவகையிலும் ஸ்ருஷ்டியின் ஆரம்பகாலத்து ஆதாரமான மூலப்ரகிருதியாக புவனேச்வரீ விளங்குகிறாள். உலகத்தை அழகுற படைக்கும் காரணத்தால் வாமாதேவியாகவும், சிவமயீ என்று விளங்கும் ஆதிசக்தியாக இருக்கும் காரணத்தால் ஜ்யேஷ்டா சக்தியாகவும், அவ்வாறே செயல்களை செய்விக்கும் நாயகியாய் இருந்து செயல்களுக்குரிய பயனைக் கொடுப்பவளும், தண்டனைவழங்கி ஜிவராசிகளை நன்நெறிப்படுத்துவதாலும் ரௌத்ரீ சக்தியாகவும், விளங்குபவள் புவனேசியே. திருவானைக்காவல், திருமயிலை முதலியதலத்தின் அனைத்து சிவாலயங்களிலும் விசேஷமானமூலாலயசக்தியாக

விளங்குபவள் புவனேச்வரியே!. பகவானான சிவனாரின் வாமபாகத்தைப் பிரியாதிருப்பவள் புவனேச்வரியே. புவனேச்வரியின் சேர்க்கையாலேயே புவனேச்வரர் என்று ஸதாசிவரராக ஸர்வேச்வராகத் தகுதிபெற்று சிவன் விளங்குகிறார். மஹாநிர்வாணதந்திரத்தை அனுசரித்து கூறப்படுவதாவது, ஸம்பூர்ண மஹாவித்யா சக்திகள் யாவரும் பகவதியான புவனேச்வரியின் ஸேவையில் எப்பொழுதும் ஈடுபட்டு இருப்பவர்களாவார்கள். இவளே நிர்வாணம் எனப்படுகிற மோக்ஷமாகிற கைவல்யபதவியைத் தருபவள். கைவல்யபத தாயினீ, சிவஞான ப்ரதாயினீ, முக்தி தாயினீ, என்று கூறப்படுபவள். ஸப்தகோடிமஹாமந்திரங்களும் இவளையே எப்பொழுதும் துதித்து ஆராதிக்கின்றன. "வித்யாஸ் ஸமஸ்தாஸ் தவ தேவிபேதா: என்றவாறு. தசமஹாவித்யைகளும் ஞானஸ்வரூபமான பத்துநிலைப்படிகளாகும். காளீதத்வம் முதலாக கமலாதத்வம் வரையிலான பத்தும் தசமஹாவித்யாக்கள். காளீ, தாரா, சின்னமஸ்தா, ஷோடாசீ, புவனேச்வரீ, த்ரிபுரபைரவி, தூமாவதீ, பகளாமுகீ, மாதங்கீ, கமலா, ஆகிய சக்திகள் 10ம் முறையே கூறப்படும். இவைகள் ஸர்வஸ்யாத்யாவான மஹாலக்ஷ்மீ என்கிற கமலா முதலாக படிப்படியாக மஹாவித்யாகாளீ வரையிலாக முறையே உயர்ந்துவிளங்குகிற ஸச்சிதானந்த பரப்ரம்மசக்திவடிவங்களாம். காளீதத்துவம் முதலாகவெளிப்பட்டு கமலாதத்வம்வரையில் பத்துநிலைகளில் விளங்குபவை. சைவஸித்தாந்தத்தில் சிவஞானஸ்வரூபம் தசகார்யமாகவே விளக்கப்பட்டுள்ளதும் இங்கு உற்றுநோக்கி அறியத்தக்கது. இவற்றில் அவ்யக்தநிலையில் உள்ள புவனேச்வரியே "த்வயைகயா பூரிதம் அம்ப ஏதத்" என்ற தேவர்களின் கூற்றின்படி வெளிப்பட்டநிலையில் வ்யக்தமாகி பிரம்மாண்டங்களின் வடிவம்தாங்கி இருப்பவளாவாள். ஜகத்சக்திமயம் வித்யாத் சக்திம் ப்ரேரயிதா சிவ: என்கின்றன சிவாகமங்கள். அவ்வாறே பிரளயத்தில் ஆதிசக்தியாகிய மஹாலக்ஷ்மியான கமலாவிலிருந்து வெளிப்பட்ட படைக்கப்பட்ட இப்பிரபஞ்சங்கள்யாவும் மஹாகாளீ வித்யாவில் முற்றும் ஒடுங்கியவாறு விளங்குவதால் இவளே மூலப்ரகிருதி எனப்படுகிறாள். இதனாலேயே காளீ, ஜகத்தாத்ரீ அதாவது உலகனத்தையும் தாங்கி, ஒடுக்கிவைத்துக் காத்து, ரக்ஷிப்பவள் என்ற பொருளில் தாத்ரீ என்றழைக்கப்படுகிறாள். மூத்தவள்என்றபொருளில் ஆத்யா என்றபலநூல்களில் கூறப்படுகிறாள்.

தேவீ மாஹாத்மியதுர்காஸப்தசதியினுடைய பதினொன்றாவது அத்யாயத்தின் மங்களாசரணஸ்துதியில் கூறப்பட்டுள்ளது இங்கு அறிந்து உணரத்தக்கது. அதாவது தேவியாகிய நான் மனதில் புவனேச்வரீ தேவியை தியானம் செய்கிறேன். அவளுடைய அழகிய திருமேனியின் பேரொளிக்காந்தி உதயகாலத்து சூரியனின் ஒளியை ஒத்ததாக சிவந்தநிறத்தில் உள்ளது. அவளது தலைமீது சந்திரனே மகுடமாக உள்ளது. முக்கண்கள் முகத்தில் ஒளிவீசுகின்றன. அவளது கைகளில் பாசாங்குசமும் அபயவரதமும் விளங்குகின்றன என்று கூறப்படுவதால், தேவியே தியானிக்கும் மஹாதேவீ புவனேசீ என்பதை நன்கு அறியலாம்.

வித்யாஸு சாஸ்த்ரேஷு விவேகதீபேஷு
ஆத்யேஷு வாக்யேஷுச கா த்வதன்யா
மமத்வ கர்தே அதி மஹாந்தகாரே
விப்ராமயத் ஏதத் அதீவ விச்வம் (11ல்31)

என்ற சப்தசதியின் துதிப்படி உலகில் அனைத்தையும் தாங்கிக்காக்கும் புவனேச்வரியைத்தவிர வேறு ஒரு சக்தி இல்லை என்பதாம்.

விச்வேச்வரி! த்வம் பரிபாஸி! விச்வம்
விச்வாத்மிகா தாரயஸீதி விச்வம்.
விச்வேச வந்த்யா பவதீ பவந்தி
விச்வாச்ரயா யே த்வயி பக்தி நம்ரா:.

இந்த சப்தசதீ துதியின்படி அனைத்து புவனங்களையும் படைத்தும் காத்தும் ஒடுக்கியும் தாங்கிக்காக்கும்நாயகி புவனேச்வரியே. இவளே அனைத்துலகத்தவராலும், உலகைச் சார்ந்தோராலும் வணங்கப்படுபவள் என்பதை அறியலாம். இவ்வாறு பகவதி புவனேச்வரியே அவ்வப்போதும் இவ்வுலகனைத்தையும் பரிபாலனம் செய்கிறாள் என்றும் கூறப்படுகிறது.

ஏவம் பகவதீ தேவீ ஸா நித்யாபி புனப்புன:
ஸம்பூய குருதே பூப ஜகதப் பரிபாலனம்.
தயைதன்மோஹ்யதே விச்வம் ஸைவ விச்வம் ப்ரஸூயதே
ஸா யாசிதா ச விக்ஞானம் துஷ்டா ருத்திம் ப்ரயச்சதி.
வ்யாப்தம் தயைதத் ஸகலம் ப்ரம்மாண்டம் மனுஜேச்வர.

(மார்க்கண்டேய புராணசப்தசதி–12ல்–36,37)

இவ்விதமாக தேவியின் அனைத்தையும் தாங்கிடும் காளிக்கும், அனைத்தையும் நிறைந்து பரிபாலிக்கும் புவனேச்வரிக்கும், தாரணா

மற்றும் பூரணா என்ற இருசொல் விளக்கத்தால் ஒன்றுக்கொன்று துணைநின்று வலுசேர்த்து, விளங்குவதாலும், பலவாறு ஒற்றுமை விளங்குவதாலும் பேதமில்லை என்பதாக, மஹாவித்யாகாளிக்கு நிகரானது புவனேச்வரீ என்று ப்ருஹன்நீலதந்த்ரம் கூறுகிறது. இதில் அவ்யக்தப்ரகிருதி ரூபமான புவனேச்வரியே, ரக்தவர்ணமாய் விளங்குகிற சுந்தரீ எனப்படுகிற காளீ எனக்கூறப்படுகிறது. இவளே சப்தசதீ 11ம் அத்யாயதேவதையான புவனேச்வரீ மற்றும் பவானீ ஆகிறாள்.

தேவீபாகவதத்தில் கூறப்படும் புவனேச்வரியின் மஹிமையானது, துர்கமன் என்ற அசுரனுடைய கொடுஞ் செயலால் பிரம்மாதி தேவர்கள் ஒன்றுகூடி இமயமலையில் ஸர்வகாரணரூபாவான புவனேச்வரியை ஆராதித்தனர். அப்பொழுது விச்வேச்வரீ பிரஸன்னமாகி தம் மஹிமையை வெளிப்படுத்தி உலகைக் காத்தருளினாள். அப்பொழுது அவளுடைய கைகளில் அம்பு, தாமரைப்பூ, காய், கனி, வேர்கிழங்கு, முதலியன இருந்தன. அவள் தனது பல கண்களிலிருந்து ஆயிரக்கணக்கில் தாராயாக கண்ணீரைப்பெருக்கி நல்லநீரை வெளியிட்டாள். இந்த ஜலத்தினால் பூமியின் அனைத்து உயிர்களும் குடிநீர்அருந்தி உயிர்பெற்று மகிழ்ந்தன. கடல்கள் நதிகள்யாவும் ஆழமாக நிறம்பின. அனைத்து மூலிகைத் தாவரங்களும் தோன்றிப்பெருகின. தனது கைகளில் விளங்கிய காய்கள், கனிகள், வேர்க்கிழங்குகள், முதலியவற்றால் உலகத்துஉயிரினங்களுக்கு உணவளித்து, பாதுகாத்து அவற்றை அருளாட்சிசெய்த காரணத்தால், பகவதீ புவனேச்வரியே சதாக்ஷீ என்றும் சாகம்பரீ என்றும், மேலும் துர்கமாசுரை அழித்து உலகைக் காத்ததால் துர்கை என்றும், தேவர்களை மீண்டும் உரிய நிலையில் அறவழியில் செயல்படுத்தியதால் புவனேச்வரீ என்றும் பெரும்புகழ் பெற்றாள் என்று கூறப்படுகிறது. இந்த வரலாறு மார்க்கண்டேய புராணத்திலும், இவ்வாறே தேவீமாஹாத்மிய சப்தசதீதுதியிலும் தேவியாலேயே கூறப்பட்டும் உள்ளது. இதனால் புவனேச்வரீ என்ற ஆதிசிவசக்தியே, மூலப்ரகிருதிரூபிணியாகவும் ஸர்வேச்வரியாகவும், ஸௌம்யரூபிணியாகவும், மஹாவித்யாவாகவும் பலபெயர் உருவம் செயல் தாங்கி மூவுலகையும் காத்தவளாகஅறியத்தக்கவள். பகவதியான புவனேச்வரியை உள்ளன்போடு முறையே உபாஸிப்பவர்களுக்கு ஸத்புத்ரப்ராப்தி உண்டாகும். மகப்பேறு நல்கும் மாதேவீ மாதா புவனேச்வரியே என்கின்றன சாக்த நூல்கள். யோகமோக்ஷமிரண்டையும் தருபவள் புவனேச்வரீ தேவியேஆவாள்.

புவனேச்வரியின் கவசம் ருத்ரயாமளத்தில் கூறப்பட்டு உள்ளது. நீலஸரஸ்வதீ தந்த்ரத்தில் புவனேச்வரியினுடை ஹ்ருதயஸ்தவமந்த்ரம் கூறப்பட்டுள்ளது. மஹாதந்த்ரார்ணவம் என்ற நூலில் புவனேச்வரிக்கு சிறப்பான ஆயிரம்திருநாமங்கள் ஸஹஸ்ரநாமாவளி கூறப்பட்டு உள்ளது. லலிதாஸஹஸ்ரநாமத்தில் கண் இமைத்தலால் உலகைப்படைக்கும் அன்னை என்பதாக உன்மேஷ நிமிஷோத்பன்ன விபன்ன புவனாவள்யை நம: என்ற பெயர் புவனேச்வரி மஹிமையை உணர்த்துவதாகும். இவளே மூலபிரகிருதி என்ற அடிப்படையான முக்கிய ஆதார சக்தியினுடைய வெளிப்பட்டும் வெளிப்படாமலும் இருக்கிற இருவகையானசக்தி, வ்யக்தாவ்யக்தஸ்வரூபிணி என்றும் வியாபினீ என்றும், பலவகையான உருவம் கொண்டுள்ளதால் விவிதாகாரா என்றும் இவளே போற்றப்படுகிறாள் என்பதை நாம்நன்கு அறியலாம். ஆதலால் இத்தகைய ஆதிபராசக்தியை, அன்புடன் ஆராதித்து, இஹபரசுகத்தையும் இஷ்டஸித்திகளையும் பெற்றுஉய்ய என்றும் நம்மை ஈடுபடுத்திக்கொள்வோம். அறநெறியில் அர்ச்சித்து "ஸம்ஸாரபங்கநிர்மக்ன ஸமுத்தரணபண்டிதா" அவளருள் பெற்று எனப்படுகிற பிறவிப்பெருங்கடலை விட்டுநீங்கி பேரின்பநிலையை பெறுவோம். த்ரைலோக்ய மோஹின்யை வித்மஹே விச்வஜனன்யை தீமஹி தன்னோ சக்திப் பிரசோதயாத் என்பதால் புவனேச்வரியின் காயத்ரீ மந்திரம் ருத்ரயாமளத்தில் கூறப்பட்டுள்ளது. இவளுக்கு பலமந்திரங்கள் கூறப்பட்டுள்ளன. அவற்றுள் ஏகாக்ஷரமந்த்ரம் ஹ்ரீம் என்பதாம். இதற்கு சக்தி ரிஷி, காயத்ரீ சந்தம், புவனேச்வரீ தேவதை என்றும், ஹம் என்பது பீஜம் ஈகாரமானது. சக்தி, ரேபம் எனப்படும் ர என்பது கீலகம் என்றும் இதனைக் கொண்டு நால்வகையான அறம் பொருள், இன்பம், வீடு, பேறு என்கிற புருஷார்த்தங்களையாவரும் அடைந்திட முறைப்படி ஜபம் பூஜை முதலியவைகளை செய்து பயன்பெறலாம். இவளுடைய மூன்றெழுத்து மந்திரம் ஐம் ஹ்ரீம் ச்ரீம் என்பதாகும். இதற்கும் ரிஷி முதலானவையாவும் ஏகாக்ஷரத்திற்குக் கூறப்பட்டவாறே கொண்டு கையாள்வதும் முறை. பகவதி புவனேச்வரியை பூஜித்து மூலமந்திரத்தின் ஜபஸமர்ப்பணத்தை முடித்த பிறகு அவளுக்குரிய கவசம் கட்கமாலா, ஹ்ருதயம் ரஹச்யம் பஞ்சரம், ஸ்தோத்ரம் முதலானவைகளையும், ஸஹஸ்ர நாம த்ரிசதிநாம அஷ்டோத்தரசதநாம ஸங்கீர்த்தனம் அல்லது நாமாவளிபாராயணம் செய்வதனால் குறைவற்ற புண்ணியத்தையும், விரும்பியபயனைடைவதையும் பெறலாம் என்பது சாக்ததந்திர முடிவாகும். இவளது கவசகத்திற்கு த்ரைலோக்ய மங்களகவசம்

என்ற சிறப்புப்பெயர் இருப்பதால் மஹிமையை உணரலாம் புவனேச்வரீ சக்ரயந்திரஅமைப்பானது நடுவிலிருந்து அறுகோணம், வட்டம், எட்டுதளம், வட்டம், பதினாறுதளம், பூபுரம் அகியவைகளைக் கொண்டதாக முறைப்படிஅமைத்து அதில் முறைப்படி அவளது ஸப்தாவரண தேவதைகளை அல்லது நவாவரணதேவதைகளை பூசித்திடவேண்டும்.

உத்யத் சூர்ய ஸஹஸ்ராபாம் சசாங்க க்ருத சேகராம்
பத்மாஸனாம் ஸ்மேரமுகீம் சூர்யேந்த்வக்னி விலோசனாம்
ரக்தவஸ்த்ரதராம் பத்மபாசாங்குச வரான் கரை:
ததீம் புவனேசாநீம் த்யாயேத் ஹ்ருத்பங்கஜே சிவாம்.

என்று பைரவர்கூறிய புவனேச்வரீ ரஹச்யஸ்தவத்தில் இவளது ஸ்வரூபம் தியானிக்கப்பட்டுள்ளது. இவளது 3 எழுத்து மந்திரத்தில் உள்ள முதலாவதான ஐம் என்கிற வாக்பவபீஜாக்ஷர ஜபத்தினால் ஞானத்தால் பரிசுத்தமாகும், சக்திபீஜமாகிய ஹ்ரீம்கார ஜபத்தால் ஸ்வர்கலோக சுகபோகப்ராப்திகிட்டும், ஸ்ரீம் என்ற மாயாச்ரீபீஜ ஜபத்தால் ஸ்ரீபுரத்தில் போகமோக்ஷம் செல்வசெழிப்பு ஏற்படும் என்கிறது புவனேச்வரீ ரகசியம் என்னும் நூல்.

மாயாபீஜம் யோ ஜபேத் தே மஹேசீ
தத்வ மந்த்ரீ பக்திமான் முக்திகாங்க்ஷீ.
த்வத் ஸாத்ருச்யாத் யாதி த்வத் தாம ரம்யம்
நாகஸ்த்ரீபிர் வீஜ்யமானஸ் ஸுதாலை: (புவனேச்வரீரஹஸ்யம்)

ஸ்ரீ புவனேச்வரீ அஷ்டோத்தரசத நாமஸ்தவம்

(ருத்ரயாமளதந்த்ரத்தில் பார்வதீகேட்க சிவனார்அருளியஸ் தவராஜம்)

கைலாஸசிகரே ரம்யே நாநாரத்னோபசோபிதே.
நரநாரீஹிதார்த்தாய சிவம் பப்ரச்ச பார்வதீ. 1

தேவ்யுவாச

புவனேச்வரீ மஹாவித்யா நாம்நாம ஷ்டோத்தரம் சதம்.
கதயஸ்வ மஹாதேவ யத்யஹம் தவ வல்லபா. 2

ஈச்வர உவாச

ச்ருணு தேவி மஹாபா3கே3 ஸ்த4வராஜமித3ம் சுபம்.
ஸஹஸ்ரநாம்நா மதிகம் ஸித்திதம் மோக்ஷஹேதுகம். 3

சுசிபிப் ப்ராத ருத்2தாய படிதவ்யம் ஸமாஹி2தை:3
த்ரிகாலம் ச்ரத்தயா யுக்தைர் ஸர்வகாம பலப்ரதம். 4

ஓம் அஸ்ய ஸ்ரீபுவனேச்வரீஅஷ்டோத்தரசதநாம.
ஸ்தோத்ரஸ்ய சக்திரிஷி: காயத்ரீ சந்த:.

புவனேச்வரீ தேவதா சதுர்வர்கஸாதனே விநியோக:.
ஓம் மஹாமாயா மஹாவித்யா மஹாயோகா மஹோத்கடா
மாஹேச்வரீ குமாரீ ச ப்ரம்மாணீ ப்ரம்மரூபிணீ. 5

வாகீச்வரீ யோகரூபா யோகினீகோடி ஸேவிதா.
ஜயா ச விஜயா சைவ கௌமாரீ ஸர்வமங்களா. 6

ஹிகுளாச விலாஸீச ஜ்வாலிநீ ஜ்வாலரூபிணீ.
ஈச்வரீ க்ருர ஸம்ஹாரீ குலமார்க ப்ரதாயினீ. 7

வைஷ்ணவீ ஸுபப4கா3காரா ஸுகுல்3யா குலபூஜிதா.
வாமாங்3கா வாமாசாரா ச வாமதேவப்ரியா ததா. 8

டா3கினீ யோகி3னீரூபா பூதேஷீ4 பூதநாயிகா.
பத்மாவதீ பத்மநேத்ரா ப்ரபுத்தாச ஸரஸ்வதீ. 9.

பூ4சரீ கே2சரீ மாயா மாதங்கீ புவனேச்வரீ.
காந்தா பதிவ்ரதா ஸாக்ஷீ ஸுசக்ஷுக் குண்டவாஸிநீ. 10

உமா குமாரீ லோகேசீ ஸுகேசீ பத்மராகி3ரீ.
இந்த்ராணீ ப்ரம்மசாண்டாளீ சண்டிகா வாயுவல்லபா. 11

ஸர்வ தாதுமயீ மூர்த்திர் ஜலரூபா ஜலோதரீ.
ஆகாசீ ரணகா சைவ ந்ருகபால விபூஷணா. 12

நர்மதா மோக்ஷதா சைவ காம தர்மார்த்த தாயிநீ.
காயத்ரீ சாத ஸாவித்ரீ த்ரிஸந்த்யா தீர்த்தகாமிநீ. 13

அஷ்டமீ நவமீ சைவ தசம் யேகாதசீ ததா.
பௌர்ணமாஸீ குஹூரூபா திதிமூர்த்தி ஸ்வரூபிணீ. 14

ஸுராரி நாசகாரீ ச உக்ரரூபா ச வத்ஸலா.
அனலா அர்தமாத்ரா ச அருணா பீநலோசனா. 15

லஜ்ஜா ஸரஸ்வதீ வித்யா புவாநீ பாபநாசிநீ.
நாகபாசதரா மூர்த்தி ரகாதா த்ருத குண்டலா. 16

க்ஷயரூபா க்ஷயகரீ தேஜஸ்விநீ சுசிஸ்மிதா.
அவ்யக்தா வ்யக்தலோகா ச சம்புரூபா மனஸ்விநீ. 17

மாதங்கீ மத்தமாதங்கீ மஹாதேவப்ரியா ஸதா.
தைத்யஹா சைவ வாராஹீ ஸர்வசாஸ்த்ரமயீ சுபா. 18

பலச்ருதி:

ய இதம் படதே பக்த்யா ச்ருணுயாத் வா ஸமாஹித:.
அபுத்ரோ லபதே புத்ரான் நிர்தனோ தனவான் பவேத். 19

மூர்க்கோபி லபதே சாஸ்த்ரம் சௌரோபி லபதே கதிம்.
வேதானாம் பாடகோ விப்ர: க்ஷத்ரியோ விஜயீ பவேத். 20

வைச்யஸ்து தனவான் பூயாத் சூத்ரஸ்து சுகம் ஏததே.
அஷ்டம்யாம் ச சதுர்தச்யாம் நவம்யாம் சைகசேதஸ:.

யே படந்தி ஸதா பக்த்யா ந தே வை துக்கபாகின:.
ஏககாலம் த்விகாலம் வா த்ரிகாலம் வா சதுர்த்தகம். 22

யே படந்தி ஸதா பக்த்யா ஸ்வர்கலோகே ச பூஜிதா:.
ருத்ரம் த்ருஷ்ட்வா யதா தேவா பன்னகா கருடம் யதா. 23

சத்ரவப் ப்ரபலாயந்தே தஸ்யவக்த்ர விலோகனாத்.

இதி ஸ்ரீ ருத்ரயாமளே புவனேச்வரீ அஷ்டோத்தரசத
நாமஸ்தோத்ரம்

புவனேச்வரீ ஸ்தவராஜாஷ்டகம்

தேவீ உவாச

ப்ரபோ4 ஸ்ரீபை4ரவச்ரேஷ்ட: த்3யாளுர் ப4க்தவத்ஸல:.
பு4வனேசீ ஸ்தவம் ப்ரூஹி யத்3யஹம் தவவல்லப4ா.

ஈச்வர உவாச

ச்ருணு தேவி ப்ரவக்ஷ்யாமி புவனேச்யஷ்டகம் சுபம்.
ஏந விக்ஞானமாத்ரேண த்ரைலோக்யம் வசகம் பவேத்.

ஓம். நமாமி ஜகதா தாராம் புவனேசீம் பவப்ரியாம்
புக்தி முக்திப்ரதாம் ரம்யாம் ரமணீயாம் சுபாவஹாம்.
த்வம் ஸ்வாஹா த்வம் ஸ்வதா தேவி த்வம் யக்ஞா யக்ஞநாயிகா.
த்வம் நாதஸ் த்வம் தமோஹந்த்ரீ வ்யாப்ய வ்யாபகவர்ஜிதா.
த்வமாதாரஸ் த்வமிஜ்வால்ய ஞானாஞேயம் பரம்பதம்.
த்வம் சிவஸ் த்வம் அஜோ விஷ்ணுஸ்த் மாத்மா பரமோவ்யய:.
த்வம் காரணம் ச கார்யம் ச லக்ஷ்மீ ஸ்த்வம் ச ஹுதாசன:.
த்வம் ஸோமஸ் த்வம் ரவிக் காலஸ் த்வம் தா4தாஸ் த்வம் ச மாருத:
காயத்ரீ த்வம்ச ஸாவித்ரீ த்வம் மாயா த்வம் ஹரிப்ரியா.
த்வமே வைகா பராசக்திஸ் த்வமேவ குருரூப த்ருக்.
த்வம் கலாத்வம் கலாதீதா த்வமேவ ஜகதாம் ச்ரிய:.
த்வம் ஸர்வகார்யம் ஸர்வஸ்ய காரணம் கருணாமயீ.

பலச்ருதி:

இதமஷ்டகமாத்யாயா புவனேச்யா வராநநே.
த்ரிஸந்த்யம் ச்ரத்தயா மர்த்யோ யப் படேத் ப்ரீதமானஸ:
ஸித்தயோ வசகாஸ் தஸ்ய ஸம்பதோ வசகா க்ருஹே.
(இதி ருத்ரயாமளே புவனேசீஸ்தவராஜஸ் ஸமாப்த:)

புவனேசீ (ப்ரார்தனா) ஸ்துதி

ப்ரஸீத ப்ரபஞ்சஸ்வரூபே ப்ரதானே
ப்ரக்ருத்யாத்மிகே ப்ராணினாம் ப்ராணஸம்ஞே

ப்ரணோதும் ப்ரபோ ப்ராரபே ப்ராஞ்ஜலிஸ் த்வாம்
ப்ரக்ருத்யா ப்ரதர்க்ய ப்ரகாம ப்ரவ்ருத்தே (ப்ரபஞ்சஸாரதந்த்ரம்) 1

நமஸ் ச்ரோத்ர சர்மாஸி ஜிஹ்வாக்ய நாஸாஸ்ய
வாக்பாணி பத்யாயு ஸோபஸ்தரூபே
மனோ புத்யஹங்கார சித்தஸ்வரூபே
விரூபே நமஸ்தே விபோ விச்வரூபே 2

ப்ரபா கீர்த்தி காந்தீ திவா ராத்ரி ஸந்த்யா:
க்ரியா சா த மிஸ்ரா க்ஷுதா புத்தி மேதா:
த்ருதிர் வாங்மதிஸ் ஸந்மதிஸ் ச்ரீச்ச காந்திஸ்
த்வமேவேசி யேன்யே ச சக்தி ப்ரபேதா:. 3

நமஸ்தே நமஸ்தே நமஸ் தத்வரூபே
ஸமஸ்தேஷு வஸ்துஷ் வனுஸ்யூதரூபே.
அதிஸ்தூல ஸூக்ஷ்ம ஸ்வரூபே மஹேசி
ஸ்மிருதே போதரூபே ப்யபோத ஸ்வரூபே. 4

மனோவ்ருத்திரஸ்து ஸ்ம்ருதுஸ்தேஸமஸ்தா.
ததா வாக்ப்ரவிருத்திஸ் ஸ்திதிஸ் ஸ்யான் மஹேசி.
சரீர ப்ரவ்ருத்திஸ் ப்ரணாம க்ரியா ஸ்யாத்.
ப்ரஸீத க்ஷமஸ்வ ப்ரபோ ஸந்ததம் மே. 5

ஸித்திதேவீத்யானம் (புவனேசீரூபம்) (ப்ரபஞ்சஸாரதந்த்ரம்)

ஸ்மரேத் ரவீந்த்வக்னி விலோசனாம் தாம்
ஸபுஸ்தகாம் ஜாப்யவடீம் ததானாம்
ஸிம்ஹாஸநாம் மத்யம யந்த்ரஸம்ஸ்தாம்
ஸ்ரீதத்வ வித்யாம் பராம்பாம் பஜாமி.

***

அதானந்தமயீம் ஸாக்ஷாத் சப்தப்ரம்மஸ்வரூபிணீம்
ஈடே ஸகலஸம்பத்யை ஜகத் காரண மம்பிகாம்.

சஞ்சன்மௌக்திக ஹேமமண்டலயுதா மாதா அதிரக்தாம்பரா.
தன்வங்கீ நயனத்ரயாதிரு சிரா பாலார்க்கவத் பாஸுரா.

***

யா திவ்யாங்குச பாசபூஷிதகரா தேவீ ஸதா அபீதிதா.
சித்தஸ்தா புவனேச்வரீ பவது நஸ் ஸேயம் முதே ஸர்வதா.

–(புவனேசீ சஞ்சதிதி ஸ்தோத்ரம்

ஸ்ரீ புவனேச்வரிக்கு சாக்ததந்த்ரங்களில் பலவகையில் சிறந்த துதிகள் இடம்பெற்றுள்ளன. அவற்றுள், ருத்ரயாமளதந்த்ரத்தில் பைரவேச்ரவரால் கூறப்படும் பலதுதிகள் உள்ளன. ருத்ரயாமளத்தில் உள்ள புவனேச்வரீக்கு த்ரைலோக்யமங்களகவசம், பஞ்ஜர ஸ்தோத்ரம், ஸ்தவராஜாஷ்டகம், 108, 1008நாமஸ்தோத்ரம். ஆனந்தமயீஸ்தவம், நீலஸரஸ்வதீதந்த்ரத்தில் புவனேசீஹ்ருதயஸ்தோத்ரம், புவனேச்வரீ ரஹஸ்யம் என்றதந்த்ரத்தில் புவனேசீரஹஸ்யஸ்தவம், புவனேசீ கட்கமாலாஸ்வதம், ஸ்ரீமஹாதந்த்ரார்ணவநூலில் 4வது பகாரத்தையே முதலெழுத்தாகக்கொண்ட 1008 புவனேச்வரீ ஸஹஸ்ரநாமஸ்தோத்ரம் ப்ரபஞ்சஸாரதந்த்ரத்தின் புவனேசீஸ்துதி, மேலும் ப்ருத்வீதராசார்யரின் புவனேச்வரீ ஸ்தோத்ரம் முதலிய பலவகை துதிகள்புவனேச்வரிக்கு காணப்படுகின்றன.

சாக்ததந்த்ரங்களில் ஸர்வஸித்திதரும் பெருந்தேவிகள் ஸித்தவித்யா என்றும் மஹாவித்யா என்றும் பத்துசக்திகள் கூறப்படுகின்றனர். இத்தேவியர்களை தசமஹாவித்யா என்று அழைத்திடுகின்றனர். சாக்தஸமய நிருத்தரதந்த்ரம் என்ற நூல் இவர்களை முறைப்படுத்திக் கூறுகிறது. அதனைக்கூறும் சான்று

காளீ தாரா மஹாவித்யா ஷோடசீ புவனேச்வரீ.
பைரவீ, சின்னமஸ்தா ச வித்யா தூமாவதீ ததா.
பகளா ஸித்தவித்யா ச மாதங்கீ கமலாத்மிகா.
ஏஷா தசமஹாவித்யா: ஸித்தவித்யா: ப்ரகீர்த்திதா:

–(நிருத்தரதந்த்ரம்)

இத்துடன் அன்னபூர்ணா, நித்யா, துர்கா, த்வரிதா த்ரிபுரசுந்தரீ, ஸரஸ்வதீ, ஜயதுர்கா, பத்ரா என்று வேறு எட்டுசக்திகளையும் சேர்த்து வித்யாக்களை நிருத்தரதந்த்ரமே பதினெட்டுவகையாக சாக்ததந்த்ரங்களின் கூற்றாகக் கூறியுள்ளது.

ஸா வித்யா பரமா முக்தேர் ஹேதுபூதாஸ நாதநீ.
ஸம்ஸாரபந்தஹேதுஸ்சஸைவ ஸர்வேச்வரோச்வரீ (சப்தசதீ)

இந்த பதினெட்டுவகை அல்லது பத்துவகை வித்யாசக்திகளுக்கும் பதியானவர் சூலபாணியாகிய சிவனாரே என்றும் கூறுகின்றன. **அஷ்டாதசானாம் வித்யாநாம் ஆதிகர்த்தா சிவஸ்மிருத:** இவ்வாறு வரிசைப்படுத்தியுள்ள தசமஹாவித்யா எனும் பத்துசக்திகளில் சிலவற்றில் நான்காவதாகவும் சிலவற்றில் ஐந்தாவதாகவும் புவனேச்வரீமாதா போற்றப்படுபவளாக சிறப்பாக விளங்குகிறாள்.

தேவீவழிபாட்டின் தேவையும் பயனும்

உலகம் அன்னை பராசக்தியிடமிருந்து தோன்றியது. இவ்உலகத்தில் பிறந்த நாம் எல்லோருமே அவள்குழந்தைகள். ஆகவே இறைவனை அன்னையாக வழிபடுவது சுலபம். "தாயே! இக்காரியத்தை மேற்கொண்டு விட்டேன் அதற்கான சக்தியைக்கொடு" என்று வேண்டுகிறோம். ஆகவேதான் சக்தியை அம்பிகையாகவே கூறப்பட்டுள்ளது நூல்களில்.

தினமும் அம்பிகையை மனப்பூர்வமாக ஒரு வினாடி நினைத்தால் போதும். அவள் மகிழ்ந்து அருள்வாள்

ஸ்வஸ்தைஸ் ஸ்மிருதா மதி மதீவசுபாம் ததாஸி

என்கிறது சப்தசதி தேவீவாக்கு. ஆனால் வாழ்க்கைசந்தடியிலுள்ள நமக்கு அந்த ஒரு நிமிஷம்கூட கிடைப்பதில்லை. அம்பிகையை எப்படி வழிபடுவது? ஒரு உருவப்படம் அல்லது விக்ரஹம்வைத்து அதன் எதிரில் தெரிந்த தோத்திரத்தைச் சொல்லி ஒரு ஐந்து அல்லது பத்து நிமிஷம் செலவிடுங்கள். வெள்ளிக்கிழமை அம்பிகைக்கு உகந்தநாள். தியானம் சுலோகம் சொல்லி கட்டகமாலா ஸ்துதி லலிதாஸஹஸ்ரநாமம் முதலிய துதிகளைக்கூறி வெள்ளிகிழமையில் பாராயணமாக செய்யலாம். முடிந்தால் தினமும் செய்யலாம். இது முதல் படிநிலை. இதுவரை குரு என்பவர் இல்லாமலேயே இருக்கலாம்.

தேவிக்கான மந்திரம் மற்றும் யந்திரம்மூலம் அவளை வழிபடுவது இரண்டாவது படிநிலை. இதற்கு ஒரு தக்க குருவை அடைந்து அவரிடமிருந்து கணபதி, பாலா மந்திரங்களை உபதேசம் பெறவேண்டும். இப்படி உபதேசம் பெற்றவர்கள் லலிதா ஸஹஸ்ரநாமத்தை தேவிக்கு அர்ச்சனையாக செய்யலாம். மந்திரம் யந்திரம் இவைகளில் விசேஷசக்தியுள்ளன. ஆகவே அவைகளை எப்படி வழிபடவேண்டும் என்பது ஏற்கனவே தெரிந்திருந்தாலும்

ஒரு குருமூலமாக உபதேசிக்கப்பட்டு பாவனாநுட்பமுறைகளை தெரிந்துகொண்டு செயல்படவேண்டும். இதன்மேலும் ஒருபடி தீவிரமாக வழிபடவிருப்பமுள்ளவர்கள் தேவியின் பஞ்சதசாக்ஷரீ உபதேசத்தை குருமூலம்பெற்று லலிதாதிரிசதி நாமார்ச்சனையை செய்து அம்பிகையை வழிபடலாம். இதற்கும் மேலாக ஷோடசி உபதேசம்பெற்றுகையாளலாம். வெள்ளிக்கிழமையும் பௌர்ணமியும் அம்பிகையின்பூஜைக்கு மிகவும் விசேஷமானநாட்களாகும். தேவீ பஞ்சதசாக்ஷரீ மந்திரத்தை உபதேசம் பெற்றவர்களே தனது குருவிடமிருந்து பீடாதிகாரம் பெற்று பிறகு நவாவரணபூஜையை செய்யலாம். மந்திரஉச்சரிப்புகளுக்கு விசேஷசக்திகள் உண்டு. யந்திரத்திலுள்ள விசேஷஉருவக்கோடு அமைப்புகளுக்கும் விசேஷசக்தியுண்டு.

அம்பிகையை விக்ரஹரூபமாக ஆராதிக்கத் தொடங்கி அடுத்தநிலையில் அவ்வாறேகருதி ஸ்ரீசக்ரரூபத்தில் வழிபட்டு பின்பு அச்சக்ரத்தை முழுவதுமாக தனது உடலிலேயே ஆவிர்பவிக்கச்செய்து தானே தேவியாவதே தேவீஉபாஸனை. இதற்கு ஏற்ப பக்குவமான நிலையைப்பெறவே தினமும் முயலவேண்டும். அந்தர்முக ஸமாராத்யா என்ற லலிதாஸஹஸ்ரநாமவசனத்தால் இதனை உணரலாம். (ஷட்சக்ரோபரிஸம்ஸ்திதா)

உபாஸனையின் முதல்நிலை அடிப்படைப்பயன் காமம் கோபம் முதலிய ஆறுவகை உட்பகைகளை விலக்குவதேயாகும். கோபத்தை அடக்குவதும் தேவீ உபாஸனைதான். காமத்தை அடக்குவதுபோல கோபத்தையும் அடக்கவேண்டும். காமமும் குரோதமும் இணைபிரியாதநண்பர்கள். மனிதனை பாவத்தில் தள்ளுவது காமமும் கோபமும் என்று கிருஷ்ணபரமாத்மா கீதையில் உபதேசித்துள்ளார். இவ்வகை மாசுகளை மனத்திலிருந்து அகற்றி மனத்துக்கண்மாசிலன் ஆதல்வேண்டும்.

ஒரு பொருளில் ஆசை ஏற்பட்டுவிட்டால் அதை எப்படியாவது தவறான முறையிலேயாவது அடையமுயல்கிறோம். அந்த ஆசைப்பட்டபொருள் கிடைக்காதபோது அதற்குத் தடையாக இருந்தவர்கள்மீது நமக்குக்கோபம் உண்டாகிறது. வயிற்றுக்கு ஆகாரம் போட்டால் பசி அடங்கும். ஆனால் நெருப்புக்கு ஆகாரம்போட்டால் அது அடங்காமல் இன்னும் நன்றாக எரியும். நெருப்பில் போட்டபொருள் கருமையான கரியாகிவிடுவதுபோல நம்ஆசைத்தீக்குப்போடும்பொருளால்நம்மனமேகருப்பாகிவிடுகிறது.

காமத்தைவிட கோபத்தின்சக்தி பெரிது. எனவே **கோபம் பாவம் சண்டாளம்** என்பர் ஆன்றோர். கோபத்தால் ஸம்மோஹமும் இதனால் நினைவுஇழத்தலும், நினைவுதடுமாற்றத்தால் புத்திநாசமும், புத்திசெயலிழப்பால் அழிவும், ஏற்படுவதாக கீதைஉபசேகிக்கிறது. இவ்விதம் கோபம் அழிவுக்கு காரணமாகவிளங்குகிறது. எனவே **ஆறுவது சினம்** என்றபடி கோபத்தை அடக்கிஅதைவெல்லவேண்டும். நைஷதமஹாகாவ்யத்தில் கலிஅரசன் வருகிறான், அவனது சோனதிபதிகளாக காமனமும் குரோதனும் வருகிறார்கள் என்று கட்டியக்காரன் இவர்களின் வருகையை அறிவிக்கிறான். இவ்விதம் கோபம் கொடியது. காமன் புகாதஇடமில்லை. ஆனால் குரோதன் காமன்புகாத கோட்டைக்குள்ளும் புகுந்துவிடுவானாம். அது எந்தக் கோட்டை? துர்வாஸருடைய மனம்தான். ருத்ரகோபமே வடிவமான எளிரில் உடனேகோபமுறும் இயல்புடைய இம்மகரிஷி தேவியை ஆராதித்து தனதுகோபத்தை விட்டொழித்தார். வேதத்தின் ஸ்ரீருத்ரமந்திரம் முதலில் ருத்ரனின்கோபத்தை வணங்குவதாக நமஸ்தேருத்ரமன்யவே என்று கூறிவணங்கி அமைதியை வேண்டுகிறது. தூர்வாஸமஹரிஷியானவர் சைவத்திற்கும் சாக்தத்திற்கும் முதல்குருவாக கையிலாயத்திலிருந்து மண்ணுலகுக்குவந்தவர். தில்லை முதலியதலங்களை தரிசித்து சமயமடங்களைநிறுவியர்.

பிறரைக் கோபித்துக்கொள்ள நமக்கு என்ன யோக்கியதை (தகுதி) இருக்கிறது? ஒன்றுமே இல்லை. ஆத்மா (உயிர்) தன்விருப்பப்படி பெற்றிராத உடலையோ ஞானமுக்தியையோ சுகத்தைப்பெறும்சுதந்திரத்தையோ அறியாமையுடையது.

அக்ஞோ ஜந்து ரனீசோயம் ஆத்மனஸ் சுகதுக்கயோ:

என்கிறது சைவசித்தாந்தம். பிறர்க்குத்தீங்கு எண்ணுவதும் செய்வதும் கோபிப்பதும் பாவச்செயலாகும், இது தவிர்க்கப்படவேண்டியது. உற்றுநோக்கினால் அவர்கள் செய்யும் தவறுகளைவிட ஏன் அதைவிடப்பெரிய தவறுகளை நாம் செய்திருக்கக்கூடும். இதை எண்ணிப்பார்க்க வேண்டும். கோபம் நம்முடைய பெரியஎதிரியாகும். அதை ஒடுக்குவது அம்பிகையின் ஆராதனையே. எரிகின்ற நெருப்பை நீரைக்கொண்டு அணைப்பதுபோல நம் மனத்தில் எழுகின்ற கோபத்தீயை ஸத்ய இறைஞானத்தினால் அதாவது கோபத்தை புத்தியினால்

அடக்குபவனே மஹாத்மா. ஜிதேந்திரியன். தீரன். திடசித்தன் எனப்படுவர். பாம்பு தன்சட்டையை உதறிதள்ளுவதுபோல நாம் கோபத்தை உதறித்தள்ள வேண்டும். பாம்புக்கு சட்டைஉரிப்பதால் நன்மையே ஏற்படுகிறது. இந்த காமம் கோபம் இரண்டுமே லோபம் மோஹம் மதம் மாத்ஸர்யம் ஆகிய பேராசை பொறாமை முதலியமற்றய தீயகுணங்களுக்கு வித்தாகின்றன. இவ்விரண்டையும் முக்கண்ணியின் வழிபாட்டால் அருட்பார்வையால் விலக்கிடலாம். எனவே தேவியின் உபாஸனையால் முறையான வழிபாட்டால் இம்மைப்பயன்களையும் மறுமைப்பயன்களையும் தேவியின்இல்லத்திலிருக்கும் பேரின்பப் பிறவாமுக்திநிலையையும் பெறுவது நிச்சயம் என்று, சாக்தநூல்கள் உறுதிபடுத்துகின்றன. சிவனாரின் உக்ரசக்தியானவள் உலகில்உள்ளோரின் துஷ்டநிக்ரஹத்திற்கும், சாந்தசக்திகள் உலகத்தோரின் அகப்புறப் பகைகளைக்களைந்து, உலகவாழ்க்கதைத்துயரக் கடலிலிருந்து நம்மை கறைசேரவைத்தும் ஞானம்தந்தும் ஆட்கொண்டு அருள்தருபவைகளாம். எனவேதான் தேவி ஸம்ஸாரபங்க நிர்மக்ன ஸமுத்தரணபண்டிதா எனப்போற்றுப்படுகிறாள். ஆதலால் பராசக்தியின் பதமலர்தொழுது பிறவிப்பெரும்பயனைப்பெறமுயல்வது நமது கடமை. இதனையே திருவள்ளுவநாயனாரும் இறைவனடிசேர விழையுமாறும், கல்விஅறிவால் நற்றாள் தொழுதலே நன்று என்றும், எண்குணத்தான் தாளை தலையாறக் கும்பிட்டுவணங்க வேண்டும் என்றும் பலவாறு உபதேசித்துள்ளார்.

பிறவிப்பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவனடி சேராதார் (திருக்குறள்)

இவ்வாறே ஆத்திச்சூடியும் திருக்குறளும் போதிக்கும் அறநெறியில் நாம்வையத்துள் வாழ்வாங்குவாழ்ந்து தெய்வத்துள் கலந்து பேரின்பநிலையை எய்துவோமாக.

உ

ஸ்ரீ மாத்ரே நம:

தேவீம் த்ரிலோகஜனனீம் சரணம் ப்ரபத்யே.

ஸ்ரீ மாதா புவனேச்வரீதேவீ

ஸ்ரீ புவனேச்வரீ பூஜாகல்பம்
(லக்ஷ்மீ வாணீ ஸஹிதம்)

மங்களம் திசது மே வினாயகோ மங்ளம் திசது மே ஷடானன:.
மங்களம் திசது மே மஹேச்வரீ மங்களம் திசது மே மஹேச்வர:.

பூஜைசெய்பவர், ஆசமனம்செய்து விக்னேச்வரபூஜையை செய்யவேண்டும்.

ஓம் சுக்லாம்ப4ர த4ரம் விஷ்ணும் சசி வர்ணம் சதுர்புஜம்.
பிரஸன்ன வதனம் த்யாயேத் ஸர்வ விக்னோப சாந்தயே.

ஓம் என்றுகூறியவாறு விநாயகரைஎண்ணியபடி மூன்றுமுறை தலையில்இருகைவிரல் முட்டிகளால் குட்டிக்கொண்ட பின்பு மூச்சுப்பயிற்சியை (பிராணாயாமம்) ஒருமுறை செய்தபிறகு, வலதுகாதில் இருப்பதாக கங்கையைக்கருதி, வலதுகையினால் தனது வலதுகாதைத்தொட்டபின்பு, கையில் மஞ்சள்நிறமான சோபனாக்ஷதையை சிறிது எடுத்துக்கொண்டு, பூஜையினதேசகால நோக்கங்களைக்கூறி ஸங்கல்பம் செய்துகொண்டு பூஜையைத் துவங்கவேண்டும்.

ஸங்கல்பம் செய்யும்முறை:

ததே3வ லக்னம் சுதி3னம் ததே3வ
தாராப3லம் சந்திரபலம் ததேவ
வித்யாபலம் தைவபலம் ததேவ
லக்ஷ்மீபதேர் அங்க்ரியுகம் ஸ்மராமி (கௌரீபதேர்)

ஓம் ஹரஹர நமப் பார்பதீபதயே – ஹரஹர மஹாதேவ. சம்போ! சங்கர! சிவசிவ! ஹரே! கிருஷ்ணா! ராமா! கோவிந்தா! மாதவ! கேசவ! கோபால!

மமோபாத்த ஸமஸ்த துரிதக்ஷயத்வாரா ஸ்ரீபரமேச்வராக்ஞயா பரமேச்வர ப்ரீத்யர்த்தம்.

அத்ய பூர்வோக்த ஏவங்குண விசேஷேண விசிஷ்டாயாம் அஸ்யாம் 4சுபதிதௌ, கரிஷ்யமாணஸ்ய கர்மண: (ஸ்ரீலக்ஷ்மீவாணீஸஹித ஸ்ரீபுவனேச்வரீ பூஜாகர்மண:) நிர்விக்னேன பரிஸமாப்த்யர்த்தம் ஆதௌ விக்னேச்வரபூஜாம், ஹரித்ராகணபதிபூஜாம் கரிஷ்யே

என்றுஸங்கல்பம் செய்துகொண்டபிறகு, ஒரு தாம்பாளத்தில் அல்லது நுணிவாழைஇலையில் அல்லது வெற்றிலையில் மஞ்சள்பொடியை நீருடன்பிசைந்து, கூம்புவடிவில் பிடித்துவைத்து பூஜைக்காக பிள்ளையாரை செய்துவைத்து, அதன் உச்சியில் அருகம்புல்லை வைத்து, அதில் விக்னேச்வரரை ஸகலஉபசாரத்துடன் பூஜிக்கவும். கையில் சந்தனத்தில்தோய்த்த உரியமலரை வைத்துக்கொண்டு கணபதியை மனதில் கீழ்பாணுமாறுகூறி தியானிக்கவும்.

கஜாநநம் சந்திர ஸமான வர்ணம்
ஸ்வதந்த பாசாங்குச லட்டுகானி.
ஹஸ்தைர் ததானம் கமலாஸனஸ்தம்
விக்னேச்வரம் நொளமி ஸதா ப்ரஸன்னம்.

இவ்விதம் உருவத்தை எண்ணியபின்பு அஸ்மின் ஹரித்$_3$ராம்$_3$பிம்பே சுமுகம் மஹாகணபதிம் த்யாயாமி **ஓம்கம்கணபதயேநம:** என்றுமந்திரம்கூறி அம்மலரை மஞ்சள் பிள்ளையாருக்கு அணிவிக்கவும். ஸ்ரீமஹாகணபதிம் ஆவாஹயாமி, என்று கூறிஆவாஹனத்தை முதலில் செய்யவேண்டும். பிறகு, ஷோடசோபசாரபூஜையை முறையே செய்திடவேண்டும்.

ஓம் மஹா கணபதயே நம:
ஆஸனம் ஸமர்ப்பயாமி (அக்ஷதையை சுவாமிபீடத்தில் சேர்க்கவும்)

ஓம் மஹா கணபதயே நம: பாத்யம் ஸமர்ப்பயாமி
(2முறை நீரைதெய்வத்திருவடியில் சேர்க்கவும்)

ஓம் மஹா கணபதயே நம:
அர்க்கியம் ஸமர்ப்பயாமி (1முறை நீரைசிரசில் சேர்க்கவும்)

ஓம் மஹா கணபதயே நம:
ஆசமனீயம் ஸமர்ப்பயாமி (3முறை நீரைகையில் அளிக்கவும்)

ஓம் மஹா கணபதயே நம:
ஸ்நானம் கல்பயாமி (3 முறை நீரை தெளிக்கவும்)

ஓம் மஹா கணபதயே நம:
ஸ்நானானந்தரம் ஆசமனீயம் ஸமர்ப்பயாமி
(3 முறை நீரை சேர்க்கவும்)
வஸ்த்திரயுகளார்த்தம் அக்ஷதான் ஸமர்ப்பயாமி
(அக்ஷதைகளை ஆடைக்காகமேனியில் சேர்க்கவும்)

ஓம் மஹா கணபதயே நம:
உபவீதார்த்தம் அக்ஷதான் ஸமர்ப்பயாமி
(பூணூலுக்காக அக்ஷதைகளை சேர்க்கவும்)
ஓம் மஹா கணபதயே நம:
ஆபரணார்த்தம் அக்ஷதான் ஸமர்ப்பயாமி
(அக்ஷதைகளை அணிகலன்களுக்காக சேர்க்கவும்)
ஓம் மஹா கணபதயே நம:
கந்தான் தாரயாமி (அசல் சந்தனசாந்தை திலகமாய் இடவும்)
ஓம் மஹாகணபதயேநம: ஹரித்ராகுங்குமம் ஸமர்ப்பயாமி
(கணபதிக்கு குங்குமப்பொட்டு வைக்கவும்)
ஓம் மஹா கணபதயே நம: சோபானாக்ஷதான் ஸமர்ப்பயாமி
(சந்தனப்பொட்டின்மீது நெல்மலர்அரிசியை அக்ஷதைகளை சாத்தவும்)
ஓம் மஹா கணபதயே நம: புஷ்பமாலாம் ஸமர்ப்பயாமி
(கணபதிக்கு பூமாலையை அணிவிக்கவும்)
ஓம் மஹா கணபதயே நம: பத்ரபுஷ்பார்சனாம் ஸமர்ப்பயாமி
(அருகு பில்வம் உரியமலர்களால் 16முறை பெயர்கூறி பூசிக்கவும்)

1. ஓம் ஸுமுகாய நம:
2. ஓம் ஏகதந்தாய நம:
3. கபிலாய நம:
4. கஜகர்ணகாய நம:
5. லம்போதராய நம:
6. விகடாய நம:
7. விக்னராஜாய நம:
8. விநாயகாய நம:
9. தூமகேதவே நம:
10. கணாத்யக்ஷாய நம:
11. பாலசந்திராய நம:
12. கஜானனாய நம:
13. வக்ரதுண்டாய நம:
14. சூர்பகர்ணாய நம:
15. ஹேரம்பாய நம:
16. ஸ்கந்தபூர்வஜாய நம:

ஓம் ஸ்ரீ ஸித்திவினாயக மூர்த்தயேநம:
நானாவித பரிமளபத்ரபுஷ்பாணி ஸமர்ப்பயாமி. என்றுகூறிய பிறகு தூபம் தீபம் இவற்றை காண்பிக்கவும்)
ஓம் மஹாகணபதயே நம: – தூபம் ஆக்ராபயாமி
(தூபப்புகைநறுமணத்தை முகரச்செய்யவும்)
ஓம் மஹாகணபதயே நம: – தீபம் ஸந்தர்சயாமி
(நெய்தீபத்தை மூன்றுமுறை முகத்திற்குநேராக காட்டவும்)

ஓம் மஹாகணபதயே நம:
தூபதீபானந்தரம் ஆசமனீயம் ஸமர்பயாமி என்று கூறியவாறு (மூன்று முறை நீரை எதிரில் சேர்க்கவும்)
ஓம் மஹாகணபதயே நம:
நாளிகேரகண்ட த்வயம் குளக்கண்டம் கதலீபலம்ச நிவேதயாமி.
(உடைத்த தேங்காய்துண்டுகள், வாழைப்பழம், வெல்லக்கட்டி இவைகளை படைத்திடுதல்வேண்டும்.)
ஓம் மஹாகணபதயே நம:
நிவேதனானந்தரம் ஆசமனீயம் ஸமர்ப்பயாமி
(முன்புபோல 3முறை நீர்வார்க்கவும்)
ஓம் மஹாகணபதயே நம: – கற்பூரதாம்பூலம் ஸமர்ப்பயாமி
(வெற்றிலைப்பாக்குகளை ஏலம்சேர்த்துஅளிக்கவும்)
ஓம் மஹாகணபதயே நம: – கற்பூரநீராஜனம் தர்சயாமி.
(கற்பூர தீபாராதனையைச் செய்து பின்பு மூன்று முறை நீரை எதிரில் வார்த்து – நீராஜனானந்தரம் ஆசமனீயம் ஸமர்ப்பயாமி என்று கூறி ஆசமனீயத்தை அளிக்கவும்.)
ஓம் மஹாகணபதயே நம: – மந்த்ரபுஷ்பம் ஸமர்ப்பயாமி
(3முறை இருகைகளால் புஷ்பாஞ்ஜலியை செய்யவேண்டும்)
ஓம் மஹாகணபதயே நம: – ஸுவர்ணபுஷ்பம் ஸமர்ப்பயாமி
(பொன் பூ அல்லது நாணயத்தை அர்பணித்து சாத்துக)
ஓம் மஹாகணபதயே நம:
ஸமஸ்த உபசாரார்த்தே அக்ஷதான் ஸமர்ப்பயாமி

அக்ஷதைகளை எல்லாவகை உபசரிப்புகளுக்காக ஸமர்ப்பித்து துதிசெய்து வ்ணங்கியபின்பு விரும்பும்பயனை வேண்டிடவேண்டும்.

துதி
அகஜானன பத்மார்க்கம் கஜானனம் அஹர்நிசம்.
அனேக தந்தம் பக்தானாம் ஏகதந்த முபாஸ்மஹே.

பிரார்த்தனை
வக்ரதுண்ட மஹாகாய கோடிசூர்ய ஸமப்ரப.
நிர்விக்னம் குரு மே தேவ ஸர்வகார்யேஷு ஸர்வதா.

இவ்வாறுகூறி இடையூறுகள்அகல வேண்டியபின்பு, கையில் அக்ஷதையை எடுத்துக்கொண்டு விசேஷபூசைக்காக ஸங்கல்பம்செய்து பிறகு அதை இடதுபுறத்தில் போடவேண்டும்.

மஹாஸங்கல்பம்: (புவனேஸ்வரீபூஜைக்கானது)

(கணபதி முன்நிலையில் விசேஷ பூஜைக்கு உரியது)

மமோபாத்த ஸமஸ்த துரித க்ஷயத்வாரா ஸ்ரீபரமேச்வராக்ஞயா ஸ்ரீபரமேச்வர ப்ரீத்யர்த்தம், ஸ்ரீபரமேச்வரீ ப்ரித்யர்த்தம், சுபே சோபனே முகூர்த்தே, அத்ய ப்ரம்மண: த்விதீய பரார்த்தே, ச்வேதவராஹகல்பே, வைவஸ்வத மன்வந்தரே, அஷ்டாவிம்சதிதமே கலியுகே, ப்ரதமேபாதே, ஜம்பூத்வீபே, பாரதவர்ஷே, பரதகண்டே, மேரோர் தக்ஷிணபார்ச்வே, சகாப்தே, அஸ்மின், வர்த்தமானே, வ்யவஹாரிகே, ப்ரபவாதீனாம் ஷஷ்டிஸம்வத்ஸராணாம் மத்யே, ... நாமஸம்வத்ஸரே, ... அயனே, ... ருதௌ, ... மாஸே, ... பக்ஷே, ... சுபதிதௌ, ... வாஸரயுக்தாயாம், ... நக்ஷத்ரயுக்தாயாம் சுபயோக, சுபகரண, ஏவங்குண, விசேஷணவிசிஷ்டாயாம் அஸ்யாம் .... சுபதிதௌ, அஸ்மாகம் ஸஹகுடும்பானாம் க்ஷேமஸ்தைர்ய, வீர்ய, விஜய, ஆயு ராரோக்ய, ஐச்வர்யாணாம் அபிவிருத்யர்த்தம், இஷ்டகாம்யார்த்த ஸித்யர்த்தம், ஸமஸ்த துரிதோப சாந்தியர்த்தம், ஸர்வாரிஷ்ட நிவாரணார்த்தம், ஸர்வாநுகூல ஸித்யர்த்தம், சிந்தித மனோரதபல அவாப்த்யர்த்தம், ஸமஸ்த மங்களாவாப்த்யர்த்தம், தர்மார்த்த காமமோக்ஷ சதுர்விதபல புருஷார்த்தஸித்யர்த்தம், ஸ்ரீ லக்ஷ்மீ வாணீ ஸஹித ஸ்ரீ புவனேச்வரீ ப்ரஸாதஸித்யர்த்தம், ஸ்ரீ லக்ஷ்மீ வாணீ ஸஹித ஸ்ரீ புவனேச்வரீ ப்ரஸாதாத் ஸமஸ்த மங்களாவாப்த்யர்த்தம், மம அப்ராப்தலக்ஷ்மீ ப்ராப்த்யர்த்தம், ப்ராப்தலக்ஷ்மியாஸ் சிரகால ஸம்ரக்ஷணார்த்தம், ஸ்ரீலக்ஷ்மீ வாணீ ஸஹித ஸ்ரீ புவனேச்வரீ பூஜாம் கரிஷ்யே.

இவ்வாறுகூறி ஸங்கல்பித்து, கைஅக்ஷதையை இடதுபுறத்தில் போட்டுவிட்டு, பாத்ரஜலத்தைத் தொடவும். பிறகு கையில் புஷ்பாக்ஷதையை எடுத்துக்கொண்டு கணபதியின் மந்திரத்தைக்கூறியபடி **ஓம் மஹா கணபதயே நம: அஸ்மாத் ஹரித்ராபிம்பாத் ஸ்ரீ மஹா கணபதிம் யதாஸ்தானம் ப்ரதிஷ்டாபயாமி** என்றுகூறி முன்பு பூஜித்த மஞ்சள்பிள்ளையாரில் அந்த அக்ஷதையைப்போட்டு கணபதியை வழிஅனுப்பியதாகக் கருதியபின்பு, அத்தாம்பாளத்தை வடக்காக நகர்த்தவும். பூசித்த ஸ்ரீ மஹாகணபதியின் பாதத்திலிருந்து புஷ்பம் அக்ஷதையை அருட்பிரஸாதமாக எடுத்து தனதுசிரஸில் அணிந்துகொள்ளவும். கணபதியின் அருள்ஆசி மற்றும் அனுமதியுடன் உரிய சிறப்பூஜையைத் துவங்கவேண்டும். அதன் செய்முறையாவது இதுவே.

ஆசமனம் (உடல் புனிதத்திற்கு மும்முறை நீர்பருகுதல்)

ஆத்மதத்வம் சோதயாமி ஸ்வாஹா – அருந்துதல்
வித்யாதத்வம் சோதயாமி ஸ்வாஹா – அருந்துதல்
சிவதத்துவம் சோதயாமி ஸ்வாஹா – அருந்துதல்
ஸர்வதத்வம் சோதயாமி ஸ்வாஹா – வாய்துடைத்தல்
உடல்உறுப்புகளை பிரவணம்கூறியவாறுதொடுதல்.

குருவந்தனம் (குருவை த்யானம்செய்து வணங்குதல்)

குருர் ப்ரம்மா குருர் விஷ்ணு: குருர் தேவோ மஹேச்வர:
குருஸ் ஸாக்ஷாத் பரம் ப்ரம்ம தஸ்மை ஸ்ரீ குரவே நம:
ஸ்ரீகுருப்யோநம:, பரமகுருப்யோநம:, பரமேஷ்டிகுருப்யோ நம:
ஸ்ரீமத் ஸத்குரு சரணாரவிந்தாப்யாம் நம:

குலதேவதா வந்தனம் (குலதெய்வத்தை எண்ணி வணங்குதல்)

ஷண்முகம் ஷட்குணம் சைவ குமாரம் குல பூஷணம்.
தேவஸேநாபதிம் வந்தே ஸர்வகார்யார்த்த ஸித்தயே.

இங்கு முருகன் அல்லது அவரவர்களுடைய குலதெய்வத்தை ஒருமுறை மனதில் எண்ணித் துதிக்கவேண்டும்.

மஹாகணபதிம் ப்ரார்த்தயேத் விக்னநிவாரணாய

என்பதற்காக பிறகு மஹாகணபதியை எண்ணித்துதித்து வணங்கவும்.

ஆத்மரக்ஷை (தேஹரக்ஷை, பூசிப்பவரின் பாதுகாப்பு)

“ஓம் ஸ்ரீ லக்ஷ்மீ வாணீஸஹித ஸ்ரீமாதா புவனேச்வரி!
ஆத்மானம் ரக்ஷ ரக்ஷ.”
என்றுகூறி தனது இதயத்தில் கையை வைத்துக்கொண்டு மூன்றுமுறை ஜபிக்கவும். ஸ்ரீமாதர்மாம் ரக்ஷரக்ஷ.

ஸாக்ஷிதீப பூஜை.

(வலதில் நெய்விளக்கும் இடதில் நல்லெண்ணை விளக்கும் வைக்கவும்.) இருபக்கத்திலும் தீபலக்ஷ்மீ மற்றும் தீபதுர்கைகளின் பூசை.

இருபக்கமுள்ள இருகுத்துவிளக்குகளில் ஒன்றில் ஓம்ஹ்ரீம் தீபலக்ஷ்மியை நம: என்றும், மற்றொன்றில் ஓம்தும் தீபதுர்காயை நம: என்றும் கூறித் திருவடியில் புஷ்பாக்ஷதைகளை இட்டுபின்பு தீபமேற்றி வணங்கவும்.

போ தீப ப்ரம்மரூப த்வம் கர்மஸாக்ஷீ ஹ்யவிக்னக்ருத்.
யாவத் பூஜா ஸமாப்தி ஸ்யாத் தாவத் ப்ரஜ்வல ஸுஸ்திர.

சுபம் பவது கல்யாணி ஆயு ராரோக்ய ஸம்பதாம்.
சத்ரு புத்தி விநாசாய தீப ஜ்யோதிர் நமோஸ்துதே.

மங்களே மங்களாதாரே மாங்கல்யே மங்களப்ரதே.
மங்களார்த்தம் மங்களேசி மாங்கல்யம் தேஹிமே ஸதா

ஸர்வமங்கள மாங்கல்யே சிவே ஸர்வார்த்த ஸாதகே.
சரண்யே த்ரயம்பகே கௌரி நாராயணி நமோஸ்துதே.

தீபதேவி மஹாதேவி சுபம் பவது மே ஸதா.
யாவத் பூஜா ஸமாப்தி ஸ்யாத் தாவத் ப்ரஜ்வல ஸுஸ்திரா.

கண்டாபூஜை

ஜகத்துவனிர் மந்த்ரமாதர்ஸர்வதேவ ப்ரியங்கரீ.
தைத்ய வித்வம்ஸிநீ கண்டே ரக்ஷ மாம் சப்தரூபிணீ.

ஹே கண்டே ஸுகரே பீடே கண்டாத்வனி விபூஷிதே.
வாதயந்தி பரானந்தே கண்டாதேவீம் ப்ரபூஜையேத்.

ஆக[2]மார்த்தம் து தே[3]வானாம் கமனார்த்தம் து ரக்ஷஸாம்.
கண்டாரவம் கரோம் யத்ர தேவதாஹ்வான லாஞ்சனம்.

இவ்வாறு கூறியபடி வலதுகையினால் பூஜாங்கமான கைமணியைப் பூசித்துபிறகு எடுத்து மும்முறை மணிஅடிக்கவும்.

கலசபூஜை

(சங்குதீர்த்தபூஜை / கங்காபூஜை) ஒரு உலோகபாத்திரத்தில் தூயநீரை நிறைத்து, அதில் சந்தனம், புஷ்பம், அக்ஷதை, இவைகளைப்போட்டு, அதைதொட்டுக்கொண்டு கீழ்காணுமாறு கூறிபுனிதத்திற்காக ஜபிக்கவேண்டும்.

கலசஸ்ய முகே ருத்ர: கண்டே விஷ்ணுஸ் ஸமாச்ரித:.
மூலே தத்ர ஸ்திதோ ப்ரும்மா மத்யே மாத்ருகணா ஸ்மிருதா:.
குக்ஷௌ து ஸாகராஸ் ஸர்வே ஸப்த த்வீபா வஸுந்தரா.
ருக்வேதோத யஜுர்வேத: ஸாமவேதோப் யதர்வண:.
அங்கைஸ்ச ஸஹிதாஸ் ஸர்வே கலசாம்பு ஸமாச்ரிதா:.
ஆயாந்து தேவ பூஜார்த்தம் துரித க்ஷய காரகா:.
கங்கே ச யமுனே சைவ கோதாவரி ஸரஸ்வதி.
நர்மதே ஸிந்து காவேரி ஜலே ஸ்மின் ஸன்னிதிம் குரு.

(மூலமந்திரத்தோடு கூடிய காயத்ரீமந்திரத்தைக் கூறியவாறு) இவ்வாறுகூறி மந்திரித்த புனிதநீரை ஒரு உத்தரிணியில் கையில் (கலசதீர்த்தத்தை) எடுத்துக்கொண்டு, பூஜைக்காக வைத்திருக்கும் புஷ்பம் முதலிய பொருட்களையும், தேவியையும், (தீபத்தை / யந்திரத்தை / கும்பத்தை பிம்பத்தை) தன்னையும், தெளித்தபடி ப்ரோக்ஷித்துக் கொள்ளவேண்டும். இவ்விதமே பசுவினுடைய பால், தயிர், நெய், சாணம், ஜலம், தர்பைமுனைகள் இவற்றை ஒருகிண்ணியில் ஒன்று சேர்த்துவைத்து சிவனுடைய பஞ்சபிரம்மத்தால் மந்திரித்துத், தெளிப்பதால் இடம் பொருள் ஆத்மா, இலக்குருவம் இவை தூய்மைபெறுவதாகும்.

சங்கபூஜா (விசேஷ அர்கியதீர்த்த பரிகல்பனம்)

த்வம் புராஸாகரோத் பன்னோ விஷ்ணுனா வித்ருதக் கரே.
தேவைஸ்ச பூஜிதஸ் ஸர்வை : பாஞ்சஜன்ய நமோஸ்துதே.

இவ்வாறுகூறி சங்கினைப்போற்றி வணங்கிடுக. அதில் பயன்பாட்டுக்காக நீரை நிறைத்து, பூஜைக்கு உரிய முக்ய மந்திரங்களைக்கூறி அதனை மந்திரிக்க வேண்டும்.

ஓம் ஸூர்யமண்டல த்வாதச கலாப்யோ நம:
ஓம் சந்திரமண்டல ஷோடச கலாப்யோ நம:
ஓம் அக்னிமண்டல தசகலாப்யோ நம:
ஓம் ஸப்தஸாகர நதீப்யோ நம:

ஆத்மபூஜை (சங்குதீர்த்தத்தால் தெளிக்கவும்)

பூஜகர் தமது உடலும் உள்ளமும் இறைவனோடு இரண்டறக் கலந்து மீண்டும் விங்குவதாகக்கருதி தாம்வழிபடப்போகும் தெய்வஉருவிலேயே தாம் விளங்குவதாகக்கருதித் தன்னைத்தானே பூ

அணிந்து பூஜித்து, தெய்வம்போல் அலங்கரித்துக்கொள்ளவேண்டும். ஆத்மபூஜையை

ஓம் ஆத்மனேநம:, ஓம் அந்தராத்மனேநம:,
ஓம் ஞானாத்மனேநம:, ஓம் ஜீவாத்மனேநம:,
ஓம் கலாதத்மனே நம: ஓம் தத்வாத்மனேநம:,
ஓம் பூதாத்மனேநம:, ஓம் ப்ராணாத்மனேநம:,
ஓம்ஸர்வாத்மனேநம:, ஓம் பரமாத்மனேநம:

என்றுகூறி பூஜித்து, தனது இதயத்தில் சந்தனம் அக்ஷதையினால் “ஸமஸ்தோபசாரான் ஸமர்ப்பயாமி” என்றுகூறி இதயகமலத்தில் பரதேவதையைஎண்ணி அர்ச்சித்துக்கொள்ளவேண்டும் இதுவே ஆத்மபூசையாகும்.

பீட பூஜை: (ஆஸன பூஜை / இருக்கையின் வழிபாடு)

பூஜைக்காகஉள்ள இலக்கான தெய்வ உருவத்திற்குக்கீழே, பீடத்தின் நடுவே, ஒன்றன்மேலொன்றாக, இருப்பதாகக்கருதி இவைகளைப் பூசிக்கவும். சந்தனம் அக்ஷதையுடன் பூவைஎடுத்து நாமா ஒவ்வொன்றுக்கும் ஒன்றாக பீடத்தில் வைக்கவும்.

ஓம் ஸகலகுணாத்ம யோகபீடாத்மனே நம:
ஓம் ஆதாரசக்த்யை நம:
ஓம் மூல ப்ரக்ருத்யை நம:
ஓம் ஆதி கூர்மாய நம:
ஓம அனந்தாய நம:
ஓம் பூம்யை நம:
ஓம் சூர்யமண்டலாய நம:
ஓம் சந்திரமண்டலாய நம:
ஓம் அக்னிமண்டலாய நம:
ஓம் சக்தி மண்டலாய நம:
ஓம் ஸகல தத்வாத்மக ஸர்வசக்தியுக்த க மலாஸனாய நம:
பூர்வாத்யஷ்ட தளேஷு வாமாதி அஷ்டசக்திப்யோ நம:
பஞ்சகிருத்ய காரணேசயுக்த திவ்ய சிம்மாஸநாய நம:

இவ்வாறுகூறி புவனேச்வரியை அழைத்து இருத்த உள்ள இடத்திற்கு அர்ச்சனையை செய்யவும். பின்புஅந்த பூத்ததாமரைமலரின் எட்டுஇதழ்களில் கீழ்காணும் எட்டுசத்திகளை பீடசக்திகளாக கருதிபூசிக்கவும்.

1. ஓம் ஜயாயை நம: 2. விஜயாயை நம:
3. ஓம் அஜிதாயை நம: 4. ஓம் அபராஜிதாயை நம:
5. நித்யாயை நம: 6. ஓம் விலாஸின்யை
7. ஓம் தோக்த்ரியை நம: 8. அகோராயை நம:

பூவின்மையகர்ணிகையின் ஈசானத்தில் ஓம் மங்களாயை நம: என்று பூசிக்கவும். பிறகு அதில் தேவியை தியானிக்கவும்.

உத்யத் சூர்ய ஸஹஸ்ராபாம் சசாங்க க்ருத சேகராம்.
பத்மாஸநாம் ஸ்மேரமுகீம் சூர்யேந்த்வக்னி விலோசனாம்.
ரக்தவஸ்த்ரதராம் பத்ம பாசாங்குச வரான் கரை:
ததீம் புவனேசானீம் த்யாயேத் ஹ்ருத் பங்கஜே சிவாம்.

(தேவியின் மூல மந்திரம் உபதேசம் பெற்று இருப்பவர்கள் இங்கு இச்சமயம் ரிஷியாதி நியாஸத்தை செய்துகொண்டு, அங்கநியாஸம் கரநியாஸமிரண்டையும் செய்து, மாத்ருகாநியாஸம் பஞ்சோபசாரபூஜையுடன் தனது இதயகமலத்தில் ஸ்ரீ புவனேச்வரியை த்யானம் செய்துகொண்டு, இயன்ற அளவில் மூலமந்திரத்தை ஜபம்செய்து கொள்ளவும்)

உபதேசம்பெற்ற மந்திரத்தை ஜபம்செய்ய இயலாதோர் அக்கடவுளின் கவசத்தைக் கூறவேண்டியது அவசியம்.

ஸ்ரீ புவனேச்வரீ கவசம் (தேவிமந்திர பாதுகாப்பு)

(கவசம் என்பது நம்மையெல்லாம் காப்பதற்காகச் செய்யப்படும் மந்த்ரோக்த தியானமாகும். இதை செய்வதன் மூலம் பூஜையின் நடுவிலும், பிறகு எப்போதும் அம்பாள் நம்மை ரக்ஷிக்கிறாள் என்ற திடசித்தத்துடன் எண்ணியபடி கவசமந்திர சுலோகங்களைக் கூற வேண்டும்.)

அக்ரதஸ் தே அம்பிகா பாது பார்வதீ பாது ப்ருஷ்டத:
பார்வதீ பார்ச்வயோர் பாது சிவா ஸர்வத்ர ஸாம்ப்ரதம்.
வாராஹீ விஷமே மார்கே துர்கா துர்கேஷு கர்ஹசித்.
காளிகா கலஹே கோரே பாது த்வாம் பரமேச்வரீ.
மண்டபே தத்ர மாதங்கீ ததா ஸௌம்யா ஸ்வயம்வரே.
பவானீ பூஷமத்யே து பாது த்வாம் பவமோசனீ.
கிரிஜா கிரிதுர்கேஷு சாமுண்டா ஸத்வரேஷு ச.

காமகா[3] கானனேஷ் வேவம் ரக்ஷது த்வாம் ஸனாதனீ.

விவாதே வைஷ்ணவீ சக்திர் அவதாத் த்வாம் ரகூத்வஹ.

பைரவீ[4] சரணே ஸௌம்ய சத்ரூணாம் வை ஸமாகமே

ஸர்வதா[3] ஸர்வ தேசேஷு[3] பாது த்வாம் புவனேச்வரீ

மஹா மாயா ஜகத் தாத்ரி ஸச்சிதானந்த ரூபிணீ.

கவசம்ஸம்பூர்ணம்.

தேவீஆவாஹனம். (புவனேச்வரியை அழைத்தல்)

புவனேச்வரியை பூஜைசெய்வதற்காக உருவச்சிலை அல்லது கும்பம், யந்திரம், மேரு, கும்பம், படம், குத்துவிளக்கு இவற்றுள் ஏதேனும் ஒன்றை தயார்நிலையில் அலங்கரித்து வைத்துக்கொள்ளவும். தீபத்தில் பூசிப்பவர் தீபம் வைத்து அலங்கரித்து வைத்து மற்றொரு தீபத்தைக் கொண்டு, ரூபதியானத்தைக் கூறியபின்பு விளக்கைஏற்றி பிறகு ஆவாஹனாதிகலால் உபசரிக்கவும்)

உத்யத் பாஸ்வத் ஸமாபாம் விஜித
நவஜபா மிந்து கண்டாவனத்த
த்யோதன் மௌளிம் த்ரிணேத்ராம் விவிதமணிலஸத்
குண்டலாம் பத்மகாம்ச
ஹார க்ரைவேய காஞ்சீ குண மணி
வலயாத்யைர் விசித்ராம் பராட்யாம்
அம்பாம் பாசாங்குசேஷ்ட அபய கர கமலாம்
அம்பிகாம் தாம் நமாமி.

இவ்வாறு ஸ்ரீ புவனேச்வரீ தேவியை சிந்தாமணி க்ருஹத்தில் தனக்கு எதிரில் தீபச்சுடர் உருவில் பத்து படிகளையும் நான்குகால்களையும் மேல்பலகையுமுள் பஞ்சபிரம்மாஸனமானத்தில் இருப்பவளாக மனதில் பாவித்து அதில் புஷ்பாக்ஷதை சேர்த்து ஆவாஹனம் செய்யவேண்டும்.

ஸ்ரீபுவனேச்வர ஸ்வரூபவர்ணனம். (ரூப பாவனா விதி)

ஸோபானைர் தசபிர்[3]யுக்தோ மஞ்சகோப் பதி[4]ராஜதே.
ப்ரம்மா விஷ்ணுஸ்ச ருத்ரஸ்ச ஈச்வரஸ்ச ஸதா[3]சிவ:
ஏதே பஞ்ச[2]குராப் புரோக்தா: பலகஸ்து[2] ஸதா[3]சிவ:
தஸ்யோபரி மஹாதேவோ ராஜதே புவனேச்வர:
யா தேவீ[3] நிஜலீலார்த்தம் த்விதா[3]பூதா[4] பபூ[4]வஹ

ஸ்ருஷ்ட்யா தௌது ஸ ஏவாயம் ததர்தாங்கோ மஹேச்வர:
கந்தர்பதர்ப நாசோத்யத் கோடி கந்தர்ப்ப சுந்தர:
ஹரிணா பீதி பரசூன் வரம்ச நிஜ பாஹுபி:
ததானஸ் ஷோடசாப்தோஸௌ தேவஸ் ஸ்ர்வேச்வரோ மஹான்.
கோடி சூர்ய ப்ரதீகாச: சந்திரகோடி ஸுசீதள:
சுத்த ஸ்படிகஸங்காச: த்ரினேத்ரஸ் சீதளத்யுதி:
வாமாங்கே ஸன்னிஷண்ணா ஸ்ய தேவீ ஸ்ரீ புவனேச்வரீ.

புவனேச்வரீ ஸ்வரூபம். (தேவீ உருவபாவனைமுறை)

நவரத்ன கணாகீர்ண காஞ்சீ தாம விராஜிதா.
சுத்த காஞ்சன ஸன்னத்த வைடூர்யாங்கத பூஷணா.
கனத் ச்ரீசக்ர தாடங்க விடங்க வதனாம்புஜா.
லலாட காந்தி விபவ விஜிதார்த்த ஸுதாகரா.
பிம்ப காந்தி திரஸ்காரி ரதச் சத விராஜிதா.
லஸத் குங்கும கஸ்தூரீ திலகோத் பாஸிதானனா.
திவ்ய சூடாமணி ஸ்பார சஞ்சத் சந்த்ரக சூர்யகா.
உத்யத் கவிஸம ஸ்வச்ச நாஸாபரண பாஸுரா.
சிந்தாக லம்பித ஸ்வச்ச முக்தாகு ச்ச விராஜிதா.
பாடீர பங்க கற்பூர குங்குமா லங்கிருதஸ்தனீ.
தாடிமீ பலபீஜாப தந்த பங்க்தி விராஜிதா.
அனர்க்ய ரத்ன கத மகுடாஞ்சித மஸ்தகா.
மத்தாளி மாலா விலஸத் அலகாட்ய முதாம்புஜா.
களங்க தளாகார ார்ச்ய நிர்முக்த சரச்சந்த்ர நிபாநநா.
ஜான்ஹவீ ஸலிலாவர்த்த சோபிநாபி விபூஷிதா.
மாணிக்ய சகலாபத்த முத்ரிகாங்குளிபூஷிதா.
புண்டரீககாலகார நயனத்ரய ஸுந்தரீ.
கல்பிதாச்ச மஹாராக பத்மராகோ ஜ்வலப்ரபா.
ரத்ன கிங்கிணி கா யுக்த ரத்ன கங்கண சோபிதா.
மணி முக்தா ஸரா பார லஸத் பதக ஸந்ததி:
கஞ்சுகீ கும்பிதா பார நாநா ரத்ன ததி த்யுதி:
மல்லிகாஷோதி தம்மில்ல மல்லிகாளி ஸராவ்ருதா.
ஸுவ்ருத்த நிபிடோத் துங்க குசபாரா லஸா சிவா.
வர பாசாங்குசா பீதி லஸத் பாஹு சதுஷ்டயா.

ஸர்வ ச்ருங்கார வேஷாட்யா ஸுகுமாராங்க வல்லரீ.
ஸௌந்தர்ய தாரா ஸர்வஸ்தா நிர்வ்யாஜ கருணாமயீ.
நாநா ஸகீபிர் தாஸீபிஸ் ததா தேவாங்கனாதிபி:
ஸர்வாபிர் தேவதாபிஸ் து ஸமந்தாத் பரிவேஷ்டிதா.
இச்சாசக்த்யா ஞானசக்த்யா க்ரியாசக்த்யா ஸமன்விதா.
லஜ்ஜா துஷ்டிஸ் ததா புஷ்டி: கீர்த்தி: காந்தி: க்ஷமா தயா.
புத்திர் மேதா ஸ்மிருதிர் லக்ஷ்மீர் மூர்த்திமத்யோங்கனா ஸ்மிருதா.
ஜயா ச விஜயா சைவாப் யஜிதா ச அபராஜிதா.
நித்யா விலாஸினீ தோக்த்ரீ த்வகோரா மங்களா நவா.
பீட சக்தய ஏதாஸ் து ஸேவந்தே யாப் பராம்பிகாம்.
யஸ்யாஸ் து பார்ச்வ பாகே ஸ்தௌ நிதிதௌ சங்க பத்மகௌ.
ஸப்த தாது வஹா நத்யோ நிதிப்யாம்து விநிர்கதா:
ஸா தேவீ புவனேசானீ தத் வாமாங்கே விராஜதே.
ஸர்வேசத்வம் மஹேசஸ்ய யத்ஸங்காதேவ நான்யதா

புவனேச்வரீ ஷோடச உபசாரபூஜை.

பால ரவி த்யுதி மிந்து கிரீடாம்
துங்க குசாம் நயன த்ரய யுக்தாம்
ஸ்மேர முகீம் வரதா ங்குச பாசா
அபீதி கராம் ப்ரபஜே புவனேசீம்.

மஹாபத்ம வனாந்தஸ்தேகாரணானந்த விக்ரஹே
ஸர்வபூதஹிதே மாத: ஏஹ்யேஹி புவனேச்வரி.
ஏஹ் யேஹி தேவதேவேசி த்ரிபுரே தேவ பூஜிதே.
பராம்ருத ப்ரியே சீக்ரம் ஸான்னித்யம் குருஸித்தயே.

ஸம்பூஜ்யா ம்ருதவிக்ரஹம் பசுபதிம் தேவீஞ்ச சைலேந்திரஜாம்.
ரக்ஷோ பீதிம பாஸ்ய வாஞ்சிதபலம் லப்த்வாத ஸங்க்ரந்தந:.
ஸ்வாராஜ்யம் புநராப்தவாந் அமலதீர் ஆசாபதீனாம் ப்ரபு:

இதி ஸ்ரீ பாத்மேயபுராணே கஜாரண்யமாஹாத்மியே இந்த்ரக்ருத அகிலாண்டேச்வரீ ஸ்தோத்ரே ஷோடசோத்யாய:.

சுபம்

உ

ஓம் நமோ பகவதே அருணாசலாய.
ஸ்ரீ அபீதகுசாம்பாஸமேத அருணாசலேசாய நம:

சோணாத்ரி, அருணகிரி, அண்ணாமலை.

ஸ்ரீ அண்ணாமலையார் துதி

அருணாசலாஷ்டக துதிப்பொருள்

1. ஸ்ரீநாதாதி குருக்ரமைக சுலபம் ஸ்ரீராஜ ராஜேஸ்வரம்
ஸ்ரீசக்ராக்ருதி சோணசைல வபுஷம் ஸ்ரீஷோடசார்ணாத் மகம்.
ஸ்ரீஷோடாதி ஷடத்வ ஸௌத ஸதனம் ப்ரஹ்மாண்ட கோட்யூர்த்வத:
க்ரீடந்தம் ஸ்ருதி வாககோசரபதம் சேவே பரம் தைவதம்.

ஸ்ரீவிஷ்ணு முதலிய சப்தகுருமார்களுக்கு எளியவராயும், ஸ்ரீ ராஜராஜேஸ்வரராயும், பதினாறு உயிரெழுத்துக்களையுடைய த்ரிகோணத்தில் (வட்டமான) பிந்துரூபமாயிருக்கிறவராயும், ஸ்ரீசக்ரஉருவமான சோணசைலத்தை சரீரமாகஉடையவராயும், பிரமாண்டங்களுக்குமேல் விளையாடுகிறவராயும், வேதங்கட்கு புலப்படாத இடத்தையுடையவராயும் இருக்கிற, பரம்பொருளாகிய தெய்வத்தை வணங்குகிறேன்.

2. ஸ்ரீப்ராஸாத வரப்ரகாஸ வபுஷம் ஸ்ரீசோண சைலேஸ்வரம்
ஷட் சக்ரோதித பைரவை ரபிவ்ருதம் ப்ரஹ்மாண்ட மாலாஜடம்.
ஷோடாந்யாஸ மஹாகலாப மஹித ஜ்வாலா ஸஹஸ்ரோஜ்வலம்
ஸத்ய ஞான மநந்ய பாவ ரஹிதம் சோணாத்ரி நாதம் பஜே.

மேலான ப்ராஸாதமந்திரத்தையும், சோணசைலத்தையும் ஸாரமாக உடையவராயும், ஆறு சக்கரங்களில் உண்டான பைரவர்களால் சூழப்பட்டவராயும், பிரம்மாண்டங்களாகிற வரிசைகளை ஜடமாயும் தான் சேதனமாகயிருப்பவராயும், ஷோடாந்யாஸம் முதலிய பெருங்கூட்டங்களால் பெருமையான அநேக ஜ்வாலையோடு பிரகாசிக்கிறவராயும், ஸத்யம் ஞானம், இவைகளுக்கு மாறுபடாத அத்வைத நிலையை உடைவராயும் இருக்கிற சோணாத்ரிநாதனை வணங்குகிறேன்.

3. உத்யத் பாஸ்கர கோடி சந்நி பமுமா ஸங்க்ராந்த வாமம் சிவம்
ஸத்ய: ஸந்நத வாஞ்சிதார்த்த கடநே ஸந்நத்த சித்தம் ஸதா.
வித்யா மாதவ வீக்ஷணா விஷயவந் மூர்த்தான மர்த்தேந்துநா
நத்யா நாக ஜடாபிநத்த மகுடம் சோணாத்ரிநாதம் பஜே.

கோடி உதயசூரியர்களுக்கு சமானமானவராயும், அர்த்த நாரீஸ்வர வடிவத்தையுடையவராயும், பக்தர்கள் விரும்பியவற்றை எப்பொழுதும் உடனே கொடுக்கின்ற மனதையுடையவராயும், பிரம்ம

விஷ்ணுக்களுக்கு புலப்படாத அடிமுடியை உடையவராயும், சடையில் கட்டப்பட்ட அர்த்தசந்திரன், நதி, நாகம் இவைகளையுடையவராயும், மகுடத்தையுடையவராயும் இருக்கிற சோணாத்ரி நாதனை வணங்குகிறேன்.

4. மூலாதார முகாம்பு ஜந்ம நவ ஷட் கக்ஷ்யாந்த ரந்தப்புரே
முக்தாநாம் லயஸீம்நி முக்தி மஹிஷி மாங்கல்ய லீலாக்ரஹே.
ஸ்ரீசிம்ஹாஸந பத்ம ஸீம்நி நிலயம் சிந்தூர சோணாதரம்
தப்த ஸ்வர்ண ஸமாந காந்தி வதனம் சோணாத்ரி நாதம் பஜே.

முக்தர்களால் அடையப்பட்ட பராசக்தியாகிய ஞான சக்தியின் மங்களகரமான விளையாடும் வீட்டில், மூலாதாரம் முதல் ஸஹஸ்ராரம் வரையில் உள்ள உள்வீட்டில் சிம்மாஸனத்தில் இருக்கின்றவரையும், காய்ச்சிய தங்கத்தின் காந்திக்கு ஸமானமான வதனத்தையுடையவராயும், சிவந்த கீழுதட்டை யுடையவராயும் இருக்கிற சோணாத்ரிநாதனை சேவிக்கிறேன்.

5. மத்யே சௌத மஹாபயோநிதி மணி த்வீப ப்ரபா விஸ்புரத்
பாலஸ்பீதி மதத்துரோத்தர நடத் பாடீர வாட வ்ருதே.
சிந்தா ரத்னமய ப்ரபோத ஸதனே சிம்ஹாஸநே ஸம்ஸ்திதம்
ஸேவேபீத குசா சமேத மநிசம் சோணாத்ரி நாதம் பஜே.

அமிர்தக்கடலின் மத்தியில் மணித்வீபத்தில் காற்றினால் அசைந்தாடுகிற பாடலீவிருக்ஷ வாடிகளையுடைய சிந்தித்த பொருளை எல்லோருக்கும் அருளும் சிந்தாமணிகிரகத்தில், சிம்மாசனத்தில் இருக்கக்கூடியவராயும், அபீதகுசாம்பிகையுடன் கூடியவராயிருக்கிற ஸ்ரீ அருணாசலேஸ்வரர் ஆகிய சோணாத்ரி நாதனை எப்பொழுதும் வணங்குகிறேன்.

6. வித்யாவீர மஹேச்வராக்ருத லகு ப்ரஸ்தார விஸ்தாரிதே
ஸ்ரீசைலேந்த்ர மதந்த்ர சந்த்ர கலிகா சூடாவதம் ஸோஜ்வலம்.
கௌரீ சங்கர மாநித ப்ரணயிநீ துர்வார கர்வோதயம்
ஹ்ருத்யத் காமகலா கலாப ரஸிகம் சோணாத்ரி நாதம் பஜே.

ஸ்ரீவித்யா உபாஸகர்களாகிய வீரர்களால் சுலபமாயும் விஸ்தாரபடுத்தப்பட்டதாயும், மேருபிரஸ்த வடிவான ஸ்ரீசக்ரத்தை தனக்கு இருப்பிடமாக உடையவராயும், வளைவான சந்திரபிறையை சிரோபூஷணமாய் அணிவதால் மிகவும் பிரகாசிக்கிறவராயும், சங்கரனால் பூஜிக்கப்பட்ட சிருங்கார கலகத்தையுடைய,

கௌரியினுடைய தடுக்கமுடியாத கர்வத்தின் மேன்மையுடையவராயும் காமசாஸ்திரங்களின் ரசிகத்தன்மை உடையவராயுமிருக்கிற சோணாத்ரிநாதனை சேவிக்கிறேன்.

7. பக்தானாம் அபயப்ரதம் விரசித ப்ராலேய சைலாத்மஜா
ப்ராயஸ்சித்த விதான நித்ய மிலித ஸ்வந்நாம திவ்யாம்ருதம்.
ப்ராதக்ஷிண்ய வரம் ஹத த்ரிபுவனம் பாபாவளீ பாவனம்
ப்ரஹ்மாபிக்ய மகண்ட மத்வயரஸம் சோணாத்ரி நாதம் பஜே.

பக்தர்களுக்கு அபயத்தை கொடுப்பராயும், பார்வதியினால் பிராயச்சித்தமாக நித்யம் ஜபிக்கப்பட்ட திவ்ய அமிர்தமான தன்னுடைய நாமங்களையுடையவராயும், பிரதக்ஷிணத்தினாலேயே வரத்தைக் கொடுப்பவராயும், முப்புரங்களை எரித்தவராயும், பக்தர்களுடைய பாபவரிசையை பரிசுத்தப்டுத்துகிறவராயும், கண்டிக்கப்படாத ஒரே ரசத்தையுடைய ப்ரம்மம் என்ற பெயருடைய சோணாத்ரி நாதனை சேவிக்கிறேன்.

8. ஏகாகார சமஸ்த லோக ஜநகம் ஹேமாத்ரி பாணாஸநம்
நாகாவாஸ கிரீட குண்டலதரம் நாகேந்திர பூஷோஜ்வலம்.
ராகாசந்த்ர ஸமானகாந்தி வதனம் ராஜீவ நேத்ரார்ச்சிதம்
சோகாரண்ய தவானலம் ஸுபகரம் சோணாத்ரி நாதம் பஜே.

எல்லா உலகங்களுக்கும் ஒரே பிதாவாயும், மேருமலையை வில்லாக உடையவராயும், நாகத்தையுடைய மகுடத்தையும் குண்டலங்களையும், ஆபரணங்களையும்உடையவராயும், பூர்ண சந்திரனையொத்த வசீகரமுகத்தையுடைவராயும், திருமாலால் நேத்திரமாகிய தாமரையினால் அர்ச்சிக்கப்பட்டவராயும், சோகமாகிற காட்டுக்கு, காட்டுத்தீபோல்இருப்பவராயும், சுபத்தை கொடுப்பவராயுமிருக்கிற சோணாத்ரிநாத்தனை சேவிக்கிறேன்.

9. சாந்தம் ஜந்ம ஜராபஹம் சுபகரம் தர்மார்த்த காமப்ரதம்
ஸத்யம் தைவ பலப்ரதம் சுசிகரம் தாரித்ரய துக்காபஹம்.
பூத ப்ரேத பிசாச ராக்ஷஸ ஹரம் பாபக்ன மாயுஷ்கரம்
நித்யம் சோணகிரேஸ் தவம் படதி யோ மோக்ஷம் லபேத் ஸாஸ்வதம்.

பிறப்பு இறப்பு மூப்பு இவைகளை நீக்குபவராயும், சுப புருஷார்த்தங்களை கொடுப்பவராயும், உண்மையான தெய்வ பலத்தை கொடுக்கக் கூடியவராயும், தாரித்ரியம் துக்கம் இவைகளைப் போக்கி தூய்மைப்படுத்துகிறவராயும், பூத, ப்ரதே, பிசாச, இராக்ஷஸ

குணதோஷங்களை நீக்கி ஆயுளபிவிருத்தியைக் கொடுப்பவராயும், எவர் இந்த அருணாசல ஸ்தோத்திரத்தை நித்தியம் படிக்கிறார்களோ அவர் நிரந்தரமோக்ஷத்தை அடைகிறார்கள்.

ஸ்ரீ ஆதிசங்கராச்சாரியார் அவர்களருளிய அருணாசலாஷ்டகம் முற்றிற்று.

சோணாத்ரி ஈசஸ்துதி அஷ்டகம்.

ஓம் நமோ பகவதே ருத்ராய.

1. சிவாய ருத்ராய சிவார்ச்சிதாய
மஹானு பாவாய மஹேச்வராய |
ஸோமாய ஸூக்ஷ்மாய ஸுரேச்வராய
சோணாத்ரி நாதாய நமச்சிவாய ||

சிவனாகவும், ருத்ரனாகவும், பார்வதியினால் அர்ச்சிக்கப்பட்டவராயும், பெரியவராகவும், மஹேஸ்வரராயும், உமையோடு கூடியவராயும், அணுஸ்வரூபராயும், தேவர்களுக்கு ஈஸ்வரராயும், இருக்கிற சோணாத்ரிநாதனாகிய சிவனுக்கு நமஸ்காரம்.

2. திக்பால நாதாய விபாவநாய
சந்த்ரார்த்த சூடாய ஸநாதநாய |
ஸம்ஸார துக்கார்ணவ தாரணாய
சோணாத்ரி நாதாய நமச்சிவாய ||

இந்திரனால் பூசிக்கப்பட்டவராயும், சந்திரனை சிரசில் அணிந்தவராயும், மிகவும் பழமையானவராயும், ஸம்சாரமாகிய துக்கசமுத்திரத்தை தாண்டினவராயும், அதை கடக்கஉதவுபவராயும் இருக்கிற சோணாத்ரி நாதனாகிய சிவனுக்கு நமஸ்காரம்.

3. ஜகந்நிவாஸாய ஜகத்திதாய
ஸேநாநிதாநாய ஜயப்ரதாய |
பூர்ண்ணாய புண்யாய புராதனாய
சோணாத்ரி நாதாய நமச்சிவாய ||

உலகங்களுக்கு நன்மை செய்பவராயும், எல்லா உலகங்களிலேயும் இருப்பவராயும், சேனாதிபதியாகவும், ஜயத்தைக் கொடுக்கிறவராயும், எங்கும்எதிலும் நிறைந்தவராயும், புண்யபுருஷராயும், பழமையானவராயும், இருக்கிற சோணாத்ரிநாதனாகிய சிவனுக்கு நமஸ்காரம்.

4. வாகீச வந்த்யாய வரப்ரதாய
உமார்த தேஹாப கணேச்வராய.
சந்த்ரார்க்க வைஸ்வாநர லோசநாய
சோணாத்ரி நாதாய நமச்சிவாய.

தேவகுரு ப்ரஹஸ்பதியினாலே வணங்கப்பெற்றவராயும், விரும்பும் வரத்தைக் கொடுப்பவராயும், உமையின் பாதிசரிரத்தை உடையவராயும் ஸகலசிவகணங்களுக்கு அதிபதியாகவும், சந்திரன், சூரியன், அக்னி, இவர்களை மூன்று கண்களாக உடையவராயும், இருக்கிற சோணாத்ரி நாதனாகிய சிவனுக்கு நமஸ்காரம்.

5. ரதாதிருடாய ரஸாதராய
வேதாச்வ யுக்தாய விதிஸ்துதாய.
சந்த்ரார்க்க சக்ராய சசிப்ரபாய
சோணாத்ரி நாதாய நமச்சிவாய.

வேதங்களாகிய குதிரையையுடையதாயும், சந்திரன், சூரியன், இவர்களை சக்ரமாகயுடையதாயும், இருக்கிற திவ்யதேரில், பிரம்மாவை சாரதியாகக் கொண்டு, ஆரோகணித்தவராயும், ரஸத்தை ஆதாரமாகயுடையவராயும், சந்திரன் போன்ற வெண்மையாக இருக்கிற சிவனுக்கு நமஸ்காரம்.

6. விரிஞ்சி ஸாரத்ய விராஜிதாய
கிரீந்த்ர சாபாய கிரீஸ்வராய.
பாலாக்நி நேத்ராய பணீஸ்வராய
சோணாத்ரி நாதாய நமச்சிவாய ||

பிரம்மாவைத் தனதுதேரின் சாரதியாகக்கொண்டு விளங்குபவரும், கிரீந்திரனான மேருமலையை வில்லாக உடையவராயும், கிரீஸ்வரனானவரும், நெற்றிக்கண்ணில் அக்னியை உடையவராயும், பாம்புகளுக்கு ஈஸ்வரராயும் இருக்கிற சோணாத்ரிநாதனாகிய சிவனுக்கு நமஸ்காரம்.

7. கோவிந்த பாணாய குணத்ரயாய
விஸ்வஸ்ய நாதாய வ்ருஷத்வஜாய |
புரஸ்ய வித்வம்ஸந தீக்ஷிதாய
சோணாத்ரி நாதாய நமச்சிவாய ||

முப்புரப்போரில் தனதுவில்லில் கோவிந்தனையே பாணமாகக் கொண்டவரும், முக்குணத்தால், சகுணபிரம்மவடிவராயும், அனைத்துஉலகத்திர்க்கு நாதராயும், விருஷபத்தைத்வஜமாக எருதைக்கொடியில் உடையவராயும், முப்புரங்களை எரிப்பதில் உறுதியுடன் ஈடுபட்ட தீக்ஷையையுடையவராயும், இருக்கிற சோணாத்ரிநாதனாகிய சிவனுக்கு நமஸ்காரம்.

8. ஜராதி வர்ஜ்யாய ஜடாதராய
அசிந்த்ய ரூபாய ஹரிப்ரியாய.
பக்தஸ்ய பாபௌக விநாசநாய
சோணாத்ரி நாதாய நமச்சிவாய.

நரை, திறை, மூப்பூ இவைகள் அற்றவராயும், செஞ்ஜடைகளை தரித்தவராயும், சிந்திக்கமுடியாத உருவத்தையுடைவராயும், மஹாவிஷ்ணுவுக்கு பிரியமானவராயும், பக்தர்களுடைய பாவக்கூட்டங்களை போக்குபவராயும், இருக்கிற சோணாத்ரி நாதனாகிய சிவனுக்கு நமஸ்காரம்.

9. ஸ்துதிம் சோணாசலேசஸ்ய படதாம் ஸர்வ ஸித்திதம்.
ஸர்வ ஸம்பத் ப்ரதம் பும்ஸாம் ஸேவந்தாம் சர்வதோ ஜநா:.

இந்த சோணாத்ரிநாதருடைய இத்துதியைப் படிப்பவர்களுக்கு எல்லாவிதமான ஸித்திகளையும், எல்லா செல்வங்களையும் கொடுக்கும் இந்த ஸ்துதியை பக்தஜனங்கள் எப்போதும் துதித்து வணங்கி பயன்பெறுவார்களாக.



ஸ்ரீ உண்ணாமுலையம்மை துதி

(ஸ்ரீமான் அப்பய்ய தீக்ஷிதர் அருளியது)

திருவண்ணாமலையில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீஅபீதகுசாம்பா ஸமேத ஸ்ரீ அருணாசலேஸ்வரரை பண்டிதப்ரவர ஸ்ரீமான் அப்பய்ய தீஷிதர், சுவாமிகள் கார்த்திகை உத்ஸவ ஸமயத்தில் தரிசிக்கச் சென்றபோது, ஸ்ரீமான் தீக்ஷிதருக்கு, குளிர்ஜுரம் வந்து, அதனால் வருந்திய அம்மஹான், அம்பாளைக்குறித்து ஸ்தோத்திரம்செய்ய, அவருக்கு ஜுரம் உடனே நீங்கியது. அன்பனுக்கு அருளும் அருணை அம்பிகை.

ஸ்ரீ காஞ்சீபெரியவர்களின் ஆக்ஞைப்படி, ஸ்ரீமான் அப்பய்யதீக்ஷிதர் அவர்களின் இந்த ஸ்தோத்திர ரத்தினத்தைக் கல்லில்செதுக்கி, அடைபீபலம் ஸ்ரீபார்வத்யம்பாள் ஸந்நதியில் வைக்கப்பட்டிருக்கிறது. எனவே, இதைத் தினமும் பாராயணம் செய்து வந்தால், நம்மை எவ்விதநோயும் அணுகாது என்பது நிச்சயம்.

அபீதகுஜாம்பாள் துதிப்பொருள்

1. ஆனந்த ஸிந்து லஹரீம் அம்ருதாம்சுமௌலே:
   ஆஸேவினா மம்ருத நிர்மித வர்த்தி மக்ஷ்ணோ:.
   ஆநந்த வல்லி விததே ரம்ருதார்த்ர குச்சம்
   அம்ப ஸ்மராம் யஹ மபீதகுசே வபுஸ் தே.

உண்ணாமுலையாளாக வீற்றிருக்கும் அன்னையே! ஸ்தன்ய பானமே செய்யாத உலக அன்னையே! உன்திருமேனி அமுதத்தால் நனைந்திருக்கிறது, அத்தகைய திவ்யத்திருமேனியை நினைக்கின்றேன். பார்ப்போர் சேவிப்போர் கண்ணுக்கு நீ மிகுந்த குளுமையை அளிக்கிறாய். சந்திரமௌளியின் பேரானந்தக் கடலின் அலைகளில் நீந்துகிறவர்களுக்கு அமுதத்தை அளிக்கிறாய். அத்தகைய தாயே உன்னை ஸ்மரிக்கிறேன்.

2. நிர்நித்ர கோகநத கோமல காந்த மம்ப
   நித்யம் சுதா நிகரவர்ஷி பதம் த்வதீயம்.
   மூர்ச்சாகர ஜ்வரருஜா மம தாபிதஸ்ய
   மூர்த்நி க்ஷணம் ஸக்ரு தபீதகுசே நிதேஹி.

கடுமையான தாபஜ்வரத்திலும் மூர்ச்சை கொடுக்கும் நோயிலும் அவதிப்பட்டு, கொதிப்படைந்த என் தலையில் உன் திருவடி இருந்துகொண்டே இருக்கட்டும். அமுத வெள்ளம் அல்லவா உன் திருவடிகளில் இருக்கிறது? மலர்ந்த செந்தாமரை போல் மென்மையும் அழகும் பொருந்திய திருவடிகளை ஒரு கணப்பொழுதாவது எண்சென்னிக்கு அணியாக வைத்தருள வேண்டுகிறேன்.

3. சீதாம்சு கோடி ஸுஷமா சிசிரை: கடாக்ஷை:
அவ்யாஜ பூத கருணாரஸ பூர பூர்னை: .
கர்ப்பூர தூளி மிவ திக்ஷு ஸமாகிரத்பி:
அம்ப க்ஷணம் ஸ்நபய மாம் அருணாத்ரி மாந்யே.

அருணமலையாள் போற்றும் என் தாயே. கோடி சந்திரனின் குளுமைபோல் குளிர்சியுடையதும், திசைகள்தோறும் இறைபடும் கற்பூரப்பொடி போன்றதும் எவ்வகைப் பலனையும் எதிர்பாராது கருணைமழை பொழியும் உனது கடைக்கண் பார்வைகளாலே என்னை ஒருகணம் நனைப்பாயாக. (குளிர்விப்பாயாக)

4. ஆவிர்ப்பவ க்ஷண மபீதகுசே புரஸ்தாத்
அம்ப ஜ்வரேண மஹதா மம தாபிதஸ்ய.
யேந த்வதங்க்ரி ருசி ஜால ஸுதா ப்ரவாஹே
மக்நஸ் ததைவ தநுதாப மமும் த்யஜேயம்.

தாயே, முதலில் நீ என் முன் க்ஷணநேரம் தோன்றுவாயாக. மிகுந்த ஜ்வரத்தினால் கொதிப்படைந்து இருக்கிறேன். பாத கமலங்களிலிருந்து பாய்கிற அமுத வெள்ளத்தில் மூழ்கி இந்தக் கொடிய தாபத்தைப் போக்கிக் கொள்கிறேன் அம்மா!

5. நாநாவிதைர் நலிநஜாத லிபி ப்ரக்லுப்தை:
ஆநீத முர்ச்ச மதிகம் க்ஷுபிதைர் ஜ்வராத்யை:.
ஆச்வாஸய க்ஷண மபீதகுசே கராக்ர
க்ரீடா கநத்கநக ஹல்லக ஸௌரபேண.

தாயே, பலவகை ஜுரத்தால் உடல் கொதிப்படைந்த நிலையில் கதிகலங்கி, மூர்ச்சாக்ராந்தனாய், செய்வதறியாமல் இருக்கிறேன். உன் கைவிரல்களில் விளையாட்டாகத் தாங்கியிருக்கும் பொற்றாமரை மலரின் மணத்தை என்மீது வீசி எனக்கு அமைதியை அறிவிப்பாயாக.

6. கண்டே விஷம் விஷமுசோ புஜகா: கபர்த்தே
பார்ச்வே ச பூதபதய: ப்ரமதாஸ்ச்ச பீமா:.
சோணா சலேச முபஸ்ருத்ய பஜேத கோ வா
ந ஸ்யாத் தவாம்ப ஸவிதே யதி ஸந்நிதாநம்.

கழுத்தில் விஷம், சடைமுடியில் விஷத்தைக் கக்கும் ஸர்ப்பங்கள், இருபுறமும், பூதகணங்கள், பயங்கரமான ப்ரமதகணங்கள் இவை யாவும் சோணமலையானிடம் இருப்பதனால் யாராவது இத்தகையவனை. அணிகுவார்களா? மாட்டார்கள். உன் ஸாந்நித்யம் சோணாசலேசரிடம் இருப்பதனால்தான் அனைவரும் வந்து ஸேவிக்கமுடிகிறது. தூய்மை இருக்கும் இடத்தில் பேதைமை இல்லை அல்லவா? காத்தருள்வாய் தேவி.

7. சக்திர் ஜகத் ஜனன பாலந பஞ்சநேஷு
போகேஷு திவ்யமஹிஷீ தருணேந்துமௌளே:.
ஸித்திக்கர ப்ரணயிநீ தவ ஸந்நிதாநம்
யந் நாஸி தஸ்ய தத பீதகுசே ந ஜாநே.

உலக ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹார கார்யங்களில் நீ சக்தியாக விளங்குகிறாய். இளமதியைச் சிரஸில் சூடியவருக்கு நீ சக்தியாக விளங்குகிறாய். இளமதியைச் சிரஸ்ஸில் தரித்திருக்கிற சந்திரமௌளீஸ்வரருடைய இன்ப அனுபவங்களுக்குத் திவ்ய பட்டமஹிஷியாக விளங்குகிறாய். ஆகவே உனது ஸந்நிதானம் கைகண்ட பலனைக் கொடுக்கிறது. அப்படிஇல்லையானால் யார் அறியமுடியும் அம்மா ?.

8. த்வம் ஸாக்ஷிணீ ப்ரளய பைரவ தாண்டவாநாம்
த்வம் சேஷிணீ ஸஹரி தாத்ரு சராசராணாம்.
த்வம் மோசிநீ ஸகல ஸம்ஸ்ருதி ஜாலகாநாம்
த்வாம் ப்ரஹ்ம ஸம்வித மபீதகுசே நமாமி.

உலக அன்னையான அபீத குசாம்பிகே, உன்னை வணங்குகிறேன் ப்ரளய கால பைரவ நடனங்களுக்கு நீ சாக்ஷியாக இருக்கிறாய். ப்ரம்மா, விஷ்ணு, சராசரங்கள், அனைத்துக்கும் நீ தலைவி. பலவகை இன்னல்களிலிருந்து எம்மை விடுவிக்கிறாய். ஆகவே நீயே ப்ரம்மத்தை அறிந்த ப்ரம்ம ஸம்வித்தாக விளங்குகிறாய். அத்தகைய உன்னை வணங்குகிறேன்.

அம்மைதுதி முற்றும்

தீபநமஸ்கார ஸ்துதி.

(காலைமாலை இருவேளையும், தீபம்ஏற்றிவைத்து, இந்த ஸ்லோகத்தைக் கூறி நமஸ்காரம்செய்தால் சகல ஸௌபாக்யங்களும் ஏற்படும்.)

ஸுவர்ண வ்ருத்திம் குரு மே க்ருஹே ச்ரீ:

ஸுதான்ய வ்ருத்திம் குரு மே க்ருஹே ச்ரீ:

கல்யாண வ்ருத்திம் குரு மே க்ருஹே ச்ரீ:

விபூதி வ்ருத்திம் குரு மே க்ருஹே ச்ரீ:

***

சுபம் பவது கல்யாணி! ஆயுராரோக்ய ஸம்பதாம்.
சத்ரு புத்தி விநாசாய தீப ஜ்யோதிர் நமோஸ்துதே.

***

கோமாதாஸ்துதி. (பசுவணக்க துதி)

இந்த அபூர்வமான ஸ்தோத்ரத்தைச் சொல்லி கோபூஜை செய்து, பிரதக்ஷிணம் செய்தால் அளவற்ற புண்யமாகும். சகல பாக்யங்களும் ஏற்படும். வாசக அன்பர்கள் பயன் பெறவேண்டும்.

நமோ தேவ்யை மஹாதேவ்யை ஸுரப்யை ச நமோ நம:.
கவாம் பீஜ ஸ்வரூபாயை நமஸ் தே ஜகதம்பிகே. 1

நமோ ராதா ப்ரியாயை ச பத்மாம்சாயை நமோ நம:.
நம: கிருஷ்ண ப்ரியாயை ச கவாம் மாத்ரே நமோ நம:. 2

கல்பவிருக்ஷ ஸ்வரூபாயை ஸர்வேஷாம் ஸந்ததம் பரம்:
ஸ்ரீதாயை தனதாயை ச வ்ருத்திதாயை நமோ நம:. 3

சுபதாயை ப்ரஸன்னாயை கோபதாயை நமோ நம:.
யசோதாயை கீர்த்திதாயை தர்மக்ஞாயை நமோநம:. 4

இதம் ஸ்தோத்ரம் மஹத் புண்யம் பக்தியுக்தச்ச யப் படேத்.
ஸ கோமான் தனவான் சைவ கீர்திமான் புத்ரவான் பவேத். 5

சுபம்

ருணஹர கணேச ஸ்தோத்ரம்

(இந்த ஸ்தோத்ரத்தை தினம் படிப்பதால் கடன் நிவர்த்தி, வியாபார லாபம், ஐச்வர்ய விருத்தி முதலிய க்ஷேமங்கள் ஏற்படும்)

ஸிந்தூர வர்ணம் த்விபுஜம் கணேசம்.
லம்போ தரம் பத்ம தலே நிவிஷ்டம்.
பிர்மாதி தேவை பரி ஸேவ்யமானம்.
ஸித்தைர் யுதம் தம் ப்ரணமாமி தேவம்.

1. ஸ்ருஷ்ட்யாதௌ ப்ரம்மணா ஸம்யக் பூஜித: பலஸித்தயே.
ஸதைவ பார்வதீபுத்ர: ருணநாசம் கரோது மே

2. த்ரிபுரஸ்ய வதாத் பூர்வம் சம்புனா ஸம்யகர்ச்சித:.
ஸதைவ பார்வதீபுத்ர: ருணநாசம் கரோதுமே.

3. ஹிரண்யகச்யப்வாதீநாம் வதார்த்தே விஷ்ணுநார்ச்சித:.
ஸதைவ பார்வதீபுத்ர: ருணநாசம் கரோதுமே.

4. மஹிஷஸ்ய வதே தேவ்யா கணநாத: ப்ரபூஜித:.
ஸதைவ பார்வதீபுத்ர: ருணநாசம் கரோதுமே.

5. தாரகஸ்ய வதாத்பூர்வம் குமாரேண ப்ரபூஜித:.
ஸதைவ பார்வதீபுத்ர: ருணநாசம் கரோதுமே.

6. பாஸ்கரேண கணேசோஹி பூஜிதச் சவிஸித்தயே.
ஸதைவ பார்வதீபுத்ர: ருணநாசம் கரோதுமே.

7. சசிநா காந்திவிருத்யர்த்தம் பூஜிதோ கணநாயக:.
ஸதைவ பார்வதீபுத்ர: ருணநாசம் கரோதுமே.

8. பாலநாய ச தபஸாம் விச்வாமித்ரேண பூஜித:.
ஸதைவ பார்வதீபுத்ர: ருணநாசம் கரோதுமே.

பலச்ருதி

இதம்து ருணஹரம் ஸ்தோத்ரம் தீவ்ர தாரித்ரிய நாசனம்.
ஏகவாரம் படேந் நித்யம் வர்ஷமேகம் ஸமாஹித:.

தாரித்ரியம் தாருணம் த்யக்த்வா குபேரஸமதாம் வ்ரஜேத்

ஸ்ரீ க்ருஷ்ணயாமளதந்த்ரே உமாமஹேஸ்வர ஸம்வாதே
ருணஹரகணேச ஸ்தோத்ரம் ஸம்பூர்ணம்.
சுபம்.

ஸ்ரீ அன்னபூரணி துதி.

(அன்னலக்ஷ்மியான, அன்னபூரணியின் அனுக்ரகம் இருந்தால் அன்னவிசாரம் இருக்காது என்பார்கள். அப்படிப்பட்ட ஸ்ரீ அன்னபூரணியைக் குறித்து தியானம்செய்து உணவுபற்றிய கவலைநீங்கி சுகவாழ்வு வாழவேண்டும் என்றஎண்ணத்துடன், ஒருச்லோகத்தைமட்டும் கொடுத்துள்ளோம். இதை தினசரி காலையில் ஸ்நானம்செய்தபின் பக்தியுடன் 10 தடவை ஜபித்தால் ஸ்ரீ அன்னபூரணியின் அருள் கிடைக்கும் என்பது சான்றோர் வாக்கு)

அன்னபூர்ணா அன்னதாத்ரீ அன்னராஸி க்ருதாலயா.
அன்னதா அன்னரூபாச அன்னதாதா ரதோத்ஸவா.

மேலும் அன்னபூர்ணாவின் சகஸ்ரநாமத்தை பாராயணம் செய்வதும், மிகவும் விசேஷமானது. அதற்கு ஏராளமான உயர்ந்த பலன்கள் சொல்லப்பட்டுள்ளது.

புவனாபதி சக்கரம். (திருமந்திரம்)

திருமூலதேவநாயனார் அருளிய திருமந்திரம் நான்காம் தந்திரம் (திருமூலர் திருமந்திரத்தில் புவனேச்வரியின் யந்திரம் மந்திரம் மகிமை பூசைமுறை, பூசைப்பயன் இவற்றை 11 மந்திரங்களில் கூறியுள்ளது இங்கு உற்றுநோக்கி பின்பற்றத்தக்கதாம்).

ககராதி யோரைந்துங் காணிய பொன்மை
அகராதி யோரா றரத்தமே போலும்
சகராதி யோர்நான்குந் தான்சுத்த வெண்மை
ககராதி மூவித்தை காமிய முத்தியே 1

ஓரில் இதுவே உரையும்இத் தெய்வத்தைத்
தேரிற் பிறிதில்லை யானொன்று செப்பக்கேள்
வாரித் திரிகோண மனமின்ப முத்தியுந்
தேரில் அறியுஞ் சிவகாயந் தானே. 2

ஏக பராசத்தி ஈசற்காம் அங்கமே
யாகம் பராவித்தை யாமுத்தி சித்தியே
ஏகம் பராசத்தி யாகச் சிவகுரு
யோகம் பராசத்தி உண்மைஎட் டாமே 3

எட்டா கியசத்தி எட்டாகும் யோகத்துக்
கட்டாகு நாதாந்தத் தெட்டுங் கலப்பித்த
தொட்டாத விந்துவுந் தானற் றொழிந்தது
கிட்டா தொழிந்தது கீழான மூடர்க்கே. 4

ஏதும் பலமா மியந்திரா சன்னடி
ஓதிக் குருவின் உபதேசம் உட்கொண்டு
நீதங்கும் அங்க நியாசந் தனைப்பண்ணிச்
சாதங்கெடச் செம்பிற் சட்கோணத் தானிடே. 5

சட்கோணத் தன்னில் ஸ்ரீம்ஹ்ரீம் தானிட்டு
அக்கோண மாறின் தலையிலரீங் காரமிட்
டெக்கோண முஞ்சூழ எழில்வட்டம் இட்டுப்பின்
மிக்கீரேட் டக்கர மம்முதன் மேலிடே. 6

இட்ட இதழ்கள் இடையந் தரத்திலே
அட்டஹவ் விட்டதின் மேலே உவ்விட்டுக்
கிட்ட இதழ்களின் மேலே கிரோம்சிரோம்
இட்டுவா மத்தாங் கிரோங்கென்று மேவிடே 7

மேவிய சக்கர மீது வலத்திலே
கோவை யடையவே குரோங்சிரோங் கென்றிட்டுத்
தாவில்ரீங் காரத்தாற் சக்கரஞ் சூழ்ந்து
பூவைப் புவனா பதியைப்பின் பூசியே 8

பூசிக்கும் போது புவனா பதிதன்னை
ஆசற் றகத்தினில் ஆவா கனம்பண்ணிப்
பேசிய பிராணப் பிரதிட்டை யதுசெய்து
தேசுற் றிடவே தியான மதுசெய்யே. 9

செய்ய திருமேனி செம்பட் டுடைதானுங்
கையிற் படையங் குசபாசத் தோடபய
மெய்யில் அணிகலன் இரத்தின மாமேனி
துய்ய முடியும் அவயவத்தில் தோற்றமே. 10

தோற்போர்வை நீக்கித் துதித்தடைவிற் பூசித்துப்
பாற்போ னகமந் திரத்தாற் பயின்றேத்தி
நாற்பால நாரதா யாசுவா காஎன்று
சீர்ப்பாகச் சேடத்தை மாற்றிப்பின் சேவியே. 11

சேவிப் பதன்முன்னே தேவியைத் வாகனத்தாற்
பாவித் திதய கமலம் பதிவித்தங்
கியாவர்க்கும் எட்டா இயந்திர ராசனை
நீவைத்துச் சேமி நினைந்தது தருமே.

–(ஸ்ரீதிருமூலதேவநாயனார்)

ஸ்ரீ புவனேச்வரீ கவசம்

(புதுக்கோட்டை புவனேசீ அருள்தரும் செந்தமிழ் கவசமிதை ஓதுவோம்)

புவனேஸ்வரி தியானம்

அங்குச பாச மேந்தி அபயமே வரதம் தாங்கும்
பங்கயக் கரத்தள் பீதாம் பரமணி யிடையள் பொற்பூண்
பைங்கள நிரம்பப் பூண்டாள் பதினாறு கலையெழுத்துள்
பொங்கிய ஓரெழுத்தாள் புவனேசி பாதம் போற்றி

காப்பு

கணபதியே சரணம் கணநாதா ரக்ஷிப்பாய்
கந்தனுக்கு மூத்தோனே கவசத்தைத் தந்திடுவாய்
மாதாவின் கவசத்தை மங்களம் பெருகிடவே
மங்கள கணபதியே மகிழ்ந்தெனக் கருள்வீரே

பஞ்சமுக கணபதியே மனமாசறுத்துத் தேசருளி
வல்லபை கணபதியே வல்வினைகளைப் போக்கி
மஹத்தான உன்னருளை மாரிபோல் பொழிந்திட்டு
பூலோகம் உய்வுபெற புவனேசி கவச மீவாய்

நூல்கவசம்

புவனேச்வரித் தாயே புவனமெல்லாம் உய்வுபெற
புண்ணியத்தால் உன்நாமம் போற்றுகிறேன் கேட்டிடம்மா.
என் ஹ்ருதயத் துள்ளிருந்து என்னறி வாகியே நீ
சீர்மிக்க மாதாவே சீக்கிரமே வந்திடம்மா.

பாக்கியம் பலவேண்டிப் பகர்கின்றேன் கவசத்தை
பாலாம்பிகைத் தாயே பரிவுடனே வந்திடம்மா.
படைப்புக்கும் முன்புள்ள பராசக்தித்தாயே கேள்
பாலன் இவ்வனையுமே பார்த்து நீ ரக்ஷிப்பாய்.

மூவர்கள் போற்றி ஏத்தும் முதல்வியே புவனேசி
தேவாதி தேவர்களும் தேவியுன்னை வழிபட்டே.
சாகாவரம் பெற்று சர்வசக்தி எனப் புகழும்
லலிதாம்பிகைத் தாயே சடுதியில் வந்திடம்மா.

மார்க்கண்ட மாமுனிவர் மஹான் துர்வாஸ ரிஷி
அகஸ்திய ரிஷி போன்றோர் அன்னையுன்னை வழிபட்டே.
இன்றும் இருந்துகொண்டு இவ்வுலகிற் கருளுவதை
என்னவென்று நானுரைப்பேன் என்தாயே உன் மகிமை.

வாராஹி தேவியே வந்திப்பேன் உன் அடியை
பாதம் நகம் விரலைப் பார்வையால் நீ காத்திடம்மா.
முழங்கால் இரண்டையுமே மலைமகளே காத்திடம்மா
தொடைகள் இரண்டையுமே துர்க்கை நீ காத்திடம்மா.

பின்புறத்தை நாரஸிம்மி பிறழாது காத்திடம்மா
வயிற்றைப் பைரவியே வலியவந்து காத்திடம்மா.
மார்பை சிவதூதி மாண்புடனே காத்திடம்மா
வலதிடது தோளை வைஷ்ணவியே காத்திடம்மா.

மனோன்மணித்தாயே என் மார்பையுமே ரக்ஷிப்பாய்
மஹாத்ரிபுர சுந்தரி நீ மனத்தையும் காத்திடம்மா.
என் ஹ்ருதயத்தில் புவனேசி நீ இருந்து ரக்ஷிப்பாய்
கழுத்தை மாஹேந்திரியும் முகத்தை காத்யாயனியும்.

தலையைத் தாக்ஷாயணியும் தலைக்குள் சிவ சக்தித்தாயும்
கண் காது வாய் மூக்கைக் காமாக்ஷியும் காத்திடம்மா.
பற்கள் அனைத்தையுமே பத்மாக்ஷி காத்திடம்மா
நாக்கை வாக்தேவி நயமுடன் காத்திடம்மா.

புருவங்க ளிரண்டையுமே பூதேவி காத்திடம்மா
புருவங்களின் நடுவில் ஸ்ரீதேவியிருந்து காப்பாய்.
கண்ணொளி யாயிருந்து காப்பாய் காமேச்வரித்தாயே
கண்களின் மணிகளையே காலஹந்த்ரி காப்பாய் நீ.

கண்ணிமையைக் காத்திடம்மா காத்யாயனித்தாயே
அங்கங்களனைத்தையுமே ஆதிசக்தி காத்திடம்மா.
என்னை நீ ரக்ஷிப்பாய் என் தாயே ரக்ஷிப்பாய்
பூரணி பூமியிலும் மேலே பவானித் தாயும்.

திக்குகள் தோறுமே திருபுராம்பா காத்தருள்வாய்
மேல்கீழ் குறுக்கெல்லாம் மூகாம்பா ரக்ஷிப்பாய்.
காத்திடம்மா காயத்ரீ கண்ணிமைபோல் காத்திடம்மா
வாராஹி கௌமாரி நாரஸிம்மி ரக்ஷிப்பாய்.

சண்டிகை சக்தி கௌரி சங்கடங்கள் தீர்த்திடுவாய்
அஷ்டலக்ஷ்மித் தாயே அமர்ந்திடம்மா என்னுடனே.
பிரியா திருந்திடம்மா ப்ரத்யக்ஷம் ஆகிடம்மா
புவனேச்வரித்தாயே புவனமெல்லாம் நிறைந்தவளே.

புவனேசி என்றாலே புண்ணியம் பெருகிடுமே
புண்ணிய புருஷர்கள் புவனேசித் திருநாமம்.
போற்றிடுவர் போற்றியுமே புண்ணியத்தைப் பெருக்கிடுவர்
திருவடியும் பற்றிடுவர் திருநாமம் ஜெபித்திடுவர்.

நாமத்தின் மஹிமையினால் நமனையும் வென்றிடுவர்
ஸகல ஸௌபாக்யமும் ஸாயுஜ்ய முக்தியுமே.
தந்திடுவாள் புவனேசி தரித்திரத்தை ஓட்டிடுவாள்
சாந்தியின் வடிவுகொண்ட ஸர்வேசி நமஸ்காரம்.

சிரத்தை வடிவான ஸ்ரீமாதா நமஸ்காரம்
காந்தியின் வடிவான காமாக்ஷி நமஸ்காரம்.
லக்ஷ்மியின் வடிவான லலிதாம்பா நமஸ்காரம்
விருத்தியின் வடிவான வ்ருத்தாம்பா நமஸ்காரம்.

ஸ்மிருதியின் வடிவான ஸ்கந்தமாதா நமஸ்காரம்
தயையின் வடிவான தர்மாம்பா நமஸ்காரம்.
துஷ்டியின் வடிவான துக்கஹந்த்ரீ நமஸ்காரம்
மாத்ரு வடிவான மஹாதேவி நமஸ்காரம்.

மயக்க மகற்றிடுவாய் மாஹேசி நமஸ்காரம்
தேவியே புவனேசி தினமுன்னை நமஸ்கரிப்பேன்.
தீராத வியாதிகளைத் தீர்த்து நீ ரக்ஷிப்பாய்
அகந்தையை ஒழித்திடுவாய் அம்மா புவனேசி.

பிறவிப்பிணி தீர்ப்பாய் பிரம்மசக்தித்தாயே கேள்
என் துன்பத்தைத் துடைத்திடவே தீப துர்க்கையாய் வந்திடம்மா.
துர்காம்பிகைத் தாயே துரிதத்தை விலக்கிடம்மா
அஷ்டமா ஸித்திகளை அடியேனுக் கருளிடம்மா.

மாகாளியாய் வந்து மனமாயையை ஒழித்திடம்மா
சாமுண்டீச்வரியே ஸம்சயத்தைப் போக்கிடம்மா.
காளிகா தேவியே காத்திடம்மா என்னையும் நீ
வாராஹியாய் வந்து வழியில் காத்தருள்வாய்.

இந்திராணித்தாயே இம்மையில் நீ ரக்ஷிப்பாய்
வைஷ்ணவி மாதாவாய் வந்து வரமருள்வாய் நீ.
கௌமாரித் தாயே நீ காத்திடம்மா உள்ளிருந்து
ப்ரஹதாம்பிகைத் தாயே பிரமையையும் போக்கிடுவாய்.

துன்பம் துயரத்தைத் துடைத்துக் காத்திடவே
காமக் குரோதத்தைக் கலக்கி விரட்டிடவே
சத்துருவாம் பகைவனையும் சம்சய அரக்கனையும்
துஷ்டர்களை விரட்டிடவே வனதுர்கா வந்திடம்மா.

பத்துத் திக்கிலுமே பத்ரகாளி காத்திடம்மா
மாதா பாலாம்பிகையே மாயையைப் போக்கிடம்மா.
சும்ப நிசும்பனைப் போல் அகந்தையை அழித்திடம்மா
ஸிம்ம வாஹனத்தில் ஜய துர்க்கே வந்திடம்மா.

ஜகத் ஜனனி ஜகன்மாதா ஜய புவனேசி த்தாயே
மமதையில் மயங்காமல் மாதங்கி காத்திடுவாய்.
அனைத்தையும் கொடுக்கும் அன்னபூர்ணேச்வரியே
குறையற்ற கல்வியைக் கொடுத்திடுவாய் கலைவாணி.

மஹிஷாசுரனையும் மற்றுமுள்ள தூம்ரனையும்
சண்டனையும் முண்டனையும் ரத்தபீஜாசுரனையும்.
அகம்பாவ அசுரர்களை அழித்த அம்மே ஸ்கந்தமாதா
சாமுண் டீஸ்வரியே சந்தோஷ மெனக்கருள.

சக்தியாய் வந்திடம்மா புவனாம்பிகைத் தாயே
சத்து சித்தின் வடிவான சித்தேச்வரித் தாயே
ஜயந்தி மங்களா காளி ஜய ஜய போற்றி போற்றி
பத்ரகாளி கபாலினியே பராபரே போற்றி போற்றி.

பூரண புராதனியே புவனேசி போற்றி போற்றி
அகிலாண்டேச்வரியே அன்னையே போற்றி போற்றி.
ஆதிபராசக்தியான ஆசோபனா போற்றி போற்றி
கள்ளம் கபடம் நீக்கும் காமாக்ஷியே போற்றி பேற்றி.

கருணைக் கடலான வம்மே காத்யாயனியே போற்றி
ஆயிரம் நாமமுள்ள ஆதி புவனேசி போற்றி.
சாந்தி சுகம் தருவாய் ஷண்முகன் தாயே போற்றி
ஹயக்ரீவர் போற்றி ஏத்தும் ஆதி லலிதா போற்றி.

சிரத்தா பக்திதரும் சிவகாமி போற்றி போற்றி
கலிதோஷம் அகற்றுவிப்பாய் கல்யாணி போற்றி போற்றி.
ஏகாக்ஷரம் தருவாய் வேதவேத்யா போற்றி போற்றி
ஈசனுள் குடியிருக்கும் புவனேசி போற்றி போற்றி.

லக்ஷ்மீ வாணி போற்றும் லலிதாம்பா போற்றி போற்றி
ஹ்ரீங்கார ரூபமான புவனமாதா போற்றி போற்றி.
ஹரிப்ரம்மேந்திரர்கள் அகத்துள்ளோய் போற்றி போற்றி
ஸர்வேசி ஸாக்ஷிரூபே ஸர்வக்ஞே போற்றி போற்றி.

ககாரார்த்தா கபாலினி காலஹந்த்ரி போற்றி போற்றி
ஹம்சமந்த்ர மயமான ஹம்ஸவதி போற்றி போற்றி.
லகாராக்ய லதாபூஜ்யா ராஜேச்வரி போற்றி போற்றி
ஹ்ரீம் மத்யா ஓங்காரி ஜகன்மாதா போற்றி போற்றி.

ஸநகாதி முநித்யேயே ஸச்சிதானந்தே போற்றி போற்றி
கல்யாணீ காதிவித்யே கமலாக்ஷி போற்றி போற்றி.
லகாரிணீ லப்தரூபே லப்தசக்தே போற்றி போற்றி
ஹ்ரீங்கார மூர்த்தித் தாயே புவனேசி போற்றி போற்றி.

பஞ்ச தசாக்ஷரித்தாயே பவநாசினி போற்றி போற்றி
ஸ்ரீமாதாஸ்ரீ மஹாராஜ்ஞீ சீருடனே வந்திடம்மா.
ஸிம்ஹாஸனேச்வரியே சீக்கிரமே வந்திடம்மா
சிதக்னிகுண்ட ஸம்பூதா சித்ரூபீ வந்திடம்மா.

ஸர்வாபரண பூஷிதையே ஸர்வேசி வந்திடம்மா
சிவாயெனப் பெயர்கொண்ட சிந்தாமணி வந்திடம்மா.
மங்களத்தைச் செய்திடம்மா மாதா புவனேஸ்வரியே
ப்ரும்ம விஷ்ணு ருத்ரன் ஈசானன் நால்வருடன்.

ஸதாசிவனையுமே பீடமாக்கிக் கொண்ட சிவே
ஐவரான மஞ்சத்தில் அமர்ந்து ஜோதியானவ்ளே.
கதம்பவனவாஸினியே காமகோடி வரமருள்வாய்
சாக்தப் பிரணவத்தை சடுதியில் நீ தந்திட்டு.

கல்மஷங்களைப் போக்கிக் கலிதோஷ மகற்றிடுவாய்
நகக்கண் வழியாக நாரணனைச் சிருஷ்டித்தோய்.
ஹரிஹர ப்ரம்மாக்கள் அனன்யமாய்த் தொழுதேத்தும்
தேவர்களும் முக்தர்களும் தினமும் தொழுதேத்தும்.

ஸித்தர்களும் பக்தர்களும் ஜன்மமெல்லாம் தொழுதேத்தும்
புவனேஸ்வரித்தாயே போதுமம்மா இப்பிறவி.
மறுபிறவி இனிவேண்டாம் மாதா புவனேஸ்வரியே
பிறவிப்பயன் தந்த புவனேசித் தாயே கேள்.

பற்றினேன் திருவடியைப் பற்றறுப்பாய் புவனேசி
புவனேசியுன்நாமம் பிணியறுக்கும் திருநாமம்.
என்றுணர்ந்தேன் உன்னருளால் என்தாயே புவனேசி
மூலமந்த்ராத்மிகையே முக்தியும் தந்திடம்மா.

பக்தனுக்கு வசமாகும் பார்வதியே வந்திடம்மா
பயத்தைப் போக்கிவிடும் பரதெய்வமே வருவாய்.
நிர்மலா நித்யா நிராகுலா வந்திடுவாய்
மோகநாசினித்தாயே மோகத்தைப் போக்கடிப்பாய்.

பாபநாசினி தாயே பாபத்தைப் போக்கிடுவாய்
கோபத்தைப் போக்கடிக்கும் க்ரோத சமனித்தாயே.
லோபித்தன மகற்றும் லோபநாசினியே கேள்
சந்தேகம் அகற்றுவிக்கும் ஸம்சயக்னீ கேட்டிடம்மா.

பாபநாசினி மாயே பந்தத்தைப் போக்கிடம்மா
பேதபுத்தியை அகற்றும் பேதநாசினியே கேள்.
மரணபய மகற்றிடுவாய் ம்ருத்யுமதனித் தாயே
சுகத்தைத் தந்தருள்வாய் சுகப்ரதா சுகமருள்வாய்.

துராசாரத்தை யோட்டும் துராசாரசமனீ கேள்
ஸர்வேச்வரீ ஸர்வமயீ ஸர்வ மந்த்ரஸ்வரூபிணியே.
மாஹேச்வரீ மஹாதேவி மஹாலக்ஷ்மீ சுந்தரியே
மஹாரூபே மஹாபூஜ்யே மஹாபாதக நாசினியே.

பானுமண்டல மத்யஸ்தே பைரவி பகமாலினியே
பத்மாஸனே பகவதி பத்மநாப சகோதரியே.
புருஷார்த்த ப்ரதே பூர்ணே போகினி புவனேச்வரியே
தத்வாஸனே தத்வமயீ தத்துவத்தை உணர்த்திடுவாய்.

குமாரகணநாதாம்பா அஹங்காரம் அகற்றிடுவாய்
ராஜ ராஜேச்வரித் தாயே ராஜ்யலக்ஷ்மீ வரமருள்வாய்.
ஸச்சிதாநந்தரூபிணியே ஸதாநந்தம் தந்திடுவாய்
ஸ்ரீசக்ர ராஜநிலயே ஸ்ரீமத் த்ரிபுர சுந்தரியே.

ஸ்ரீலலிதாம்பிகைத் தாயே சீக்கிரமே வரமருள்வாய்
வரமருள்வாய் வரமருள்வாய் வந்திப்பேன் புவனேசி.
புவனேசி திருவடியைப் புண்ணியத்தால் பற்றிவிட்டேன்
சிக்கெனப் பற்றிவிட்டேன் புவனேசி உன்னடியை.

பற்றெல்லாம் அறுத்திடுவாய் பராசக்தி புவனேசி
பிறந்து பிறந்திளைத்தேன் பிறவா வரமருள்வாய்.
துன்பமெல்லாம் விலக்கித் துரியத் திருத்திடுவாய்
ஞான வைராக்கியமும் நான்மறை ரகசியமும்.

ஆகம புராணத்தின் அகத்துள்ள ரகசியமும்
வேதாந்த ரகசியமும் விளக்கிடுவாய் புவனேசி.
பிறவிப்பிணி அகற்றிப் பிரம்மமய மாக்கிடம்மா
எல்லாம் சிவமெனவே எனக்கு நீ அருளிடுவாய்.

நெஞ்சத்துள் நீ இருந்து நித்ய முக்தனாக்கிடம்மா
அல்லும் பகலும் அடியேன் இவன் உன்னையன்றி.
மற்றோர் நினைவின்றி மஹராஜி போற்றுகிறேன்
போற்றுகிறேன் போற்றுகிறேன் புவனேசி பொன்னடியை.

தலைமேலாம் தளத்தில் தந்திடம்மா தரிசனமும்
தரிசனம் தந்திட்டுத் தரித்திரத்தை ஒழித்திடம்மா.
உள்ளத்துள்ளேயிருந்து உண்மையினை யுணர்த்திடம்மா
திரிபுர சுந்தரித்தாயே தீர்த்திடுவாய் வினைகளையும்.

நான் உன்னைவிடமாட்டேன் நவின்றிடுவாய் உபதேசம்
ஹ்ரீங்காரம் தந்துதாயே என்னில் உனைக்காட்டி.
உன்னில் எனைக்காட்டி உய்விப்பாய் என்னையும்நீ
ஆத்ம சக்தியாயிருந்து நீ அன்புடனே ரக்ஷிப்பாய்.

அறம் பொருள் இன்பத்தை அம்மே கொடுத்திடுவாய்
வீட்டையும் தந்திட்டு விதியெல்லாம் விரட்டிடுவாய்.
பேரின்ப வீடருளிப் பிறவா வரம் தந்து
ப்ரம்மா னந்தத்தோடு பிரியா திருந்திடச் செய்.

திடம்பெறவே உன்னை நானென்றுணர்ந்திடச் செய்
புவனத்தைப் பொய்யென்று புவனேசி காட்டிடம்மா.
விருப்பு வெறுப்பற்று என்னை இருத்திடுவாய்
நிராசையான வீட்டில் என்னையும் நீ நிறுத்திடம்மா.

உள்ளும் புறமும் உன்னையே காட்டிடம்மா
காணும் காட்சியெல்லாம் காந்திமதி நீ என்றும்.
ஓசை ஒளியெல்லாம் உமாதேவி தானென்றும்
ஸ்தாவர ஜங்கமமெலாம் ஜகத்தாத்ரீ நீயென்றும்.

புவனேசி உணர்த்திடுவாய் புனிதனாக மாற்றிடுவாய்
என்னையுமே காத்திடுவாய் என்னம்மே புவனேசி.
நின்றும் இருந்துமே நின்நாமம் ஏத்திடுவேன்
நடந்தும் கிடந்துமே நானுன்னைப் போற்றிடுவேன்.

இமைப்பொழுதும் உன்நாமம் மறந்திடமாட்டேன் நான்
என்நினைவெல்லாம் நீயாக நின்றிடுவாய் புவனேசி.
என் உணவெல்லாம் உனக்கேற்ற நைவேத்யமாகுமம்மா
நான் நடப்பதே பிரதக்ஷிணமாய் நம்பிவிட்டேன் தாயே கேள்.

என் உட லாட்டமெல்லாம் உனக்கருளும் முத்திரையாம்
என் உயி ருக்கும் உயிரான ஆத்மசக்தி நீயன்றோ.
அங்கிங் கெனாதபடி எங்கும் சக்தி மயம்
அழகிலும் அன்பிலும் அறிவிலும் சக்திமயம்.

அனைத்தும் பராசக்தி அணுக்களெல்லாம் சக்திமயம்
சக்தியில்லாத தெய்வம் சவமென் றுணர்ந்திடடா.
தெய்வங்களுக்குள்ளே தேவி யிருப்பதாலே
சக்தியுள்ள தெய்வமென்று சடுதியில் சொல்லுகிறார்.

ஹரிஹர ப்ரம்மாவும் அன்புள்ள தேவர்களும்
ரிஷிகளும் ஞானிகளும் ஸித்தர்களும் பக்தர்களும்.
சக்தியைத் தொழுவதாலே சர்வசக்தியும் பெற்றார்
புவனேசி மாதாவை முழுமனத்தோடு நீயும்.

அகத்துள் துதித்தேத்தி அன்புடன் சரணடைந்து
இடைவிடாது உனதகத்துள் இக்கணமே இருத்தி.
ஓம் ஸ்ரீம் ஹ்ரீம் ஸ்ரீம் என்று உறுதியாக ஏத்தியும் நீ
மலைபோல் இருந்திட்டால் மஹத்துவம் புலப்பட்டு.

தன்னில் புவனசக்தி தரிசனம் காணலாமே
உன்னில் புவனசக்தி ஒன்றையே கண்டிடலாம்.
புவனமெல்லாம் புவனசக்தி புலப்படுமுன்னுள்ளே
அகமும் புறமும் ஆதிசக்தி காண்பதற்கு.

அன்னை புவனேஸ்வரியை அகத்துள் இருத்திடடா
அன்னை புவனேஸ்வரியை அகத்துள் இருத்துவோர்க்கு.
அழகெலாம் சக்தியாகும் அன்பெல்ாம் சக்தியாகும்
அறிவெலாம் சக்தியாகும் அனைத்துமே சக்தியாகும்.

சத்தியம் சக்தியாகும் ஞானமும் சக்தியாகும்
சாந்தம் ஆனந்தம் சக்தியாய்த் தோன்றிவிடும்.
ஆனந்தம் வேண்டிநீயும் ஆதிசக்தி புவனையையும்
அன்புடன் பற்றிடடா அன்னை அருள் கிட்டிடுமே.

பகுத்தறிவுள்ள நீயும் பற்றிடடா புவனையையும்
அனைவருள்ளிருக்கும் ஆன்மா புவனேசி.
அதுவே நானென்று அகத்துள் உணர்ந்திடலாம்
அழிவிலாச் சக்தி ஆன்ம சக்தியாய்.

அகத்துள்ளே உண்மையாய் ஆன்மாவாய் இருப்பதை
இம்மையில் உணர்ந்து நான் இன்புற்றிருப்பதற்கு.
அமைதியாய் வாழ்வதற்கு அருள்வாய் வரமெல்லாம்
அருட்குலத் தாயே ஆன்ம சக்தியே.

அற்புதமாய் நான் வாழ அடியனுக்கருள்வதுடன்
அம்மையே ஆன்மா அதுவே நானும்.
அதுவே நீயும் அனைத்தும் அதுவென்று நீ உணர்த்து
மனமே! அம்மையின் உருவம் அன்பென்பர் ஞானிகள்.

ஸித்தர்கள் அன்பையே எனதம்மை யென்பர்
அன்பின்றி உலகில் வளமில்லை மறவாதே.
பார்க்குமிடமெல்லாம் அன்பினைக் கண்டிட
பராசக்தியாய் அன்பைப் பற்றிடு நீ இக்கணமே.

பாவனையுடன் நீயும் அடைக்கலமாகி விடு
பார்க்கலாம் உனக்குள் அற்புதக் கடவுளை.
அன்பே தானாய் அகத்துள் ஆன்மாவாய்
அம்மையே உணரச் சரண மடைந்திடப்பா.

உனதறிவான உனது ஆன்மாவை
உனக்குள் நீ உணர உடனடியாக.
இம்மையில் இக்கணமே உண்மையாகச் சரணடைவாய்
மாதாவின் அருளால் மாசற்ற உனதான்மா.

சுயம் ஜோதியாய் சுத்தப் பிரம்மமாய்
அகத்துள் உணரலாம் நம்பிடுவாய் மனமே.
இச் ஜகத்தையெல்லாம் அருட்குல மாக்கிடவும்
நல்லறிவாற்றலும் நலந்தரு ஞானமுடன்.

பூரண மனிதனாய்ப் புவனை நீ எனை ஆக்கி
பாக்கியத்தோடு பாரெல்லாம் புகழ்பெறப்.
புனிதனாக்கி என்னைப் பொலிவுறச் செய்குவாய்
வேதவேதாந்த வாழ்வும் வீரத்தோடறமும் ஈந்து.

நல்ல நீதியோடருளும் தந்து
நன்நெறியில் எனை இருத்தி வைத்து.
புத்தியில் அமைதியோடு அன்பெனும் அழகும் தந்து
அருட்குலமோங்கும் தொண்டை இடைவிடா தருளித்தாயே.

ஈதலில் இன்பம்தந்து இன்பத்தில் இறையருள் காட்டிச்
சாதலும் பிறப்புமில்லா வரத்தையும் தந்திட்டென்னை.
பூரண ப்ரம்மஞானம் பொருந்திய வாழ்வையருளி
தான்தானாய் நிலைத்திடவே நீ வரம் தந்திடம்மா.

மனமே கவசத்தை தினமுமோதி காயத்தை சுத்திசெய்து
கவசத்தைப் பொருள் உணர்ந்து கருத்தோடு ஓதிவிட்டால்.
கள்ளம் கபடறுக்கும் காமக் கசடறுக்கும்
வினைப்பயனையும் விரட்டும் புவனேசி கவசம் நம்பு.

பகுத்தறிவுள்ள சீடா பற்றிடடா கவசத்தை
கவசத்தை ஓதியும் நீ கலிதோஷ மகற்றிடடா.
கவச பாராயணத்தால் கள்ளமில்லா வுள்ளமாகும்
கள்ளமில்லா வுள்ளத்தில் காணலாமே புவனையையும்.

மனக்கோட்டை கட்டாமல் புதுக்கோட்டை வந்திடடா
புதுக்கோட்டையுள் நீயும் புவனேசி கண்டிடடா.
பற்றிடடா புவனேசி பாதமதைப் பற்றிடடா
பற்றிவிட்டால் பற்றற்ற பரசுகமும் கிட்டிவிடும்.

ஆனந்தமாகவே நீ அகத்துள் மாறிடுவாய்
அன்னையின் கவசத்தை அன்புடனே நெக்குருக.
ஆசாரநிஷ்டையுடன் அனுதினமும் ஓதுவீரேல்
அறம் பொருள் இன்பம் வீடு அனுக்ரஹித்தாட் கொண்டிடுவள்.

அதிசுலபமாகவேதான் அன்னையுமே முன்னிற்பள்
மாதாவின் கவசமிதை மனமுருகி ஓதுவீரேல்.
அஷ்ட லக்ஷ்மியும் அகலாதிருந்திடுவள்
மறவாது ஓதிட்டால் மஹராஜி அருளுண்டாம்.

பொருளுண்டாம் மாதாவின் புண்ணிய லோகமுண்டு
ஆசார ஒழுக்கமுடன் அன்பு நேம நிஷ்டையுடன்.
சிரத்தா பக்தியுடன் ஜகன்மாதா கவச மிதை
ஒருமனத்தோ டோதுவீரேல் மாபாவம் மறைவதுடன்.

அன்புருவாம் அம்மையை அகத்துள் உணர்ந்திடலாம்
மாதாவும் முன்வந்து மஹத்தான வரமருள
சொன்னபடி செய்து நீ ஸுகமடைவாய் மனமே கேள்.

(ஸ்ரீ புவனேச்வரி கவசம் நிறைவு பெற்றது.)

ஸ்ரீ புவனேச்வரி அஷ்டோத்தர சதநாமாவளி.

ஓம் ஹ்ரீம்	புவனேச்வர்யை	நம:	
ஓம் ஹ்ரீம்	ஏகார ரூபாயை	நம:	
ஓம் ஹ்ரீம்	பவாயை	நம:	
ஓம் ஹ்ரீம்	ஸர்வ மங்களாயை	நம:	
ஓம் ஹ்ரீம்	அஷ்டைச்வர்ய ப்ரதாயின்யை	நம:	
ஓம் ஹ்ரீம்	அம்பிகாபுர வாசின்யை	நம:	
ஓம் ஹ்ரீம்	ஸுப்ரஹ்மண்ய ஹ்ருதயாயை	நம:	
ஓம் ஹ்ரீம்	யோகி த்யேயாயை	நம:	
ஓம் ஹ்ரீம்	முனி ஸம்ஸேவ்யாயை	நம:	
ஓம் ஹ்ரீம்	வேதாந்தலக்ஷணாயை	நம:	10
ஓம் ஹ்ரீம்	நவார்ண மனுஸ்துதாயை	நம:	
ஓம் ஹ்ரீம்	வாக்பீஜ ஸ்வரூபிண்யை	நம:	
ஓம் ஹ்ரீம்	காமபீஜ ஹ்ருதயாயை	நம:	
ஓம் ஹ்ரீம்	பிந்துநாத ஸ்வரூபிண்யை	நம:	

ஓம் ஹ்ரீம்	ஷோடசபத்ர நிலயாயை	நம:	
ஓம் ஹ்ரீம்	த்ரிகோணமத்ய நிலயாயை	நம:	
ஓம் ஹ்ரீம்	வ்ருதத்ரய ஸ்வரூபிண்யை	நம:	
ஓம் ஹ்ரீம்	மங்கள கணேச ஜனன்யை	நம:	
ஓம் ஹ்ரீம்	ஸனகாதி முனிஸ் துதாயை	நம:	
ஓம் ஹ்ரீம்	சாந்தி ஸ்வரூபிண்யை	நம:	20
ஓம் ஹ்ரீம்	சிதம்பரசரீரிண்யை	நம:	
ஓம் ஹ்ரீம்	வைத்யநாத க்ருஹிண்யை	நம:	
ஓம் ஹ்ரீம்	ஏகாம்பர சரீரிண்யை	நம:	
ஓம் ஹ்ரீம்	கமலாலய வாஸின்யை	நம:	
ஓம் ஹ்ரீம்	பாண்ட்யராஜ ஸ்துதாயை	நம:	
ஓம் ஹ்ரீம்	மார்க்கண்டேய வரப்ரதாயை	நம:	
ஓம் ஹ்ரீம்	புண்டரீக புராதீசாயை	நம:	
ஓம் ஹ்ரீம்	பில்வவன ப்ரியாயை	நம:	
ஓம் ஹ்ரீம்	சிவதாண்டவ ஸாக்ஷிண்யை	நம:	
ஓம் ஹ்ரீம்	சிவப்ரஸாத ஸம்பன்னாயை	நம:	30
ஓம் ஹ்ரீம்	சிவசைல குமாரிகாயை	நம:	
ஓம் ஹ்ரீம்	சிவானந்த ரஸார்ணவாயை	நம:	
ஓம் ஹ்ரீம்	சிவாந்தப்புர வாஸின்யை	நம:	
ஓம் ஹ்ரீம்	சிவஸாம்ராஜ்ய தாயின்யை	நம:	
ஓம் ஹ்ரீம்	சிவானந்த ரஸாதாராயை	நம:	
ஓம் ஹ்ரீம்	சிவகௌர்யை	நம:	
ஓம் ஹ்ரீம்	சிவபோகதாயை	நம:	
ஓம் ஹ்ரீம்	ப்ரம்ம பூஜிதாயை	நம:	
ஓம் ஹ்ரீம்	திவ்யஸுந்தர்யை	நம:	
ஓம் ஹ்ரீம்	பத்மவாஸின்யை	நம:	40
ஓம் ஹ்ரீம்	வேதஸ்வரூபாயை	நம:	
ஓம் ஹ்ரீம்	குமாரஜனன்யை	நம:	
ஓம் ஹ்ரீம்	பிந்துஸ்வரூபிண்யை	நம:	
ஓம் ஹ்ரீம்	சரணாகத ரக்ஷணாயை	நம:	
ஓம் ஹ்ரீம்	அனுக்ரஹ ப்ரதாயை	நம:	
ஓம் ஹ்ரீம்	சந்த்ரலோக விபூஷிதாயை	நம:	
ஓம் ஹ்ரீம்	ஸர்வலோக வசங்கர்யை	நம:	

ஓம் ஹ்ரீம்	ஸுராஸுர நமஸ்க்ருதாயை	நம:	
ஓம் ஹ்ரீம்	மூலாதாரகதாயை	நம:	
ஓம் ஹ்ரீம்	ஸுஷும்னா த்வாரமயாயை	நம:	50
ஓம் ஹ்ரீம்	சதுர்வர்க்க பலப்ரதாயை	நம:	
ஓம் ஹ்ரீம்	ஆத்மாராமாயை	நம:	
ஓம் ஹ்ரீம்	பஞ்சதசாக்ஷர்யை	நம:	
ஓம் ஹ்ரீம்	பணிபூரக ஸுந்தராயை	நம:	
ஓம் ஹ்ரீம்	ஆதாரசக்தி ரூபிண்யை	நம:	
ஓம் ஹ்ரீம்	ஆர்த்தஜன ரக்ஷிண்யை	நம:	
ஓம் ஹ்ரீம்	ஆர்யகணஸ்துதாயை	நம:	
ஓம் ஹ்ரீம்	ஆர்யாவர்த்த நிவாஸின்யை	நம:	
ஓம் ஹ்ரீம்	ஆத்யந்த சிவரூபாயை	நம:	
ஓம் ஹ்ரீம்	அதிதத்வ ப்ரகாசாயை	நம:	60
ஓம் ஹ்ரீம்	ஸ்ரீவித்யா மந்த்ரரூபாயை	நம:	
ஓம் ஹ்ரீம்	சதுர்வேதாந்த வேத்யாயை	நம:	
ஓம் ஹ்ரீம்	ச்யாமளா பீடவாஸாயை	நம:	
ஓம் ஹ்ரீம்	மஹாமாயா ஸ்வரூபாயை	நம:	
ஓம் ஹ்ரீம்	ரத்னமந்திர வாஸாயை	நம:	
ஓம் ஹ்ரீம்	மல்லிகாதாம பூஷாயை	நம:	
ஓம் ஹ்ரீம்	மந்தாகினீ ஸ்வரூபாயை	நம:	
ஓம் ஹ்ரீம்	மௌக்திகாபல ஹாராயை	நம:	
ஓம் ஹ்ரீம்	சிவவாமாங்க ஸம்ஸ்த்தாயை	நம:	
ஓம் ஹ்ரீம்	கஜாஸ்ய குஹபாலின்யை	நம:	70
ஓம் ஹ்ரீம்	ஸம்ஸார ரோகநாசின்யை	நம:	
ஓம் ஹ்ரீம்	வீணாகான ப்ரவீணாயை	நம:	
ஓம் ஹ்ரீம்	கோணத்ரய நிவிஷ்டாயை	நம:	
ஓம் ஹ்ரீம்	மூலமந்த்ர ஸ்வரூபாயை	நம:	
ஓம் ஹ்ரீம்	சிதக்னிபூத தேஹாயை	நம:	
ஓம் ஹ்ரீம்	சிவசக்த்யைக்ய வேஷாயை	நம:	
ஓம் ஹ்ரீம்	சாச்வதைச்வர்ய ஸுகதாயை	நம:	
ஓம் ஹ்ரீம்	துஷாரகிரி நிவாஸாயை	நம:	
ஓம் ஹ்ரீம்	சிவமானஸ ஹம்ஸின்யை	நம:	
ஓம் ஹ்ரீம்	ஸ்வர்ணதாடங்க சோபிதாயை	நம:	80

ஓம் ஹ்ரீம்	தாடிமீ பீஜரதனாயை	நம:	
ஓம் ஹ்ரீம்	சங்க க்ரீவாயை	நம:	
ஓம் ஹ்ரீம்	வடபத்ரோதராயை	நம:	
ஓம் ஹ்ரீம்	ஹேமபூஷித விக்ரஹாயை	நம:	
ஓம் ஹ்ரீம்	ஸௌந்தர்யகுண ஸம்பூதாயை	நம:	
ஓம் ஹ்ரீம்	ஜாலந்தர மஹாபீடாயை	நம:	
ஓம் ஹ்ரீம்	பூர்ணகிரி பீடவாஸின்யை	நம:	
ஓம் ஹ்ரீம்	சதுஷ்ஷஷ்டி விநாசின்யை	நம:	
ஓம் ஹ்ரீம்	ஸர்வதோஷ விநாசின்யை	நம:	
ஓம் ஹ்ரீம்	மந்தஸ்மித முகாம்புஜாயை	நம:	90
ஓம் ஹ்ரீம்	கல்யாண நிலயாயை	நம:	
ஓம் ஹ்ரீம்	சுபலக்ஷண ஸம்பன்னாயை	நம:	
ஓம் ஹ்ரீம்	சுபஸௌபாக்ய நிலயாயை	நம:	
ஓம் ஹ்ரீம்	தக்ஷாத்வர விநாசின்யை	நம:	
ஓம் ஹ்ரீம்	ஸதாசிவ குடும்பின்யை	நம:	
ஓம் ஹ்ரீம்	ஸச்சிதானந்த லக்ஷணாயை	நம:	
ஓம் ஹ்ரீம்	சந்த்ரமண்டல வாசின்யை	நம:	
ஓம் ஹ்ரீம்	கலபாக்ஷிண்யை	நம:	
ஓம் ஹ்ரீம்	துரிதாபஹாயை	நம:	
ஓம் ஹ்ரீம்	ஸர்வ ஸ்வதந்த்ராயை	நம:	100
ஓம் ஹ்ரீம்	மதங்ககுல பூஷணாயை	நம:	
ஓம் ஹ்ரீம்	மதங்கமுனி ஸம்பூஷணாயை	நம:	
ஓம் ஹ்ரீம்	கதம்பாரண்ய நிலயாயை	நம:	
ஓம் ஹ்ரீம்	காமகோடி பீடஸ்த்தாயை	நம:	
ஓம் ஹ்ரீம்	மனோவாச மகோசராயை	நம:	
ஓம் ஹ்ரீம்	சரணாகத ரக்ஷிண்யை	நம:	
ஓம் ஹ்ரீம்	ஹ்ரீங்கார பீடஸ்த்தாயை	நம:	
ஓம் ஹ்ரீம்	ஹ்ரீங்கார சாந்தநிலயாயை	நம:	108
ஓம் ஹ்ரீம்	புவனேச்வர்யை	நமோநம:	

நாநாவிதபத்ர பரிமளபுஷ்பாணி ஸமர்ப்பயாமி

புவனேசீஅருச்சனை முற்றிற்று.

மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்

(ஸ்ரீ குமரகுருபரர் அருளியது)

பெருந்தேன் இறைக்கும் நறைக்கூந்தல்
பிடியே! வருக முழுஞானப்
பெருக்கே! வருக பிறைமௌலிப்
பெம்மான் முக்கட் சுடர்க்கிடுநல்
விருந்தே! வருக மும்முதற்கும்
வித்தே! வருக வித்தின்றி
விளைக்கும் பரமா னந்தத்தின்
விளைவே! வருக பழமறையின்
குருந்தே! வருக அருள் பழுத்த
கொம்பே! வருக திருக்கடைக்கண்
கொழித்த கருணைப் பெருவெள்ளங்
குடைவார் பிறவிப் பெரும்பிணிக்கோர்
மருந்தே! வருக பசுங்குதலை
மழலைக் கிளியே! வருகவே
மலயத் துவசன் பெற்றபெரு
வாழ்வே! வருக வருகவே.

ஜய ஜய ஸ்ரீ புவனேச்வரி

ஸத்குரு ஸ்ரீமத் சாந்தானந்த ஸ்வாமிகளின் அருளுரை
(இதனை அன்பர்கள் படித்து சிந்தித்து, வாழ்ந்து நல்வாழ்வு பெறவேண்டும்)

1. ஏ மனமே! தெய்வபக்தியுள்ளவனுக்கு எல்லாம் கிடைக்கும்.
2. ஏ மனமே! சான்றோர் செயல் அனைத்தும் உலகுக்கு உபகாரமாகவே இருக்கும்.
3. ஏ மனமே! அடக்கமாயிரு! அனைவரும் பாராட்டுவார்கள்.

4. ஏ மனமே! நீ நன்மைபெற, நல்லதையே செய்துவா.
5. ஏ மனமே! சோம்பேறி என்றும் சுகப் படமுடியாது.
6. ஏ மனமே! நல்லறம் செய்பவனே நன்மனிதனாவான்.
7. ஏ மனமே! பொருளை விரும்பாதே, அருளை விரும்பு.
8. ஏ மனமே! அன்பில்லாதவனிடம் அந்தஸ்து நில்லாது.
9. ஏ மனமே! அன்புள்ளவனுக்குப் பகைவன் இருக்கமாட்டான்.
10. ஏ மனமே! நல்லவன் பிறர்பெருமைகளை மட்டுமே பேசுவான்.
11. ஏ மனமே! முதலில் உன் மனதை அடக்கப்பழகு. பிறரைப் பற்றி பிறகு பார்க்கலாம்.
12. ஏ மனமே! கபட எண்ணமுள்ளவனுக்கு மன அமைதி இராது.
13. ஏ மனமே! மனம் கடவுளையே நினைத்தால், கடவுளை எங்கும் காணலாம்.
14. ஏ மனமே! திரிகரண சுத்தியுடன் கடவுளை சரணடைந்துவிடு (மனம்மொழிமெய்)
15. ஏ மனமே! உடலைப் பாராதே: எல்லோருடைய உள்ளத்தைப் பார்.
16. ஏ மனமே! உனது குறிக்கோள் கடவுளிடமே இருக்கட்டும்.
17. ஏ மனமே! நாவை அடக்கு மற்றவை தானே அடங்கும்.
18. ஏ மனமே! உன்னைக் கெடுப்பதும் உன் மனமே! ஜாக்கிரதை.
19. ஏ மனமே! ஆசைகளுள்ளவன் வாழ்க்கை நரகமாகிவிடும்.
20. ஏ மனமே! கடலைநோக்கிச் செல்லும் நதிபோல் உன்மனம் கடவுளைநோக்கிச் செல்லட்டும்.
21. ஏ மனமே! தெய்வத்தை நம்பு, உனக்கு நல்வாழ்வு கிட்டும்.
22. ஏ மனமே! தனது சுகத்துக்காக பிறரை வற்புறுத்துவது பாவமாகும்.
23. ஏ மனமே! நீ காணும் ஜீவன்களையெல்லாம் சிவமாகக் கண்டுவா நீயும் சிவமாகி விடுவாய்.
24. ஏ மனமே! உன்னைப் போற்றுபவனும், தூற்றுபவனும் கடவுளேதான் என்று எண்ணிவிடு.
25. ஏ மனமே! தெய்வத்தைப்பற்றி பேசிக்கொண்டிராதே, தெய்வ வழிபாட்டில் மூழ்கிவிடு.

வாழ்த்து

வாழ்கவே வாழ்க! என்நந்தி திருவடி
வாழ்கவே வாழ்க! மல மறுத் தான்பதம்
வாழ்கவே வாழ்க! மெய்ஞானத்தவன்தாள்
வாழ்கவே வாழ்க! மலமிலாதான் பாதமே. (குருமூர்த்தி)

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதுஎல்லாம் அரன் நாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே. (திருஞானசம்பந்தர்)

வான்முகில் வழாது பெய்க மவளம் சுறக்கமன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலாதுயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க, நற்றவம் வேள்வி மல்க,
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.
(தெய்வச்சேக்கிழார்)

ஆறிரு தடந்தோள் வாழ்க, ஆறுமுகம் வாழ்க வெற்பைக்
கூறுசெய் தனிவேல் வாழ்க, குக்குடம் வாழ்க, செவ்வேள்
ஏறிய மஞ்ஞை வாழ்க, யானை தன்அணங்கு வாழ்க
மாறிலா வள்ளி வாழ்க, வாழ்க சீர் அடியா ரெல்லாம்.
(கச்சியப்ப சிவாசார்யர்)

மழை வழங்குக, மன்னவன் ஓங்குக,
பிழையில் பல்வளம் எங்கும் பெருகுக,
தழைக அஞ்செழுத்து ஓசை தரையெலாம்
பழைய வைதிக சைவம் பரக்கவே. (கோயிற்புராணம்)

வைய நீடுக மாமழை மன்னுக.
மெய் விரும்பிய அன்பர் விளங்குக.
சைவ நன்னெறி தாந்தழைத் தோங்குக.
தெய்வ வெண்திரு நீறு சிறக்கவே.

வாழ்க சைவம்! திருச்சிற்றம்பலம்! வாழ்கசீரடியாரெல்லாம்!

உ

ஸ்ரீகுருப்யோநம:

சென்னை-சிவத்திரு. வி. சோமசேகர சிவாசார்யார் தொகுத்து வெளிவந்துள்ள ஸமய நூல்களை ஆஸ்தீக அன்பர்கள் வாங்கிப் பயனடையவும்

---

1. விபூதி மகிமை (கையிருப்பு இல்லை)
2. உருவத்தில் இறைவன் (கையிருப்பு இல்லை)
3. நவராத்ரிதேவியர் துதித்திரட்டு (கையிருப்பு இல்லை)
4. நூதனாலய பஞ்சஸம்ஸ்காரவிளக்கம் (கையிருப்பு இல்லை)
5. ஆலயாகார அர்த்தவிவரணம் (கையிருப்பு இல்லை)
6. காக்கும் காளியின் காருண்ய மஹிமை (கையிருப்பு இல்லை)
7. சைவாகமத்தில் சிவயோகநெறி (தமிழில் 100 பக்கம்) ரூ.100/–
   (சிவயோகப் பயிற்சிசெய்யும் விதிமுறைகள், அதன் எட்டு உறுப்புக்கிரியைகள்,செய்முறைகள்,ஆகமச்சான்றுகளுடன் விளக்கும் நூல்)
8. திவ்யாபிஷேக விதி (தமிழில் 136 பக்கம்) ரூ.150/–

   (தெய்வங்களுக்கான திருமஞ்ஜன விதிமுறைகள், அபிஷேகத்தின் பொருட்கள், இலக்கணங்கள், 36 வகைகள், பயன்கள் இவற்றை ஆகம சான்றுடன் விளக்கும் நூல்.)
9. புஷ்ப்பார்ச்சன விதி (தமிழில் 124 பக்கம்) ரூ.150/–

   (இறைவழிபாட்டிற்கு ஏற்ற 200 மலர்வகைகள், காலங்களுக்கு உரியவை, மலர்களின் சேமிப்புமுறை, பயன்பாட்டுமுறை, மலர்வகைகளின் பயன்கள் இவற்றை சான்றுடன் விளக்கும் நூல்)
10. உத்ஸவபேதக் கிரியாபோதம் (தமிழில் 172 பக்கம்) ரூ.300/–

    (சைவாலய விழாவகைகளின் செயல்முறைகள். பெருவிழாவின் 24 வகைகள், விழாக்கிரியைகள், தெய்வப்புறப்பாட்டுமுறை, ஹோமபலிதான முறைகள், விழாக்கால பரிஹாரக்கிரியைகள் இவற்றை சான்றுகளுடன் விளக்கும் ஆய்வுப்புத்தகம்)

11. நக்ஷத்திர சாந்தி விதானம் (தமிழில் 300 பக்கம்) ரூ.600/–

(27 நட்சத்திரங்களின் பரிஹார சிறப்புஹோமங்கள், சாந்தி விதிமுறைகள், பிறந்தநாளில் செய்யத்தக்க வழிபாட்டுவகைகள், தானவகைகள் இவற்றை சான்றுகளுடனும், விஷயங்களை அட்டவணையில் விளக்கும் ஆய்வுப்புத்தகம்)

12. ஹோம லக்ஷண ஸங்கிரஹம் (தமிழில் 326 பக்கம்) ரூ.300/–

(இறைவேள்விகளின் இலக்கணங்கள், 36வகையில் அக்னியின் உருவப்படங்கள், யாகசாலைகள், குண்டங்கள், 16வகைஹோமங்கள், ஹோமப்பொருட்கள், ஹோமகாலத்திய பரிஹாரக்கிரியைகள் இவற்றை சான்றுடன் விளக்கும் ஆய்வுப்புத்தகம்)

13. புவனேச்வரீ பூஜாகல்பம் (தமிழில் 175 பக்கம்) ரூ.300/–

(தேவீஉபாசனாமுறை, தத்துவவிளக்கம், புவனேச்வரீபூசையின் செய்முறை, ஸ்ரீசக்ரதேவிகளின் அரியபல துதிகள், பலவகை நாமார்ச்சனைகள், அடங்கிய வீட்டுப்பூசைக்கான நூல்.)

14. சிவாகம கட்டுரைத் திரட்டு (பாகம் 13) (தமிழில் 136 பக்கம்) ரூ.200/–

(சைவாகமங்களில் ஆறுஅறிஞர்களின் ஆறுதலைப்புகளைப் பற்றிய சான்றுடன் கூடிய 6 சிறப்புக்கட்டுரைகளின் தொகுப்புத்தமிழ்நூல் வரிசையில்1)

15. சண்டீயாக மஹிமை விளக்கம் (தமிழில்) ரூ.300/–

(சண்டீதேவியின் மஹிமைகள், சண்டீயாக வகைகள், சண்டீஹோமத்திற்கான பொருட்கள், செய்முறைகள், சண்டீதுர்கையின் அரியபல துதிகள், பலவகை நாமார்ச்சனைகள் அடங்கிய தமிழ்நூல்)

16. திவ்ய ஸ்தவ கதம்பம் (பக்கம்–150) ரூ.200/–
(தமிழ்.& கிரந்தஎழுத்தில்) (தெய்வத்துதித் திரட்டு)

கிரந்தஎழுத்தில் மூலமானதுதிகளும், அவைக்கு சமஸ்கிருதம் மற்றும் தமிழ் இருமொழிகளில் பதவுரையும் கொண்டுள்ள 200 துதிகள் உள்ளநூல்.

17. காளீ பூஜா ப்ரபாவம் (பக்கம்–380) ரூ.450/–
(காளீ வழிபாட்டுப் பெருமைகள்)

காளீஉபாஸனை முறை, உருவதத்துவ விளக்கம், ஆலயபூஜை விதிமுறைகள், 1008,300,108, நாமாவளிகள், துதிகள், யந்திரபூஜைமுறைகள் அடங்கிய நூல்.

18. சுபாஷித ரத்னமாலா – நற்கூற்று மணிமாலை ரூ.400/–
(மூலமும் – உரையும் முற்றிலும். தமிழ்எழுத்தில்)
இராமாயணம், மஹாபாரதம், ஸ்மிருதிகள், புராணங்கள், காவியங்களிலிருந்து தொகுக்கப்பட்ட 1008 நீதிசாஸ்த்திர உபதேச நல்மொழிகளை கருத்துரையுடன் கொண்டுள்ளநூல்.

19. சிவாகம ஸூக்தி மஞ்ஜரீ (சிவாகம நல்மொழிப் பூங்கொத்து) ரூ.200/–
சைவாகமங்களில் அனைவரும் அறியவேண்டிய நல்மொழிகளை, தனித்தனி தலைப்புகளில் தமிழில் மூலசுலோக சான்றும் அவைக்கு தமிழில்கருத்துரையும் கொண்ட 324 தருமங்களின் தொகுப்புநூல்.

20. சைவ நிர்வசனவசனாமிருதம். (பக்கம்–114) ரூ.200/–
(சைவாகம பரிபாஷைச் சொற்பொருள் விளக்கம்) (தேவநாகரீ மட்டும்)
அரியசொற்களுக்கு பெயரின் சான்றுடன் காரணவிவரங்களைக் கூறும்நூல்.

21. சிவஸ்தோத்ர முக்தாவளீ (கிரந்தலிபி) (பக்கம்–104) ரூ.100/–
சிவத்தோத்திரங்களின் தொகுப்பு

22. ஸ்ரீநவதுர்கா (ஜபவிதி) நாகரம் & தமிழ் – ரூ.100/–

23. பிரத்யங்கிரா ஹோமக்ரமம் – (நாகரம் மற்றும் கிரந்தம் (பக்கம்–50) ரூ.100/–
கவசம், மூலமந்திரம், ஹஸ்த்ரமந்திரம், ஜபவிதி, ஹோமக்ரமம் அடங்கியது.

24. சிவசக்தி ஸ்தோத்ரமாலா. தேவநாகரி (பக்கம்–320) ரூ.200/–
க்ஷேத்திரசிவலிங்க மாஹேச்வரமூர்த்திகள் மற்றும் பரிவாரதெய்வங்களின்
துதிகளுடனும், தமிழ்உரையுடன் கூடிய சிவமஹிம்ன துதிகளுடனும் உள்ளது.

25. பத்ரகாளீ தீபபூஜையும் தேவீபாராயண துதிதிரட்டும்.
(தமிழ்) (பக்கம்–160) ரூ.150/–

26. பிரத்யங்கிரா ஸபர்யா ஸர்வஸ்வம் (நாகரலிபி)
தேவீபிரத்யங்கிரா பைரவர் முதலான தெய்வங்களின், மந்திரங்கள்,
புரச்சரணவிதிகள், யந்திரம், பூஜை, யாகம் செய்முறைகள்,
அஷ்டகர்மபிரயோக விதிகள், கவசஸஹஸ்ர நாமதுதிகள்
பிரார்த்தனைகளை உள்ளடக்கியது. (பக்கம்–560) ரூ.600/–

27. பிரத்யங்கிரா சகஸ்ரநாமாவளி–(நாகரலிபி மற்றும் கிரந்தலிபி) (பக்கம்–148) ரூ.200/–
(காளிதுதி, 108 நாமாவளிகள், பைரவிதுதி, 108 நாமாவளிகள்,
பிரத்யங்கிரா தேவியின் ஸகஸ்ரநாமாதுதிகள், 1000 நாமாவளிகள், கவசம்,
மூலமந்திர ஜபவிதிகள் அடங்கியது.)

28. கோயில்விழாக்களின் வாஹனஉலா (ஆலய உத்ஸவ வாஹன யானக்ரமம்)
ஒன்பது வகைக் கோயில்களின் தெய்வவிழாவின் வீதி உலா புறப்பாட்டு
விதிமுறைகள், ஸேவாகாலத் திருமுறைத்துதிகள், 50வாஹன
விளக்கப்படங்கள் அடங்கிய நூல்) (பக்கம்–256) ரூ.400/–

29. தேர்பவனிப் பெருமை (ரதோத்ஸவ மஹிமா) (தமிழ்) (பக்கம்–176) ரூ.300/–
சிவதுதிகள், ஆலயவிழாக்கள், தேரின் உருவவகைகள்,
தெய்வாம்சங்கள், சடங்குகள், 12 தெய்வங்களின் தேர்பவனிப் பெருமைகள்,
சேவைப்பயன்கள், இவற்றை விளக்கும் நூல்.

30. ஆகமம் ஆலயம் ஆதிசைவர் (பாகம்–2) – சைவாகம மரபுசார்ந்த
ஐயத்தெளிவுதரும் வினாவிடைகளின் தொகுப்பு நூல்.

யந்திர செப்புத் தகடுகள்

ஆலயதேவதா ப்ரதிஷ்டாயந்திர தகடு ஒன்று கிரந்தஎழுத்தில் ரூ.1000/–
(சைவ, வைணவக் கோயிலின் தெய்வச்சிலைகளுக்கான ஆகம பிரதிஷ்டைக்கான தகட்டு யந்திரங்கள், தாமிரக்தகட்டில்அளவு இஞ்ச் 3 x 3 அல்லது 5 x 5 ல் ஆகமவிதிமுறைப்படி எழுதியவை, உரிய மந்திரவகைகளுடன் கூடியவை உரியவைக்கு மட்டுமே கிடைக்கும்.

ஸ்ரீ மீனாக்ஷி கல்யாண சுந்தரேச்வரர்

ஹாலாஸ்ய நாதாய நமஸ்சிவாய.
ஹாலாஹலா லங்க்ருத கந்தராய.
மீனேக்ஷனாயா: பதயே சிவாய.
நமோ நமஸ் சுந்தர தாண்டவாய.

நூல் தொகுப்பாசிரியர்

சிவஸ்ரீ. வி. சோமசேகர சிவாசார்யார் M.A.,

சென்னை, மஹரிஷிவேதாகம பாடசாலையின் முன்னாள் ஆகம பண்டிதரும், மகாபலிபுரம் அரசினர் கோயில் கட்டிடக்கலை & சிற்பக்கலைக் கல்லூரியின் முன்னாள் ஆகமவிரிவுரையாளரும், கும்பாபிஷேகங்கள், ஆகமகருத்தரங்குகள், விசேஷயாகங்கள் பலவற்றை பலமுறை தலைமைஏற்று நிகழ்த்தியவரும், கனடாவில் இந்துக்கோயிலின் முன்னாள் தலைமைஅர்ச்சகரும், பாடசாலைகளின் ஆண்டுத்தேர்வுகளில் பலமுறை பரீக்ஷாதிகாரியாக பணியாற்றியவரும், போதகராகி பலமாணவர்களை உருவாக்கியவரும், சைவநெறி தழைக்கத் தொண்டாற்றி வருபவரும், சென்னையில் மாதாந்திர சிவாகம சிறப்புச் செற்பொழிவு நிகழ்ச்சிளைத் தொடர்ந்துநடத்தியும் பல சிறுவிளக்க நூல்களை வெளியிட்டும் வருபவர்.